மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை (13.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 321

# அரசுக்கு எதிரான கூட்டணியில் 24 அமைச்சர்கள் இணைவர்

## ஐ.தே.கட்சித் தரப்புத் தகவல்

கொழும்பு, ஒக்ரோபர் 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியால் கடும் அதிருப்தியுற்ற அமைச்சர்கள் 24 பேர் ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்படவுள்ள பொதுக்கூட்டமைப்பில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

இதுதொடர்பாக அந்த அமைச்சர்களுடன் பேச்சுகள் நடத்தப்படுகின்றன என்றும் விரைவில் அவர்கள் கூட்டமைப்புடன் இணைந்துகொள்வர் என்றும் அக்கட்சி மேலும் தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. பாலித ரங்கே பண்டாரவே இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளுடன் (19 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் -II, வரலாறு-I பாடங்களுக்கான மாதிரி வினாத் தாள்கள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வணிகக் கல்வியும் கணக் கீடும் +I ,II, பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## தீவகத்துக்கு மேலும் 657 பேர் வந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 13

வவுனியாவில் இருந்து தீவகத்தைச் சேர்ந்த மேலும் 174 குடும்பங்களைச் சேர்ந்த 657 பேர் நேற்று அழைத்து வரப்பட்டனர்.

யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினால் அழைத்து வரப்பட்ட அவர்கள் வேலணை, காரைநகர் பிரதேச செயலர்களிடம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாநகரசபை முதல்வராக யோகேஸ்வரி

## ஜனாதிபதி முன்னிலையில் நேற்று மாலை பதவிப்பிரமாணம்

கொழும்பு, ஒக். 13

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வராக யோகேஸ்வரி பற்குணராசா நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

அத்துடன், யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வராகத் துரைராசா இளங்கோவும் தெரிவான ஏனைய உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

யாழ். மாநகரசபையின் முதல்வராகத் தாம் சில மாதங்களுக்கு முன்னர் தெரிவுசெய் யப்பட்ட போதிலும் தமது சத்தியப்பிரமாண நிகழ்வு பிற்போடப்பட்டமைக்கான காரணத்தை அதன்போது திருமதி பற்குண ராசா யோகேஸ்வரி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தவை வருமாறு:-

எமது சகோதர இனமான முஸ்லிம் மக்கள் 1990ஆம் ஆண்டு(20 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.மாநகர சபையின் முதல்வராக பதவியேற்ற திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவுக்கு ஜனாதிபதி கைலாகு கொடுத்து மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

## விடுதலைப்புலிகளை மீண்டும் தலையெடுக்க விடாதீர்கள்

### பொன்சேகா படையினருக்கு அறிவுரை



கொழும்பு, ஒக்.13

• மிகுந்த அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் இந்நாட்டை ஆட்கொண்டிருந்த பயங்கரவாதம், இராணுவ ரீதியில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்காத வகையில் நீங்கள் எதிர்காலத்தில் செயற்பட வேண்டும்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படையினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 60ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை கௌரவிக்கும் வகையிலான இராணுவ அணிவகுப்பு மரியாதை கொழும்பு இராணுவத் தலைமையக மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

40 இராணுவ அதிகாரிகள், 1,700 படையினர் ஒன்றிணைந்து நடத்திய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட கூட்டுப்படைகளின்(20 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் விரைவில் தேர்தல்களை நடத்தி ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவோம்

### குடாநாட்டில் இருந்து சென்ற யாழ்.பிரஜைகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலையும் வடக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்த உள்ளோம். அந்தப் பிரதேச மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தேர்தலை நடத்த ஏற்பாடு செய்து, வருகிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பிரஜைகளுடன் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலில் இதனை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## முகாமிலிருந்து வெளியே வர எமக்கு உதவுங்கள்;

### தமிழகக் குழுவிடம் வன்னி அகதிகள் கண்ணீர் மல்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக். 13

வவுனியாவின் மெனிக் பார்ம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள வன்னி அகதிகள் தங்களை அங்குள்ள மோசமான நிலையிலிருந்து விடுவிக்குமாறு முகாமுக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ்நாடு எம்.பிக்களிடம் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை மெனிக் பார்ம் முகாமுக்குத் தமிழக எம்.பிக்கள் சென்றவேளையே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மெனிக் பார்ம் முகாமில் உள்ள மக்கள் கடும் தண்ணீர் பற்றாக்குறை குறித்து தமி ழக எம்.பிக்களிடம்முறையிட்டுள்ளனர்.

ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு நாளாந்தம் 30 லீற்றர் தண்ணீர் மாத்திரமே(19 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக எம்.பிக்கள் குழு இன்று ரணிலுடன் பேச்சு

கொழும்பு, ஒக். 13

இலங்கை வந்துள்ள தமிழக எம்.பிக்கள் தூதுக்குழு இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு - 07, கேம்பிரிஜ் டெரஸில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று (19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உலகத்தை ஏமாற்றுவதற்கே தமிழகக் குழு இலங்கை விஜயம்

## வைகோ. கடும் சீற்றம்

சென்னை, ஒக். 13

முள்வேலி முகாம்களில் அவதிப்படும் ஈழத் தமிழர்களின் மனித உரிமை அவலங்களை மூடி மறைக்கவும், உலகத்தை ஏமாற்றவுமே தமிழக எம்.பிக்கள் குழு இலங்கை சென்றிருப்பதாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குழுவால் ஈழத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்றும் இக்குழுவின் பயணம் ஒரு கண்துடைப்பு நாடகம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தின. சென்னையிலும் வழக்கறிஞர்கள் அறப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தி தமிழக அரசு அந்த அறப்போராட்டத்தை ஒடுக்கியது.

இலங்கையில் நடைபெற்ற போரை நிறுத்தவேண்டும் என்று உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தின. தமிழக சட்ட மன்றத்திலும் இந்தக் கோரிக்கையை முன்வைத்து தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்திய அரசு ஒப்புக்காகக்கூட போரை நிறுத்தவேண்டும் என்று கூறவில்லை.

ஏனென்றால், அந்தப் போரை நடத்தியதும், போருக்குத் திட்டமிட்டதும், போரை வழிநடத்தியதும் இந்தியாதான். ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவரின் சாவுக்கும் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுதான் பொறுப்பாகும்.

யுத்தத்தை நிறுத்தக் குரல் கொடுக்காத மத்திய அரசு, தற்போது ஈழத் தமிழர்களின் ரத்தம் தோய்ந்த கரத்தையுடைய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று தமிழக எம்.பிக்களின் குழுவை இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளது.

போருக்குப் பிறகு ஐ.நா. பார்வையாளர்களும், சர்வதேச பொதுமன்னிப்புச் சபையும் முள்வேலி முகாம்களில் உள்ள தமிழர்கள் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

முள்வேலி முகாம்களில் அவதிப்படும் ஈழத் தமிழர்களின் மனித உரிமை அவலங்களை மூடி மறைக்கவும், உலகத்தை ஏமாற்றவும் இப்போது தமிழக எம்.பிக்கள் குழு இலங்கை சென்றிருக்கின்றது.

இவர்களை அங்குள்ள அனைத்து முகாம்களுக்கும் செல்ல சிங்கள அரசு அனுமதிக்கப் போவதில்லை. இந்தக் குழுவின் பயணத்தால் ஈழத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. இக்குழுவின் பயணம் ஒரு கண்துடைப்பு நாடகம். - என்றார்.

### ஓய்வூதியப் புத்தகங்கள் செயலகத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 13

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு இவ்வருடம் விண்ணப்பித்த 850 பேரின் பாஸ் புத்தகங்களும் உறுதிகளும் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(1-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கல்வி பயிலும் திரு.திருமதி சத்தியலோகேஸ்வரன் (சிவா) - கமலாதேவி தம்பதியினரின் செல்வப் புதல்வன் ச.லிங்கேஸ்வரன் 2009 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு அவர் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று வாழ விநாயகப் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மம்மா(கு.தங்கம்மா), அம்மப்பா (ம.குருநாதபிள்ளை), பெரியன்ரி (கு.ரேவதி) ஜேர்மனியில் வசிக்கும் சின்னமாமா, மாமி, மச்சாள், மச்சான் (கு.நந்தகுமார், மாலதி, சௌமியா, சந்துஜன்), குட்டிமாமா (கு.விமலதாஸ்) பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார் (வி.ஜெயபாலன், றதி, நிதர்சன், நாவேந்தன்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## போதகர்களுக்கான விசேட கருத்தரங்கு

வைத்திய கலாநிதி லலித் மென்டிஸ்

இடம் :- அசெம்பிளி ஒவ் கோட் சபை, யாழ்ப்பாணம்.

காலம் :- 15.10.2009

நேரம் :- மு.ப 10 மணி - பி.ப 2 மணி

*சபை போதகர்களும் , ஊழியர்களும் மட்டும் கலந்து கொள்ளவும்.*

கௌரவ காரியதரிசி,
யாழ்.மாவட்ட போதகர் ஐக்கியம்.

(561677)

## பணியாளர்கள் தேவை

கிறிஸ்தவ ஸ்தாபனமொன்றிற்கு விடுதியில் தங்கியிருந்து பணியாற்ற ஆள்கள் தேவை.

1. சமையல் பணியாளர் - (பெண் 30- 50 வயது)
2. குழந்தை பராமரிப்பவர் - (பெண் 20 - 30 வயது)

ஆர்வமுள்ள கிறிஸ்தவர்கள் தொலைபேசி இலக்கங்கள் 021 3211353, 021 3214503 உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி.

(89833)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி

(ஓய்வு பெற்ற அதிபர், கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயம்)



கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி (11.10.2009) ஞாயிறு அன்று காலமானார்.

அன்னார் சின்னப்பொடியன் நல்லதம்பி (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் அமரர் குகானந்தி மற்றும் ஆனந்தகுமார் (ஜேர்மனி), அருட்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சூரியஜீவன் (கனடா), சுபாசினி (ஜேர்மனி), சாம்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தில்லைநாதர் (ஓய்வுபெற்ற விலை மதிப்பீட்டாளர்), செ.இராஜேஸ்வரி (தேவி தொலைத்தொடர்பு நிலையம்), சாந்தலிங்கம்(சவூதி), தே.யோகேஸ்வரி(வேதம்), கணேசதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் கணபதி மற்றும் சரவணமுத்து, வைரமுத்து, இளையதம்பி, சின்னாச்சி, வள்ளியம்மை, அமரர் முத்து, கந்தையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 11, 3 ஆம் குறுக்குத்தெரு,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

தகவல் : சி.நல்லதம்பி (கணவர்)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை தர்மரத்தினம்



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் தற்போது 388/7, நாவலர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தர்மரத்தினம் நேற்று (12.10.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: த.நந்தகுமார் (மருமகன்).

588/7, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

### நடராசா பராசக்தி



கொக்குவில் மேற்கு, புதுவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பராசக்தி நேற்று (12.10.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மனோன்மணி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி. பொன்னம்பலத்தின் மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், கமலாம்பிகை, ஞானகரியன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரசாமி காலஞ்சென்றவர்களான நடராசா, வினாயகமூர்த்தி, கனகசபாபதி, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரெட்ணராஜா (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்), ராதை (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், விதுர்ஷன் (சுவிஸ்), கிருசிகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.10.2009) அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*புதுவீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*தொ. பே. 021 2223613* (89832)

தகவல்: ஞானசூரியன் மகன் (சுவிஸ்)
நவரெட்ணராஜா (மருமகன்)
(பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்),

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு தங்கமுத்து



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தங்கமுத்து நேற்று (12.10.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், மகேஸ்வரி, பரமேஸ்வரி, செல்லத்துரை, இராசதுரை காலஞ் சென்ற நகுலேஸ்வரி மற்றும் இராசராணி, புஸ்பராணி, நளினிகலா, தயாபரன், செல்வராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் நாகேஸ்வரி, இராசதுரை, மகாலிங்கம், சத்தியபாமா, காந்திநாதன், துரைராஜா, தவராஜா, செல்வராஜா, செல்வராணி, யோகராணி, மதிலா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.10.2009 செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.செல்லத்துரை
(மகன் - சோபனா நகை மாடம்).

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

(8934)

யாழ் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு, கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப்பொருட்கள், உடுபுடவைகள், மற்றும் VCD பிரதிகள், CD க்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்
TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06
தீபாவளி திருநாளை முன்னிட்டு! மாபெரும் விசேட விலைக்கழிவு!
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
இப்பொழுது வடமராட்சியிலும்
லண்டன்,ஜேர்மனி
1 Kg 1300/=
4 நாட்களில் அவர்களது இல்லங்களில்
259,கே.கே.எஸ். வீதி ... டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ... வீதி, திருநெல்வேலி. (ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசுத் தரப்பின் அரசியல் வியூகத்தை மாற்றச் செய்திருக்கும் தெற்குத் தேர்தல்

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தென்மாகாண சபைத் தேர்தலில் தமக்குப் பெரு வெற்றி கிட்டியிருக்கின்றது என ஆளும் தரப்பு வெளியில் பெரிதாகப் பீற்றிக் கொண்டாலும், அந்த முடிவுகள் ஒருவகையில் அத்தரப்பினருக்கு எதிர்பாராத அதிர்ச்சியைத் தந்து நிற்கின்றன என்பதே வெளிப்படாத உண்மையாகும்.

தென்மாகாணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்தப் பிரதேசம். விடுதலைப் புலிகள் இயக்கத்தை அடியோடு அழித்து விட்டோம் என்று மார்தட்டி வெற்றிப் பெருமிதத்தில் அரசுத் தலைமை நனைந்திருக்கையில், இத் தேர்தல் - அதுவும் ஜனாதிபதியின் சொந்த மாகாணத்தில் - நடத்தப்படுவதால், அதில் சரித்திர சாதனை படைக்கும் வெற்றி தமக்குக் கிட்டும் என்றே அரசுத் தலைமையும் ஆளும் தரப்பு ஆதரவாளர் அணியும் எண்ணின. யுத்த வெற்றியின் காரணமாக ஜனாதிபதியின் செல்வாக்கு உச்சக் கட்டத்தில் உள்ளதாக எடைபோட்ட அத்தரப்புகள் அதன் காரணமாக இந்தத் தேர்தலில் எண்பது வீதத்துக்கும் மேலான வாக்குகளைச் சுவீகரித்து வரலாற்று சாதனை நிகழ்த்தப்படும் என மனக் கணக்குப் போட்டன. ஜனாதிபதியின் சொந்தத் தேர்தல் மாவட்டமான ஹம்பாந்தோட்டையில் குறைந்த பட்சம் தொண்ணூறு வீத வாக்குகளை ஈட்ட முடியும் என்றும் கூட எதிர்பார்ப்பு ஆளும் தரப் பால் வெளிப்படுத்தப்பட்டது. எனினும், நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லையே.........?

தேர்தல் நடந்த தென்மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலுமே மொத்தமாக 67.88 வீத வாக்குகளையே ஆளும் தரப்பால் சுவீகரிக்க முடிந்தது. அதுவும் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஹம்பாந்தோட்டையில்தான் அரசுத் தரப்புக்குக் கிடைத்த வாக்கு வீதம் குறைவாகும். காலியில் 68.34 வீதத்தையும், மாத்தறையில் 67.97 வீதத்தையும் பெற்ற அரசுத் தரப்புக்கு ஹம்பாந்தோட்டையில் 66.95 வீதமே கிடைத்துள்ளது.

அடுத்தடுத்து, தேர்தல் தோல்விகளில் துவண்டு வரும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், தென்மாகாணத் தேர்தலுடன் நிரந்தரமாகப் படுத்துவிடும் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆரூடமும் கூறினர். எனினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் மற்றொரு எதிர்க்கட்சியான ஜே.வி.பி.ஆகியவை வலுவாக உள்ள தென்மாகாணத்தில் சுமார் 25 வீத வாக்குகளைப் பெற்று ஆறுதல் படும் நிலைமையை ஐ.தே.க. எட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சம். தேர்தலில் ஆளும் தரப்புக்குக் கடும் போட்டியைத் தரும் தனது உறுதிப்பாட்டிலிருந்து ஐ.தே.க. விலகிவிடவில்லை என்பதையே இந்த முடிவு காட்டுகின்றது.

அரசுத் தலைமை எதிர்பார்த்த அமோக வெற்றியை - அல்லது முழுத் திருப்திதரும் வெற்றியை - தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தராததால், அடுத்த அரசியல் காய் நகர்த்தல்கள் தொடர்பாக ஆளும் தரப்பின் மனதில் இருந்த திட்டமும் இப்போதைக்கு மாற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருட முற்பகுதியிலும், பொதுத் தேர்தலை மார்ச்சிலும் நடத்துவதையே அரசுத் தலைமை இதுவரை தனது உத்தேசமாகக் கொண்டிருந்தது.

ஆனால், தென்மாகாண சபைத் தேர்தலில் எதிர்பார்த்த - மிக உறுதியான - பெரு வெற்றி தனக்குக் கிட்டாததால், ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்தும் ஆபத்தை முன்னெடுப்பதற்கு அரசுத் தலைமை இப்போது பின்னடிப்பதாகக் கூறப்படுகின்றது.

தென்மாகாணத்திலேயே எதிர்பார்த்த வெற்றி கிட்டாத நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கும், கிழக்கும் சேர்ந்து அரசுத் தரப்பை வாரிவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் ஆளும் தலைமையிடம் நீடிக்கின்றது எனக் கூறப்படுசின்றது.

போதாக்குறைக்கு ஜனாதிபதித் தேர்தலைத் தாம் முற்கூட்டியே நடத்தினாலும், அதில் வெற்றியீட்டிய பின், தற்போதைய பதவிக் காலத்தின் எஞ்சிய பகுதியில் ஆட்சியில் நீடித்து விட்டு, அதன்பின் தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பிக்கலாம் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணத்திலும் இப்போது மண் விழுந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

தமது தற்போதைய பதவிக் காலம் முடிய முன்னரே - முற்கூட்டியே - ஜனாதிபதித் தேர்தலைத் தாம் நடத்தி அதில் வெற்றியீட்டினாலும் அந்த வெற்றி பெற்ற நாளிலிருந்து ஆறு வருடங்கள் மட்டுமே அவர் அதன்மேல் பதவி வகிக்க முடியும் என்றே உயர்நீதிமன்றம் தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு வியாக்கியானம் கொடுக்கும் என்று நாட்டின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதுவும், ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தும் தமது உத்தேசத் திட்டத்தை மஹிந்த ராஜபக்ஷ விடுத்து, பொதுத் தேர்தலை நடத்தும் வியூகத்தை அமைக்க அவரை நெட்டித்தள்ளியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் தென்மாகாணத் தேர்தல் முடிவுகள் அரசுத் தரப்பின்'தேர்தல் உத்தித்' திட்டத்தில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்த வைத்திருப்பதாகவே தோற்றுகின்றது.

# குடாநாட்டுக்குத் தரை வழியாக தபால் சேவையை வியாழன் முதல் ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக்.13

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் தரை வழியாக ஏ-9 பாதையூடாக தபால் சேவையை நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தபால் விநியோகம் 11.08.2006 ஆம் ஆண்டின் பின்னர் கடல் மார்க்கமாக பயணிகள் கப்பல் சேவையின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது ஏ-9 பாதையூடாக பயணிகள் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பயணிகள் கப்பல் சேவை ஒழுங்காக நடைபெறாமையினால் தபால் பொதிகளின் போக்குவரத்தில் காணப்பட்ட தாமதங்களை நீக்கும் பொருட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தபால் பொதிகளை யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு பயணிகள் சேவை யில் ஈடுபடும் இலங்கைப் போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் தினமும் எடுத்துச் செல்வதற்கும் அதேபோல் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் தபால் பொதிகளை 15 ஆம் திகதி முதல் எடுத்து வருவதற்குமான பாதுகாப்புஅனுமதி பாதுகாப்பு அமைச்சில் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிரதி தபால்மா அதிபர் கேட்டுள்ளார்- என்றுள்ளது. (1)

# குடாநாட்டில் வேலையற்று இருக்கும் 2,100 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கவும்

## ஜனாதிபதியிடம் நேற்று நேரில் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 13

யாழ்.மாவட்டத்தில் வேலையற்று இருக்கும் 2,100 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க உடன் ஏற்பாடுசெய்யவும்.

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

ஜனாதிபதியுடன் நேற்று இடம் பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட சங்கத்தின் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அந்த மகஜரிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பட்டதாரிகளாகிய நாம் நீண்ட காலமாக வேலை வாய்ப்புக்கள் எதுவும் கிடைக்காமையினால் எமது எதிர்கால வாழ்வைத் திட்டமிட முடியாத துயர நிலையிலும் பெற்றோரின் வருமானத்தில் தங்கி வாழும் அவல நிலைக்கும் ஆளாகியுள்ளோம்.

தென்பகுதியைப் பொறுத்தவரை பட்டதாரி மாணவர்கள் அரச துறையை எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. அப்பிரதேசங்களில் தனியார் கம்பனிகள் வெளிநாட்டு நிறுவனங்கள், முதலீட்டு அமைப்புக்கள் எனப் பல நிறுவனங்கள் காணப்படுவதனால் அவர்கள் பட்டம் பெற்றவுடனேயே வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வது இலகுவாயிற்று. அதனால் அவர்கள் அரசாங்கத்திடம் வேலைவாய்ப்பைக் கோருவதில் முனைப்பைக் காட்டுவதில்லை.

ஆனால் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரை தனியார் நிறுவனங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. இருக்கிற தனியார் நிறுவனங்களும் புலருக்கான வேலைவாய்ப்பு, போதிய ஊதியம், நீண்டகால நியமனம் என்பவற்றை வழங்குவதில்லை. இந்நிலை யிலேயே நாம் அரச துறைகளை நாடுகின்றோம். மேலும் கல்வியை மட்டும் மூலதனமாகக் கொண்டதுடன் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நாம் வேறு எந்த முதலீடுகளையும் மேற்கொள்ளமுடியாத நிலையும் உள்ளது.

கல்வியைத் தொடர்ந்த காலம் முதல் இன்றுவரை பொருளாதார வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் பெற்றோரின் தயவிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். பெற்றோரின் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டிய நாம் அவர்களில் தங்கி வாழ்வது என்பது வேதனைக்குரியது. இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் படித்துப் பட்டம்பெற்றுவிட்டு வேலையின்றி வீட்டில் இருப்பது என்பது எமது சொந்த வாழ்க்கைச் செலவில் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் அதே நேரம் மன உளைச்சலைத் தருவதாகவும் இருப்பதுடன் 'மனிதவளம்' வீணடிக்கப்படுவதாகவும் அமை கிறது.

### 2005 ஆம் ஆண்டின் பின்னர் நியமனம் எதுவும் இல்லை

பட்டதாரிகளுக்கான நியமனங்கள் 2005ஆம் ஆண்டுக்குப்பின் நீண்ட காலமாக வழங்கப்படாமையினால் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இவ்வகையில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 2100 பட்டதாரிகள் வேலையற்று இருக்கின்றனர்.

க.பொ.த உ/த பரீட்சையில் முதல்தர சித்தி பெற்றவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களே வேலையின்றி பத்து பன்னிரெண்டு ஆண்டுகள் வேலைக்காகக் காத்திருக்கின்றனர். ஆனால் இரண்டாம் நிலை சித்தி பெற்று கல்வியியற் கல்லூரிகளுக்குச் செல்பவர்கள் படிப்பு முடிந்தவுடன் வேலையினை இலகுவாகப் பெற்றுக்கொள்கின்றனர்.

எமது பட்டதாரிகளில் பெரும்பாலானவர்களுக்கு அரச துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான உச்ச வயதெல்லை அண்மித்துள்ளமையும் கவலை தருவதாகும். கடந்த கால கசப்பான நிகழ்வுகளால் தொடர்ச்சியான இடப்பெயர்வு, சொத்தழிப்பு, உயிரிழப்பு எனப் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்ட நாம் இன்று முடிவில்லாமல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளோம்.

எமக்கு உடனடியாக வேலைவாய்ப்பைத் தந்துதவுமாறும் எமக்கான நியமனங்களை வழங்கும்போது எதுவித பரீட்சைகளையும் நடத்தாது மூப்பின் (வயது மற்றும் பட்டம் பெற்ற ஆண்டின்) அடிப்படையில் நியமனங்களை வழங்குமாறும் -

யாழ்.குடாநாட்டில் இருக்கக் கூடிய வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் தாங்கள் விசேட கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுமாறும் - சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஊடாக ''வடக்கின் வசந்தம்'' கைகூடியுள்ள இந்நேரத்தில் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (1)

# மிருசுவிலில் காணிக்கச்சேரி

யாழ்ப்பாணம், ஒக்.13

மிருசுவில் பெரியானோடையில் ஒரு ஏக்கர் காணிக்கு விண்ணபித்தவர்களுக்கான காணிக்கச்சேரி எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ஒரு ஏக்கர் திட்டத்தில்பதிவு செய்தவர்களை காணிக் கச்சேரியில் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (1-207)

# கடலுணவுகளை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு பாதுகாப்பு அனுமதி கிடைக்கவில்லை என முறைப்பாடு

## இதனால் கடற்றொழிலாளர் பாதிப்பு

சண்டிலிப்பாய், ஒக்.13

யாழ்.மாவட்டத்திலிருந்து கொழும்பிற்கு 'கூலர்' வாகனம் மூலம் கடலுணவு எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்படுவதில் ஏற்பட்டுள்ளதாமதத்தினால் ஒருவார காலமாகக் கூலர் வாகனங்கள் கடலுணவு ஏற்றிச் செல்வதில் ஈடுபடவில்லை. இதனால் கூலர் வாகனங்கள் முடங்கிக் கிடப்பதுடன் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பல வருடங்களாக போக்குவரத்திற்கு மூடப்பட்டிருந்த ஏ-9 தரைப்பாதை நாட்டில் அமைதிநிலை தோன்றியதைத் தொடர்ந்து தற்பொழுது போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இறால், நண்டு, கணவாய் உட்பட கடலுணவுகள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் பாதுகாப்பு அனுமதியுடன் கூலர் வாகனங்கள் மூலம் கொழும்பிற்கு உரிய நேரத்தில் எடுத்துச் செல்லப்பட்டு சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தன. இதனால் குடாநாட்டு மீனவர்கள் மட்டுமல்ல கூலர் வாகன உரிமையாளர்களும் தொழிலாளர்களும் நன்மையடைந்து வந்தனர்.

கடலுணவுகளை கூலர் வாகனங்கள் மூலம் தரைப்பாதையால் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சினால் ஏற்கனவே வழங்கப்பட்ட பாதுகாப்பு அனுமதி காலாவதியாவிட்டது. தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக கடந்த ஒரு வார காலமாக கூலர் வாகனங்கள் இச் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. இதனால் வாகன உரிமையாளர்கள் மட்டுமின்றி தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே கூலர் வாகனங்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடு வதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் கடத்தாது வழங்கு மாறு வாகன உரிமையாளர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளார்கள்.

இதேவேளை தென்னிலங்கையிலிருந்து பொருள்களை ஏற்றிவரும் லொறிகளில் கடலுணவுகள் அனுப்பப்படுவதும் இதற் குக் காரணம் என்று பேசிக் கொள்ளப் படுகின்றது.

கூலர் வாகனங்கள் மூலம் அனுப்பப்படும் கடலுணவுகளுக்கும் சாதாரண வாகனங்கள் மூலம் அனுப்பப்படும் கடலுணவுகளுக்கும் தரத்தில் வேறுபாடு காணப்படும் என்று கூறப்படுகின்றது. (1-115)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 28 | 14.10.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மாலை 06.06வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.இ. 01.36 வரை |
| சுபநேரம்: | 04.32 - 06.02 வரை |
| ராகுகாலம்: | 12.02 - 01.32 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பேணுவோம்

# சிவபூமி முதியோர் இல்லம்

எமது மண்ணில் ஆதரவற்ற முதியோரின் அவலத்தைப் போக்க சிவபூமி முதியோர் இல்லம் 07.04.2007 அன்று ஆரம்பிக்கப்பட்டது. வழக்கம்பரை அம்மனுக்கு அருகில் தொல்புரத்தில் இவ்வில்லம் அமைக்கப்பட்டுள்ளது. செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் இவ்வில்லத்தை ஸ்தாபித்தார். அமெரிக்காவில் ஆன்மீக உரையாற்றச் சென்று நாடு திரும்பிய அவர் தனது நீண்டநாள் ஆவலாக உள்ளத்தில் சுமந்த இக்கைங்கரியத்தை நிறைவேற்றினார். அமெரிக்காவைச் சேர்ந்த கிருஸ்ணர் பாலச்சந்திரன் அவர்களின் பேருதவியால் பழைய தொழிற்சாலைக் கட்டடத்தை கொள்வனவு செய்து நவீன வசதிகளுடன் கூடிய முதியோர் இல்லம் அமைக்கப்பட்டது. தற்போது முப்பத்தொன்பது முதியோர்கள் சகல வசதிகளுடனும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். 20 ஆண்களும் 19 பெண்களும் வசித்து வருகின்றார்கள். 98 வயது நிரம்பிய பாட்டி முதல் பல முதியவர்கள் இங்கு வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.


முதியோர்கள் காலை உடற்பயிற்சியில்

உணவு, உடை, மருத்துவம் முதலிய வசதிகள் சகலதும் இலவசமாக நிறைவேற்றப் படுகின்றன. தற்போது புதிய நூல் நிலையம், மருந்தகம், நவீன கட்டடத் தொகுதிகள் முதலியன உருவாக்கப்பட்டுள்ளன. தனித்தனியான நவீன மலசலகூடம், குளியல் அறை வசதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இங்கு வசிக்கும் சிலர் கலைஞர்களாக விளங்குகின்றார்கள். நூற்றியொரு அடி நீளமான, கலைநிகழ்ச்சிகளுக்கான மண்டபமும் அமைக்கப்பட்டு நாயன்மார்களின் குருபூசைகள், சமய விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பல பாடசாலைகள் தங்கள் உபயமாக விழாக்களை பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றன. 12 பேர் இங்கு பணியாற்றி வருகின்றார்கள். இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர் முதியோரின் மருத்துவ தேவைகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றார்.




நிர்வாக உத்தியோகத்தர் உட்பட சகல பணிகளுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்கள். அழகான வைரவர் ஆலயம் இவ்வில்லத்தில் அமைக்கப்பட்டுள்ளது. திருமுறை, புராணப்படிப்பு, முற்றோதல் என்பன தினமும் நடைபெற்று வருவது சிறப்புக்குரிய விடயமாகும். தொலைக்காட்சி, வானொலி, நூல்நிலையம், பூங்கா மற்றும் வசதிகளும் முதியோரை ஆனந்தமாக இங்கு வாழவைத்துள்ளன. இப்புனித இல்லம் தெய்வீக ஆச்சிரமமாக காட்சியளிக்கின்றது. இவ்வில்லத்தை ஸ்தாபித்து தலைமை தாங்கி நடத்துகின்ற ஆறு.திருமுருகன் அவர்களை இங்கு வாழும் முதியோர் தாம் பெற்ற பிள்ளையாகக் கருதுகின்றார்கள். மூத்தோர் எதைக் கேட்டாலும் அன்பர் களின் உதவியால் நிறைவேற்றி விடுவார்.


அழகிய நூல் நிலையம்


மருத்துவமனை

எமது மண்ணின் தொன்மைப் பொருள்களையும் முதியோர் முன் பாதுகாப்பதற்காக கூடார வில்லு வண்டில், தட்டிவான், A40 கார், பித்தளைப் பாத்திரங்கள், பழைய கிராம்போன் உட்பட பல கிடைத்தற்கரிய பொருள்கள் சிவபூமி முதியோர் இல்லத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அன்பர்கள் தங்கள் பிறந்தநாள், நினைவுநாள் கருதி வழங்கும் அன்பளிப்புகள் மற்றும் உதவிகளைப்பெற்று இவ்வில்லம் சிறப்பாக இயங்குகின்றது.

இவ்வில்லத்தை தரிசிக்கச் செல்பவர்கள் கண்டு வியந்து போற்றும் அளவுக்கு எல்லா நிறைவுடனும் நன்முறையில் இயங்கி வருகின்றது. இல்லத்தில் வசிப்பவர்கள் மிகவும் ஒற்றுமையுடன் வசித்து வருகின்றார்கள். ஒருவர் இறந்தால் எல்லோரும் சேர்ந்து திருமுறை பாடி மாலை மரியாதை செய்து ஈமைக்கடன்களை முடிக்கின்றார்கள். மிகவும் ஒழுங்கான நேரக்கட்டுப்பாடு, உணவு, சுகா தார ஒழுங்குகள் பேணப் படுகின்றன.

இவ்வில்ல நிர்வாகத்தை சிவபூமி அறக்கட்டளை மிகவும் சிறப்பாக நிர்வகித்து வருகின்றது.

## முதியோர், சிறுவர் வார விசேட வெளியீடு

# சிறுவர் மனவிருத்தியைக் காப்போம்

# சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை

எம்மண்ணில் மனவிருத்தி குறைந்த சிறார்களுக்கு வாழ்வளிப்பதற்காக 2004 ஆம் ஆண்டு செஞ்சொற்செல்வர் திரு. ஆறு.திருமுருகன் அவர்களால் கோண்டாவில் கிராமத்தில் சிவபூமி பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது. சைவசமய மேன்மைகளையும் செந்தமிழ் இலக்கியங்களையும் தன் சொல்வன்மையால் எடுத்துரைக்கும் ஆற்றல்பெற்ற ஆறு.திருமுருகன் கடல்கடந்த நாடுகள் பலவற்றுக்கு அழைக்கப்பட்டு பல ஆயிரம் தமிழ் மக்கள் அவரது உரையைக் கேட்டு பாராட்டினர். சொற்பொழிவுக்கு எவ்வித வேதனத்தையும் பெறாத இவர் தனக்குக் கிடைத்த அன்பளிப்புகளையெல்லாம் பல்வேறு தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்தினார். அவரது அறப்பணிகளிலொன்றான மனவளர்ச்சி குறைந்த சிறார்களுக்கு பாடசாலை அமைத்து அவர்களை மகிழ்வுடன் வாழ வைக்க வேண்டும் என்று எண்ணினார். கண் வைத்திய நிபுணர் ச.குகதாசன் அவர்களும் அவரது பாரியாரும் தம் உறவினர்கள் மூலம் பாடசாலை அமைப்பதற்கான நிலத்தைப் பெற்றுக்கொடுத்தனர். 2003 ஆம் ஆண்டு ஆவணிச் சதுர்த்தி நாளில் பாடசாலைக் கட்டட வேலைகள் ஆரம்பமாகின. 2004ஆம் ஆண்டு ஆடி மாதம் 2 ஆம் திகதி அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் சிவபூமி பாடசாலை திறந்து வைக்கப்பெற்றது.







இன்று இப் பாடசாலைகளில் 3 மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் அமைக் கப்பட்டு மிகவும் அழகான பாட சாலையாக மிளிர்கிறது. சகல நவீன வசதிகளும் பாடசாலையில் உருவாக்கப் பட்டுள்ளன. சிவபூமி பாடசாலைக்கு என கோண் டாவில் ஆசிமட அரசடி விநாயகர் வீதியில் ஸ்தாபகர் ஆறு. திருமுரு கனால் கொள் வனவு செய் யப்பட்ட காணியில் அழகான சிவபூமி விளையாட்டுப்பூங்கா இந்திய சிற்பக் கலைஞர்களால் அமைக்கப்பட்டு மாணவர்கள் பயன்படுத்திவருவது குறிப்பிடத்தக்கது. 11 மாணவர்களுடன் தொடங்கி இப்போது 181 மாணவர்களுடன் இன்று சிறப்பாக இயங்கு கின்றது. 17 ஆசிரியர்கள், இலிகிதர், காவலாளி, வாகனச் சாரதி உட்பட பலர்பணியாற்றி வருகின்றனர். இல வச பாடசாலையாக இப்பாடசாலை இயங்குகின்றது. தினமும் மாணவர் களுக்கு மதிய உணவு, சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டு வருகிறது. பல அன்பர்கள் தம் பெற்றோர் நினைவாகவும், பிள்ளைகளின் பிறந்த தினம் மற்றும் சிறப்பு வைபவங்கள் தொடர்பான அன்பளிப் பாக பணம் வழங்கி வருகிறார்கள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் சிவபூமி அன்பர்களின் பேருதவியால் இப்புனித கைங்கரியம் குறைவின்றி நடைபெற்று வருகிறது. சிவபூமி பாடசாலை அதிபராக திருமதி கலைவாணி குகதாசன் சிறந்த சேவையாற்றி வருகின்றார். மனவிருத்தி குறைந்த பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து அவர்களையும் இச் சமூகம் தம்மில் ஒருவராகக் கருத வைக்கும் முயற்சி வெற்றிபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இங்கு கல்விகற்கும் பிள்ளைகளின் பெற்றோர் இப்பாடசாலையின் சிறப்பால் பெரிதும் ஆறுதல் பெற்றுள்ளனர். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் கலைத்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் பரிசுகள் பெற்று வருகின்றனர்.




யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, விசேட கல்வி நெறித்துறைசார் மாணவர்களும் இப்பாடசாலையை தரிசித்து தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் நிர்வாகம் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் சிறப்பாக இயங்கி வருகின்றது.


பாடசாலை மாணவர்களின் மதிய உணவு வேளை







சுற்றுலாவின் போது மாணவர்கள்



(89825)



செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்- சிவபூமி அறக்கட்டளைத் தலைவர், சிவபூமி பாடசாலையின் ஸ்தாபகர், சிவபூமி முதியோர் இல்ல ஸ்தாபகர்.

#சிவபூமி பாடசாலைக்கு உதவ விரும்புவோர்கள் சிவபூமி வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்.

நடைமுறைக்கணக்கு இல.1060016510, சேமிப்புக் கணக்கு 8060016509

தொலைபேசி - 021 222 7938.

மின் அஞ்சல் sivapoomi@gmail.com, sivapoomi@yahoo.com

சிவபூமி முதியோர் இல்லத்திற்கு உதவ விரும்புவோர், சிவபூமி ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்.

நடைமுறைக்கணக்கு இல.117010003432, சேமிப்புக் கணக்கு - 117020039455

தொலைபேசி - 021 3214230 திரு.ஆறு . திருமுருகன்- தலைவர்,

[illegible]ஸ்வரன், திரு.ம.தயாகரன்- இணைச்செயலாளர்கள்,

கண்வைத்திய நிபுணர் Dr.ச.குகதாசன் - பொருளாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி வார வலம்

தொகுப்பு:
வடநம்பி

# மயக்கும் மாயக்கை

வடமராட்சி அல்வாய் கிழக்கு பகுதி யில் அமைந்திருக்கும் ஓர் ஊரே மாய க்கை ஆகும். இங்கு காணப்படும் மாயக் குகை காரணமாக இவ்வூர் ஆரம்பத்தில் மாயக்குகை என்னும் பெயரால் அழைக் கப்பட்டது. பின் அதுமருவி தற்போது மாயக்கை என அழைக்கப்படுகிறது.(இது பழமைவாய்ந்த பாரம்பரியத்தை உடைய குடியிருப்புகளைக் கொண்டது.) பெயருக்கேற்றவாறே இங்கு வியக்கும் விடயங்கள் உண்டு.

***மன்னர் ஆட்சி**

புராணகால ஆட்சியாளர்களின் கோட்டை இங்கு காணப்பட்டதால், மன்னர்கள் தங் களுக்கிடையேயான போக்குவரத்தை இலகுபடுத்தவும், இரகசிய பரிமாற்றங்களுக்காகவும் முக்கிய போர்த்தளங்களுக்கிடையே நிலத்திற்குக் கீழாகச் சுரங்கப் பாதையை அமைத்தனர். அவ்வாறு அமைக்கப்பட்டதே மாயக்குகை எனக் கூறப்படுகின்றது. தொடரும் வெள்ளப்பெருக்கால் குகை மண்ணால் அடைபட்டு வருகிறது.

ஆரம்பகாலத்தில் இது மிக ஆழமானதாகவும் விசாலமானதாகவும் காணப்பட்டதால் மன்னர் ஆட்சிக்கு பாதுகாப்பாக சப்தகன்னிகள் இருந்தார்களெனவும் மன்னர்கள் அவர்களை வழிபட்டனர் எனவும் கூறப்படுகிறது. இவர்களுக்கெனத் தற்போதும் அங்கு ஓர் ஆலயம் உள்ளது. அங்கு காணப்படும் கற்பாறையின் மீதே கற்களால் கட்டப்பட்டு இவ்ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இன்றும் மக்கள் இங்கு வழிபாட்டை மேற்கொள்கின்றனர்.


*** நீர்வளம்**

புவியமைப்பைப் பொறுத்தவரை வித்தியாசமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மாயக்கை நீர்வளத்தில் மிகவும் செழிப்பானது. இங்கிருந்து பெறப்படும் நீர்வளத்திலிருந்து பயன்பெறும் மக்கள் தொகை பெரிய அளவிலானது. நன்னீர் வளத்தைப் பொறுத்தவரை கரவெட்டி வரட்சியான பிரதேசம் ஆகும். மாயக்கையிலிருந்தே நன்னீரானது கரவெட்டி பிரதேசத்திற்கு விநியோகம் செய்யப்படுகிறது. இத் திட்டத்திற்காக நிக்கொட் நிறுவனம் ஆனது பெருமளவு நிதியினை ரூபா ஒதுக்கியுள்ளது.

(வளரும்)







# மீண்டும் தொடங்குகிறதா மின்வெட்டு?



அண்மைக் காலமாக வடமராட்சிப் பகுதியில் முன்னிரவு நேரங்களில் மின்வெட்டு தினமும் ஏற்பட்டுவிடுகிறது. மாலை 6.15 மணிக்கு தடைப்படும் மின்சாரம் இரவு 9.00 மணிக்குத்தான் மீளக்கிடைக்கிறது. இது இப்பகுதி மக்களின் நாளாந்த வாழ்வில் சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளது. குடாநாட்டு மின் வழங்கலானது அனல் மின் வழங்கலாகவே காணப்படுகிறது. இதற்கு பெரும் பொருட் செலவு ஏற்படுவதோடு நடைமுறையிலும் இலங்கை மின்சாரசபை பல நெருக்கடிகளை எதிர் கொள்வது மறுப்பதற்கு இல்லை. இயந்திரங்களின் தேய்மானம், செயலிழப்புகள் காரணமாக இயந்திரங்களினாலான பயன் குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்கு கிடைக்கப்பெறாமல் போகின்றது. எனவே பல இயந்திரங்கள் சேர்ந்து வழங்க வேண்டிய மின்வலுவை சில இயந்திரங்களில் இருந்தே பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் இயந்திரங்களினால் வழங்கக்கூடிய வலுவளவு அளவாக மின்வளங்களின் வலுவை குறைப்பதற்கு மின்வெட்டுஅமுல்படுத்தப்பட்டது. சீரற்ற மின் வழங்கலால் விரக்தியடைந்த மக்களுக்கு மின் சாரசபையால் வழங்கப்படக்கூடிய பதில் இதுவே.

ஆனால் மக்கள் இக் காரணத்தை ஏற்பதற்குத் தயாராக இல்லை. ஏனெனில் மின்சாரசபையினால் அமுலில் இருக்கும் மின்வெட்டு காலநேர அட்டவணையற்றதாகக் காணப்படுவது கண்கூடு. எந்தப் பிரதேசத்திற்கு எந்தெந்த நாட்களில் எந்நேர இடைவெளியில் என்பதற்கு அமைவாக மின்வெட்டு இருத்தல் வேண்டும்.

அண்மைக்காலங்களில் மீண்டும் குடாநாட்டின் கல்விமட்டம் உயர்வடைகின்றது. இதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழல் ஒரு காரணம் . ஆனாலும் அதை குழப்பமடையச் செய்வதாக இம் மின்வெட்டு அமைகின்றது.

குடாநாட்டிற்கும் நீர்மின்சாரம் வழங்கப்படுவதற்காக பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது இன்று வரை நிறைவேறாத ஒன்றாகவே காணப்படுகிறது.இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் குடாநாடும் 24 மணிநேர மின்சாரவசதியை அனுபவிக்கும் ஒரு பிரதேசமாக இருக்கும். இது இன்றைய நிலையில் இன்னமும் எட்டாக் கனியாகவே காணப்படுகிறது.

சீனாவிடமிருந்து இயந்திரமும் தொழில்நுட்பவியலாளர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவ் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட பின்னர் மின்வழங்கல் சீராகும் எனக் கூறப்பட்டது. இயந்திரங்கள் பொருத்தவும்பட்டது. ஆனால் அம் முயற்சியும் தோல்வியடைந்தது. என்ன காரணம் என்பது இன்றும் வெளிப்படவில்லை.

எனினும் புலமைப்பரிசில்பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை ,க.பொ.த உயர்தரப்பரீட்சை போன்ற பரீட்சைகளுக்கு அண்டிய காலங்களில் தங்களால் முடிந்தளவு சீராக மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபை தவறுவதில்லை. இது ஒரு பாராட்டப்படக்கூடிய விடயம் ஆகும்.

குறிப்பிட்ட நாளுக்குரிய மின்வெட்டிற்கான நேரத்தை ஒரு மின்சார ஊழியரால் கூட தற்போது சரியாகக் கூறமுடியாது உள்ளது துரதிஷ்டமே.

எனவே தற்போது முச்சுப்பேச்சின்றி நிகழ்ந்துவரும் மின்வெட்டினை நிரந்தரமானதாக்காமல் அதற்கு மிக விரைவில் தீர்வுகண்டு மக்கள் பிரச்சினைகளை களைய மின்சார சபை அதிகாரிகள் செயற்படவேண்டும்.

# பஸ்சேவை சீரடையுமா?

வடமராட்சிப் பகுதியில் காலை 5.30முதல் 9மணி வரையும் நண்பகல் 2மணி முதல் 3மணி வரையும் மாலை 5மணி முதல் 6மணி வரையுமே பெரும்பாலும் போக்குவரத்துத் தேவை அதிகமாக உள்ள நேரங்கள் ஆகும். எனினும் இந்நேர இடைவெளிகளில் அடிக்கடி பஸ் சேவை நேரம் தவறுவதும் வழக்கமாகி உள்ளது. இதனால் இப்பகுதி ஊழியர்களும், மாணவர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு செல்லும் பஸ்கள்மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவதற்கும் ஏற்படும் தாமதம் காரணமாகவே பஸ் சேவை குழப்பமடைவதற்கு காரணம் என கூறப்படுகிறது.

ஏராளமான பயணிகள் மினிபஸ் வண்டிகளின் ஒழுங்கற்ற தன்மை காரணமாகவே இ.போ.சபையின் பஸ்வண்டிகளை விரும்புகின்றனர். எனினும் சில சமயங்களில் போக்குவரத்து தேவை அதிகமாக உள்ள குறித்த நேர இடையில் அளவில் சிறியரக பஸ்வண்டிகளை சேவைக்கு அமர்த்தி பயணிகளை உடல், உள நெருக்கத்திற்கு ஆளாக்குகின்றனர். வடமராட்சி பிரதேசத்தில் பஸ்சேவையை சீராக்க சம்பந்தப்பட்ட துறையிலுள்ளோர் நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

# சமூக வளர்ச்சிக்காக தொடர்ந்து உழைக்கும் கருணையம்பதி சனசமூக நிலையம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகம் செல்லும் இப்பிரதேச மாணவர் களுக்கு நிதியுதவி அளித்து அவர்களின் கல்வியை வளர்க்கும் பணியிலும் முன் நிற்கிறது. அதுமட்டுமல்லாது வயோதிபர் களான தங்கி வாழ் வோருக்குப் வெளிநாட்டு கிளைகள் மூலம் நிதியுதவி பெற்று வழங்கி வருகிறது. இறுதியாக 55வயதுடைய மா.புஸ்பமலர் என்னும் முதியவருக்கு சுவிஸ் கிளை 4000 ரூபா உதவித் தொகையை வழங்கியிருந்தது. வறிய மாணவர்களுக்கும் பண உதவிகளைச் செய்து வருவதில் இந் நிறுவனம் அக்கறை காட்டி வருகிறது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மூலம் வருடாந்தம் துடுப்பாட்ட, உதை பந்தாட்டப் போட்டிகளை நிகழ்த்தி இப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவித்தும் வருகிறது. மேல் மாடியுடன் கூடிய கட்டடத்தைக் கொண் டுள்ள இந்தச் சனசமூக நிலையத்தில் நாளாந்தபத்திரிகைகள், வாராந்த சஞ் சிகைகள், நூல்கள் போன்றன இளை யோரினதும் ஏனையவர்களினதும் அறிவு வளர்ச்சிக்கு உரமிடும் செய்லாகும் சமய ஆலயங்கள்களாகவும் கருணையம்பதி சனசமூகநிலையம் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.

எனவே கரணவாய் மத்தியும் அத னைச் சூழ்ந்த சமூகங்களும் முன்னேற்றம் பெற கருணையம்பதி சன சமூக நிலை யம் பல பணிகளைத் திட்டமிட்டு சரிவர நிறைவேற்றி வருகின்றது.

சனசமூக நிலையங்களும் அதன் நிர்வாகங்களும் செயற்படவேண்டிய தன்மைக்கு முன்னுதாரணமாக கரு ணையம்பதி சனசமூக நிலையம் பணியாற்றி வருகிறது. இதையே சகல சமூக நிறுவனங்களும் முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட்டால் சமூக முன்னேற் றம் தானாகவே நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோப்பாய் வீரபத்திரசுவாமி கோயில் மண்டபத்தில் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் சகலகலாவல்லி மாலை மனனப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழா இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து யாழ்.கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உரையாற்றுவதையும் மேடையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஹவாய் ஆதீன சுவாமி தொண்டுநாத ஸ்வாமிகள் பிரம்மஸ்ரீ கந்தராஜேஸ்வரசர்மா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். மாணவர்களின் கலை நிகழ்வில் ஒரு காட்சியையும் மாணவி ஒருவருக்கு கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி பரிசில் வழங்குவதையும் ஏனைய படங்களில் காணலாம்.

## கருத்தரங்கு

யாழ்.விஞ்ஞான சங்கத்தின்-பகுதி 'பி' பிரிவின் ஏற்பாட்டில் மாதாந்தக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் விவசாய பீடத்தின் விவசாய பொருளியல் துறைத் தலைவர் க.உமாசங்கர் ''சமூக விஞ்ஞான ஆய்வுகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய மாதிரிகள்'' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (201)

## கண்ணீர் அஞ்சலி

''எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி கிருஸ்ணாயினி செந்தமிழ்செல்வன் அவர்களின் அன்புத் தாய்

**அமரர் இராசலட்சுமி தெட்சணாமூர்த்தி**

அவர்கள் கடந்த (08.10.2009) ஆம் திகதி வியாழக்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.''

பிரதேச செயலகம், தெல்லிப்பளை. (89804)
பிரதேச செயலாளரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும், நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினசிங்கம் துரைவீரசிங்கம்



பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இ.துரைவீரசிங்கம் நேற்று (12.10.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் இரத்தினசிங்கம்-நல்லமுத்து தம்பதியரின் மகனும் சாந்தினியின் பாசமிகு கணவரும் யோகராசா (கனடா), வசந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சித்திரா, நந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதன், சுதாகரன், சுயன் (கனடா), சுதர்சன், சுரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷாந்தி, கயனி ஆகியோரின் அன்பு மாமானும் பபிக்கா, ரூபிகா, ரித்திகா, அருசன், அனுஜன் ஆகியோரின் பெரியப்பாவும் ஜானுஜாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கட்டையாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (சி/561662)

தகவல்:
மனைவி, மக்கள்
T.P: 0212223507

### திருமதி சூசைப்பிள்ளை விக்டோரியா



குருநகரைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை உயரப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விக்டோரியா (சின்னக்கிளி) கடந்த (06.10.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சூசைப்பிள்ளை (பரந்தன் இரசாயனக் கூட்டுஸ்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ்-ஆனாயிமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தியோகுப்பிள்ளை-மார்கிறட் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குயின்ரன் தவராஜா (சீலன்), சீலி (லண்டன்), சோதி, குமார் (பெல்ஜியம்), ஆகியோரின் பாசமிகு தாயும் வோல்டர் (லண்டன்), வவி, சுகந்தி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மாமியும் லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட துஷாந்தினி, பிரூசனன், சுபோதினி, சிவா, ஜொ்ணஸ், ஜெகன், ஜெயந்தன், தவக்குமார் (சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்), அனிஸ்ரா (சென். ஆன்ஸ் மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்ஷிக்காவின் (லண்டன்) பூட்டியும் மேரிராணி (வவா), காலஞ்சென்றவர்களான மலர்,யேசுரட்ணம், சேர்மனம்மா, மேயம்மா, செல்லக்குமார், இராசகுமார், திருக்குமார் ஆகியோரின் சகோதரியும், மரியகிறிற்றா (நேசம் -கனடா) மரியதாசன்,யேசுதாசன், அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (14.10.2009) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் அடைக்கல அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
சூசைப்பிள்ளை (கணவர்).

## 40 வருடங்களாகத் திருத்தப்படாத வீதியைத் திருத்தக் கோரிக்கை

வடமராட்சி,ஒக்.13

புலோலி, வடகிழக்கு, உத்திராவத்தை வீதி கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாமையினால் அவ்வீதியால் சென்று வருவோர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிராமக்கோடு, மருதங்கேணி வீதியில் பல்லப்பையிலிருந்து வராத்துப்பளை வரை செல்லும் இவ்வீதி பொதுமக்களின் பயன்பாடு அதிகரித்த வீதியாக உள்ளது.

இவ்வீதியைப் புனரமைக்குமாறு பல தடவை கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் எவ்வித பயனும் கிட்டவில்லை என இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (203-236)

## வலி.கிழக்கில் மின்தடையால் மாணவருக்கு நெருக்கடி

யாழ்ப்பாணம், ஒக்.13

வலி.கிழக்கு பிரதேசத்தில் இரவு நேரங்களில் தினமும் மின்சாரம் திடீரெனத் துண்டிக்கப்படுவதால் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் இரவு நேரங்களில் ஒரு மணித்தியாலத்திற்கு குறையாமல் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த மின்சாரம் துண்டிக்கப்படுவதால் இரவில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-224)

## சாரணர் கிளைச் சங்க மாவட்ட தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்க மாவட்டதினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மாவட்ட ஆணையாளர் ந.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, மாகாண சாரணர் ஆணையாளர் நா.போஜன், வித்தியாலய அதிபர் திருமதி சு.சிவமலர், ஓய்வுபெற்ற மருத்துவ பரிசோதகர் க.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஒக்.13

நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மரியமலர் ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜாவும், சிறப்பு விருந்தினராக புனித ஆசிர்வாதப்பர் ஆலய அருட்தந்தை ஏ.லோறன்ஸ்சும் கலந்து கொள்வர். (204)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

உள்நாட்டில் சிறந்த வேலை வாய்ப்பைப் பெற, மேற்படிப்பை மேற்கொள்ள, ஆங்கிலத்தில் கதைப்பதற்கு மற்றும் இலக்கண வகுப்புகள் By.N. விக்னேஸ்வரன் ஆச்சாரி,426,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்,பிளாக் வீதி, சங்கானை.

**BRAN BREAD**
(குரக்கன் பாண்)
பூபதி பாண்,
மானிப்பாய் வீதி,ஆனைக்கோட்டை.
021 3001000, 0773545203
(சி/561664)

**வீடு விற்பனைக்கு**

அளவெட்டி தெற்கில் 4 பரப்புக் காணியுடனான 4 அறைகள் கொண்ட வீடு விற்[illegible] கள் பேசித் தீர்க்கலாம்.
தொடர்பு: 0112595275, 0777635455

**பபு ரெக்ஸ்ரைல்ஸ்**

சிறுவர்களுக்கான மற்றும் பெண்களுக்கான பஞ்சாபித் துணிகள், நவீனரக பஞ்சாபிகள், சாறி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ் என்பனவும் பெண்களுக்குரிய சகலவிதமான ஆடைவகைகளும் Sales போடப்பட்டுள்ளது.
தொடர்பு: கம்பஸ் வங்கி முன்பாக, திருநெல்வேலி. (சி/561661)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை விஞ்ஞானபீடம்

### அறிவித்தல்

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற (உயர்தர) பரீட்சையின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2008/2009 ஆம் ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் 21.10.2009 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும். அன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 04.11.2009ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும். விசேட பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பத்தை 21.10.2009 ஆம் திகதிக்குமுன் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
12.10.2009
(சி/561667)

## பாராட்டு வாழ்த்தும் 11 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்

**ஜேந்திரகுமார் பிரணவன்**

புலமைப் பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சிறப்புப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும், இவர் இன்று (13.10.2009) செவ்வாய்க்கிழமை தனது 11 ஆவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். பிரணவன் பல்கலைகளும் பெற்று பல்லாண்டுகாலம் வாழவாழ்த்துகின்றோம்.

(898099)

வாழ்த்துவோர்:-
அப்பா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா,
சித்தப்பாமார், சித்திமார், மாமிமார்,
மாமாமார், மச்சான்,
மச்சாள்மார், தம்பி, தங்கைமார்.

**STUDY IN EUROPE**
**MBBS/MD**
**Lugansk State Medical University**
Ukraine (உக்கிரேன்) - East Europe
ஸ்ரீ லங்கா Medical Councilயினால் அங்கீகரிக்கப்பட்டது
With O/Ls 7 Years
With A/Ls 6 Years
இவ்வருடத்திற்கான First Batch மாணவர்கள் யாவரும் Ukraine VISA ஐ பெற்றுவிட்டனர்.
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St.John's College Jaffna, St. Patricks College Jaffna, Holy Family Convent Jaffna, St. Michaels College Batticaloa, St.Mary's Convent Trinco, Vavuniya Vidyalam, Royal College Colombo, Hindu College Colombo, Hindu Ladies College Colombo, Ramanathan Ladies College Colombo Isipathana College Colombo ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தற்பொழுது Medical Degree (MBBS) கற்கின்றனர்.
Next Batch Starting : 15th October
www.lugmedi.com
Colombo Head Office
Tel : (தமிழ்) 0777-767 818
Scholars Information Center ( 2nd Floor)
No.50 Galle Raod,
Colombo 06
யாழ்ப்பாணத்தில் விபரங்களை பெற:
Mr.S.Mariaratnam 077-4528818
148, Temple Road, (Opp.UNICEF)
Jaffna. Tel : 021 - 222 3818

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும்

# வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அர்த்தமுள்ள அரசியல் கட்டமைப்பு வேண்டும்

## தமிழகப் பிரதிநிதிகளிடம் பத்மநாபா அணி மகஜர்

யாழ்ப்பாணம், ஒக்.13

தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அர்த்தமுள்ள அரசியல் அதி



காரப்பகிர்வு கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இவற்றை நடைமுறைப்படுத்த ஈழத் தமிழர்களின் நலன்களில் அக்கறை கொண்ட தமிழகக் கட்சிகள் அனைத்தும் இந்திய அரசுக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கி ஈழத்தமிழர் இலங்கையில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ உதவவேண்டும்.

குடாநாட்டுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்த தமிழகப் பிரதிநிதிகள் குழுவிடம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) அணி தெரிவித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி(பத்மநாபா) அணியினர், தமிழகப் பிரதிநிதிகளிடம் வழங்கிய மகஜரில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தொடர்ந்து அக்கறை செலுத்தியும் ஆதரவு தந்தும் எம் மக்களின் துயர்துடைப்பதற்கு பெருமுயற்சி எடுத்து வருகிறீர்கள்.

வரலாற்றில் முதல்முறையாக தமிழக கட்சிகளின் நாடாளுமன்றக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம்செய்து நேரடியாக எமது மக்களின் உண்மை நிலையைக் கண்டறிய வருகை தந்திருப்பதையிட்டு நாம் அளவிலா மகிழ்ச்சியடைவதோடு, எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களின் தற்போதைய இலங்கை வருகை எமது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

**இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களுக்குத் தீர்வு**

யுத்தத்தால் இடம்பெயர்ந்து இன்று அகதிகளாக முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது மக்களின் அவலங்களுக்கு முடிவு கட்டுவதே இன்று முதன்மையானதும் உடனடியானதுமான விடயமாகும். 2லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு வாழ்வு மறுக்கப்பட்ட நிலையில் நீண்டகாலத்திற்கு இவ்வாறு முகாம்களில் வைத்திருப்பது ஏலவே துயரங்களின் ஆழ்ந்துள்ள எம் மக்களுக்கு பாரதூரமான உள, உடல் பாதிப்புக்களை நிரந்தரமாக ஏற்படுத்திவிடும். அத்துடன், தன்னம்பிக்கையை இழக்கச்செய்து இயல்பான ஆற்றலையும் அழித்துவிடும்.

பெரும் யுத்தம் நடைபெற்ற நாடுகளில் யுத்தத்தின் பின்னர் சமாதானச் செயற்பாடுகள், மக்களின் மறுவாழ்வு, அபிவிருத்தி ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் துரதிஷ்டவசமாக இங்கு நிலைமைகள் அவ்வாறில்லை. இந்த மக்களின் அவலவாழ்வு ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் மனிதநேயங்கொண்ட அனைவரையும் கவலையுறச் செய்துள்ளது.

இந்த மக்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு அவர்கள் தமது சொந்தஇடங்களில் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் பாதுகாப்புடனும் வாழவைக்கப்படல் வேண்டும். இதனூடாகவே மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தமுடியும்.

இந்தமக்கள் சொந்த ஊர் திரும்புவதை துரிதப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் இந்திய நடுவண் அரசு தனது காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும் என்பதை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் - என்றுள்ளது.

(203)

## நினைவுரை நிகழ்வு

கொழும்பு,ஒக்.13

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா நினைவுரைகள் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 5மணிக்கு கொழும்பு தமிழ்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுரைகளை பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம், மு. பொன்னம்பலம், தெ. மதுசூதனன், த. இராஜரத்தினம் ஆகியோர் வழங்குவர்.

(201)

## இலவச கண்புரை பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.13

மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் இலவச கண்புரை பரிசோதனை நாளை புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் நண்பகல் வரை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது

இந்த கண்புரை பரிசோதனையை கண் வைத்திய நிபுணர் டாக்டர். எஸ்.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் கண்புரை நோயால் பார்வை பாதிக்கப்பட்டவர்களை பரிசோதனை செய்து சத்திர சிகிச்சை செய்யப்பட வேண்டியவர்களை இனங்கண்டு சத்திரசிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(201)




## நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மாரின் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஒக்.13

இந்து அமைப்புகள் ஒன்றியத்தினர் நலன்புரி நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு சத்துணவு வழங்கும் நோக்கில் கர்ப்பிணித்தாய்மாரின் விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

இதனடிப்படையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கர்ப்பிணித்தாய்மாருக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கிராம அலுவர், பிரதேச செயலர் ஆகியோர் ஊடாக விண்ணப்பங்களை 'இந்து அமைப்புகள் ஒன்றியம், நல்லூர் ஆதீனம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(203-201)




இலங்கை வங்கியின் கோப்பாய் கிளை,கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் இருபத்தைந்து பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடன் வழங்கியுள்ளது.

கிளை முகாமையாளர் எஸ்.தவபாலன் பயனாளி ஒருவருக்கு கடன் தொகையினை வழங்குவதனையும் மேற்படி நிறுவன நிர்வாக உறுப்பினர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.

(படம்:உமா)

## குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு அலுவலகத்துக்கு குணவர்த்தன நியமனம்

யாழ்ப்பாணம், ஒக் 13

தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளராக யூலித் குணவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கென ஒரு பிரதிப் பொதுமுகாமையாளரே பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

யூலித் குணவர்த்தனா விரைவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

யாழ்.வருகை தரவுள்ள பிரதிப் பொது முகாமையாளர் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான விடயங்களைப் பார்வையிடவுள்ளதுடன், வடிகாலமைப்பு சபைக்கென பண்ணையில் கட்டடம் அமைக்கப்படவுள்ள வளாகப் பகுதியையும் அவர் பார்வையிடவுள்ளதாகக் கூறப்பட்டது. (203-224)

## பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு கணனி வழங்கும் திட்டம் ஆரம்பம்

கோப்பாய்,ஒக்.13

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு கணனி வழங்கும் திட்டம் ஆரம்பமாகவுள்ளது.

ஓ.எல் பிசி திட்டத்தின்கீழ் இலங்கையில் 13 பாடசாலைகளில் இந்தத்திட்டம் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் 9சிங்கள மொழிப் பாடசாலைகளும், 4 தமிழ்மொழிப் பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி ஒவ்வொரு மாணவனுக்கும் மடிக்கணனி வழங்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் வடமாகாணத்தில் ஆனைக்கோட்டை வண்ணை வைத்திலிங்க வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சி செயலமர்வு கொழும்பில் நடைபெற்றபோது வடமாகாணத்திலிருந்து இரண்டு ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் என்றும் கூறப்பட்டது.

(203- 204- 72)

## சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நாளை திறக்கப்படும்

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி நாளை புதன்கிழமை வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறந்து தொழிலில் ஈடுபடுமாறு சிகை ஒப்பனையாளர் சங்க வடமராட்சிக் கிளை அறிவித்துள்ளது.

புதன்கிழமை சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறப்பதனால் எதிர்வரும் சனிக்கிழமை தீபாவளி தினத்தன்று நிலையங்களை மூடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-236)

# முதியோர் தாம் பெற்ற அனுபவங்களூடாக இளம் சமுதாயத்தினருக்கு வழிகாட்ட வேண்டும்

## முதியோர் தின விழாவில் அமைச்சர் டக்ளஸ் உரை

முதியோர்கள் தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் ஊடாக வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினருக்குச் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும்

இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

வாழ்நாள் முழுவதும் தமது குடும்பத்துக்காகவும் அதனூடாகச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் அயராது உழைத்து முதுமையடைந்துள்ளவர்கள், மாற்று ஆற்றலுள்ளவர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகனறாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் உரையாற்றுகையில்:

ஆரோக்கியமான தமது வாழ்க்கையினூடாக சமூகத்தின் முன்னோடிகளான முதியோர்கள்,மாற்று வலுவுடையோர் ஆகியோரைக் கௌரவிக்கும் பொருட்டு இத்தகைய விழாக்கள் தொடர்ந்து நடத்தப்படவேண்டும்.

முதியோர் கேட்டல், வாசித்தல் , பார்த்தல் ஆகியவற்றினூடாக தாம் பெற்ற அனுபவங்களை அடுத்து வரும் இளைய தலைமுறையினருக்கு வழங்க வேண்டும்.

முதியோர் கௌரவமாகவும், பண்பாகவும் சமூகத்தில் மதிக்கப்படும் மூத்த பிரஜைகள்.

எனவே, சிறந்த வழிகாட்டிகளாகச் செயற்படுவதற்கான முன்னோடி நடவடிக்கையாக இத்தகைய விழாக்கள் அமையவேண்டும்.

இன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளது.

இன்றைய அனுபவங்கள் எல்லோருக்கும் பயன்தரும் விதத்தில் அமைய வேண்டும். கடந்த 15, 20வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாகத் தாமும் முடக்கப்பட்டிருந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையில் மக்கள் மத்தியில் நேரடியாகச்சென்று கலந்துரையாடக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு நன்றியைக் கூறுகிறேன்- என்றார்.

(203- 201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்

காரைநகர் பிரதேசத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்துவந்து இணைந்துள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தீவக வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வில் காரைநகர் அமெரிக்கன் மிஷன் தேவாலயப் பங்குக் குழுவினால் இவை வழங்கப்பட்டன. (204-267)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு மகேந்திரன்**

(கிராம சேவையாளர்)

பூத்துக் குலுங்கும் இல்லமதில்
பூரிப்போடு வாழ்ந்தோமப்பா
பொறாமை கொண்ட மாநிலத்தில்
பொறுக்கவில்லை மாந்தர்க்கு
எம் வாழ்வு சகாராப்பாலைவனமானதப்பா
சிற கொடிந்த பறவை போல் ஆனாலும்
எம் இதயக் கோயிலில் நீங்கள் தானப்பா
உங்கள் உயிரைக் கவர்ந்த காலனுக்கு
இதயமே இல்லைப் போலும்
என்றும் உங்கள் நினைவுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும்!

58, பாரதி வீதி, யாழ்ப்பாணம். **மனைவி, பிள்ளைகள்.**

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா நம்பர்-1புறொயிலர்க் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 16.10.2009 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ராஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம், ஆனைக்கோட்டைச் சந்தி.
★மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★P.ரவி, சாவகச்சேரி.
★திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.

(897628)

## நாவலர் தினப்போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ். சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தினத்தை முன்னிட்டு பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

அடுத்தமாதம் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேர்வுச் செயலர் இரா. செல்வவடிவேல் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(203)

## விவசாயிகளுக்கு மானிய உரம்

யாழ்ப்பாணம், ஒக். 13

சண்டிலிப்பாய் கமநலசேவை நிலையத்தில் வைத்து பெரும்போக விவசாயிகளுக்கான மானிய உரம் விநியோகிக்கப்படுகிறது.

முதலாம்கட்ட உரமானியத்தை எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பெறுமாறும் சண்டிலிப்பாய் கமநல சேவைகள் பிரிவிற்குட்பட்டவகையில் 16 விவசாய சம்மேளனபிரிவினைச் சேர்ந்தவர்களுக்கு மானிய உரம் வழங்கப்படுகிறது என்றும் முதலாம் கட்டத்தில் யூரியா, ரி.எஸ்.பி, எம்.ஓ.பி ஆகிய மூன்று வகை அசேதனப் பசளைகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-302)

## 29ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 25 ★ 01 ★ 1952



உதிர்வு 15 ★ 09 ★ 2009

**பிரம்மகுமார் சுந்தரம் செந்தில்நாதன் (தயாளன்)**

(முன்னைநாள் சுந்தரம் அன் சன்ஸ் உரிமையாளர்)

எமது குடும்பத்தின் உயர்வுக்காய் உழைத்து எமது வாழ்வை வளப்படுத்திய குடும்பத் தலைவர் சுகவீனமுற்றிருந்தவேளை அவரது நலன்களைக் கவனித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் அவரது மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளையதம்பி வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (89790) **குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
30.09.1953




மறைவு
13.09.2009

**திருமதி சிவபாதசுந்தரம் புவனேஸ்வரி**

இனிய அம்மாவுக்கு !
பத்துத் திங்கள் எம்மை கருவறையில் சுமந்து;
கண்ணின் இமைபோல எம்மை வளர்த்து,
நல்வழி காட்டியஎம் தெய்வமே!
அம்மா என்ற மூன்று எழுத்துக்கு அர்த்தம் தந்தாயே,
காலத்தின் கோலத்தால் நாம் பிரிந்து வாழும் போது
நமக்கு தொலைபேசி மூலம் ஆறுதல் கூறினாயே,
எம்மை அன்பு என்ற ஆழ்கடலில் வற்றாத ஊற்றாக்கினாய்
திடீரெனக் காலம் உங்களை எம்மிடம் இருந்து பிரித்து விட்டது
உம்மூச்சு நிற்கையில் யாரை நினைத்தாயோ அம்மா!
எம் உயிர் உள்ளவரை உன் நினைவு எம்இதயத்தில்
அழியாத ஓவியமாய் வாழும் உங்கள் புன்னகை பூத்த முகம்
எம் இதயத்தில் பௌர்ணமி போல் ஒளி வீசும்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
கணவர்: சி. சிவபாதசுந்தரம்,
மகன்: சசிலேகன்
புத்தூர் வடக்கு. (89728) குடும்பத்தினர் (ஜேர்மனி).

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24.01.1924 மறைவு: 13.10.1984

**அமரர் அ.சிவராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

நீதி நெறி வழுவா நின்றன் நிழலிலே வளர்ந்த நாங்கள்
நிமிர்ந்துமே நிற்றல் காணா(து) நீவீரேன் மறைந்தீர் ஐயா?
கூடியே உங்களோடு குதூகலித்திடாத சோகம்
சாடுதே உள்ளம் தன்னில் தணியாத தாகமாக.

15/4, சங்கிலியன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி லீலாவதி
மக்கள்-சிவமோகன், சிவசீலன், சிவஜீவன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## நீங்காத நினைவலைகள்

14 ஆம் ஆண்டு



சின்னத்தம்பி நமசிவாயம்

11 ஆம் ஆண்டு



நமசிவாயம் ஆச்சிமுத்து

21 ஆம் ஆண்டு



நமசிவாயம் குணசிங்கம்

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆவரங்கால், புத்தூர். (89529) [illegible]

## மரண அறிவித்தல்

### கந்தையா காசிலிங்கம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா காசிலிங்கம் நேற்று முன்தினம் (11.10.2009) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் அமரர்களான கந்தையா-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் அமரர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் தர்மலிங்கத்தின் அன்புச் சகோதரனும் சற்குணாம்பிகை, அமரர் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலச்சந்திரன், பாலவர்ணன், பாலஇந்திரன் (சித்தப்பா - எக்ஸ்போ எயார்), பாலச்சந்திரேஸ்வரி, பாலஇந்திரேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜனி, தயாநிதி, சகுந்தலா, சின்னராசா, இராஜலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும் பாலசிங்கத்தின் சகலனும் கஜேந்திரனின் பெரியப்பாவும் சஞ்ஜீவ்-நிவேதா, தர்மினி-சர்வேஸ்வரன், அருண், விருஷ்னி, மதுசுதன், துவாரகன், ராஜிவி-பிரதீபன், நிக்கோலா, கவின்ஜா- நவஜீவா, மென்சுஜா, சஜந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் மீனா, அஜித், அஜய், ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 0212229596
88/6, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (89803)

தகவல்:
கா.பாலஇந்திரன்
(சித்தப்பா- மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டச் செயலகத்தின் சிறுவர் அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சிறுவர் தின நிகழ்வானது யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை சிறுவர்களின் ஆளுமைகளை வெளிக்கொணரும் வகையில் அமையப் பெற்றிருந்தது.

யாழ். செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யுனிசெவ்

வித்தியாலயத்தைச் சேர்ந்த இ.லோசியா, கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த அ. நளாயினி, உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த க. சத்தியா, ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த இ.மேனன், நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த ச.சயந்தன், அம்பன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.சிவசேகரன், உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியைச் சேர்ந்த ந.துவாரகன், செங்குந்தா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜெ.ஜெனார்த்தனி ஆகியோர் இணைந்து சிறுவர்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தனர்.

கொண்ட சிறுவர் பிரதிநிகள் தனித் தனியாக எடுத்தியம்பியவுடன் மன்றில் கூடியிருந்த சிறுவர்களின் குறைகளை செவிமடுத்துக் கொண்டிருந்த துறைசார் உயர் அதிகாரிகள் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வதற்கு முன்வந்தனர்.

முன்னதாக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மன்றிற்கு அழைக்கப்படுகிறார்.

மாணவர்கள் பாடசாலைகளில் பாகுபாடு காட்டப்படுகிறார்கள் என்ற பிரச்சினை முன்வைக்கப்பட்டது. ஆனால் அது எந்த விதத்தில் என்று சொல்லப்படவில்லை.

சமூக மட்டத்திலான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

தொழிற் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.கனகேஸ்வரன் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல் தொடர்பாக விளக்கமளிக்கையில் -

சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தொடர்பாக அதாவது சிறுவர்களின் வயதெல்லை மாறுபட்ட விதத்தில் உள்ளன. எங்களுடைய தொழிற்திணைக்களத்தின் சட்டபடி 16 வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்கள். 14-18 வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என்ற

# பாலியல் கல்வி தொடர்பான போதிய விளக்கம் இன்மையே இளவயதுத் திருமணங்கள் அதிகரிப்புக்குக் காரணம்

பொதுவான சட்டம் இயற்றப்பட்டபோதும் அது இன்னும் நாடாளுமன்ற அனுமதி கிடைக்காதுள்ளது.

எங்கள் பிரதேசத்தில் 14 வயதுக்குட்பட்டவர்கள் எவரேனும் தொழிலுக்கமர்த்தப்பட்டால் எமக்கு அறிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுவர் ஒருவர் வேலைக்கமர்த்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவருக்கு 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அறவிடப்படும். சிறுவர் வேலைக்கமர்த்தல் தொடர்பாக 021-222-2375 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்றார்.

தொடர்ந்து யாழ்.பொலிஸ் நிலைய உதவி அத்தியட்சகர் லக்ஸ்மன் பண்டார



நிகழ்வில் கலந்து கொண்டோர்.....

பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவசச் சீருடைத்துணிகள், இலவசப் பாடப்புத்தகங்கள் என மாணவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர மாணவர்கள் பாகுபாடு காட்டப்படுகிறார்கள் என்பது சில வேளைகளில் தெரியாமல் இருக்கலாம். இது விடயத்தில் ஆசிரியர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். சிறுவர்களுடைய இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பிரதேச, கிராம மட்டங்களில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றார்.

அடுத்து தாய்சேய் நல வைத்திய நிபுணர் திருமதி சி. திருமகள் கருத்துத் தெரிவிக்கையில்.

சிறுவர்கள் மத்தியில் இளவயதுத் திருமணம் என்பது அண்மைக்காலமாக அதிகரித்து வருவது என்பது உண்மையான விடயம்தான். அது பல்வேறு காரணங்களால் நடக்கிறது.

இதற்கு மூலகாரணமாக விளங்குவது சிறுவர்கள் மத்தியில்

நிறுவனத்தின் யாழ். மாவட்டத் தலைமை அதிகாரி திருமதி டயான் அராற்ரி, சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அணித் தலைவர் ஜெகநாதன் தற்பரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதில் கலாநிதி தியாகராஜா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கோ.மிறோஜா, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த இ.மேனன் ஆகியோர் சிறுவர் பிரச்சினைகளை எடுத்தியம்பும் மன்றின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தனர்.

சிறுவர் குறைகேள் மன்றின் தலைமைப்

**தொகுப்பு: கவிநேசன்**

கருத்துத் தெரிவிக் கையில் -

• சிறுவர்கள் மதுபாவனைக்குட்படுத்தப்படல், ஆபாசப் படங்களைப்பார்த்து சீரழிவதற்கு இடம் அளிப்பவர்கள், ஆகிய விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகளைச்

## பாடசாலைகளில் அனுமதி வழங்கப்பட்டால் கல்வி போதிக்கத் தயார் என்கிறார் டாக்டர் திருமதி சி. திருமகள்

முற்று முழுதுமாக சிறுவர்கள் தலைமையேற்றுச் சுயாதீனமாக அனைத்து நிகழ்வினையும் நடத்தியுள்ள விதம் உண்மையில் பார்ப்போரைக் மகிழ்விப்பனவாய் இருந்தன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர் கழகங்களின் அங்கத்தவர்கள் தமது கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக பல்வேறு விதமான நடன நிகழ்வுகளால் அரங்கினை அலங்கரித்தனர்.

இந்த நடன நிகழ்வுகளோடு அங்கிருந்து புறப்படுவோம் என்று நினைத்த போது இறுதியாக அங்கு நடத்தப்பட்ட ''சிறுவர்களின் குறைகேள் அரங்கு'' என்ற நிகழ்வு சிறுவர் விடயம் தொடர்பான விடயங்களை அடுக்காகச் சொல்லிக் கொண்டிருந்தன. அந்த விடயங்களை உள்வாங்குவோம் என்றபடி தொடர்ந்தும் நிகழ்வுகளோடு ஒன்றித்துப் போனேன்.

''சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சிறுவர்களினாலேயே உரிய துறைசார் அதிகாரிகளிடம் பகிரங்கமாக எடுத்துரைக்கும் நிகழ்வாகக் 'குறைகேள் அரங்கு' அமைந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், தொழிற் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.கனகேஸ்வரன், யாழ் பொலிஸ் உதவி அத்தியட்சகர் லக்ஸ்மன் பண்டார, யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி. சிவகரன், தாய்சேய் நல வைத்திய நிபுணர் திருமதி சி. திருமகள், கல்வித்துறைசார் அதிகாரியான வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம் ஆகியோர் அரங்கில் கூடியிருக்க குறைகேள் அரங்கில் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவி கோ.மிறோஜா, கைதடி விக்கேஸ்வரா

பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அந்த இருவரும் மன்றின் முன்வைத்த கருத்துக்கள் இவையாகும்.

அதாவது யாழ். மாவட்டத்தில் ஒரு

பாலியல் தொடர்பான விழிப்புணர்வு இன்மைதான் - தாய்சேய் நல பிரிவினால் அண்மையில் பாலியல் தொடர்பான விழிப்புணர்வினை

செய்வதற்கு யாழ்.பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பிரிவுக்கெனத் தனிப்பிரிவு ஒன்று உள்ளது. எனவே சிறுவர்தொடர்பான எந்த விதமான பிரச்சினையாக இருந்தாலும் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். உரியதீர்வு பெற்றுத்தரப்படும் என்றார். இதில் யாழ் வேம்படி மகளில் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம்,யாழ். மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் க.சிவகரன் ஆகியோரும் தமது துறைசார்ந்த கருத்துக்களை வழங்கினர்.



குறைகேள் அரங்கின் தலைமையாளர்கள்




குறைகேள் அரங்கில் கூடியிருந்தோர்....

லட்சத்து 69ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர். அதில் பெற்றோரை இழந்தவர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட வர்கள். சிறுவர் இல்லங்களில் இணைக்கப்பட்டுள்ளவர்கள் 1350பேர் என்ற தரவுகளோடு சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடுக்கடுக்காகச் சொல்லத் தொடங்கினர்.

அவர்கள் முன்வைத்த சிறுவர் தொடர்பான பிரச்சினைகளில் மூன்று விடயங்களைப் பிரதானப்படுத்தியிருந்தார்கள்.

★ சிறுவர்கள் பாடசாலைகளிலும் சரி, வீடுகளிலும் சரி பாகுபாடு காட்டப்படுகிறார்கள்.

★ சிறுவர்கள் சிறு வயதினிலே வேலைக்கமர்த்தப் படுகிறார்கள்.

★ இளவயதுத் திருமணங்கள் நடைபெறுவதால் சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள் .

இந்த மூன்று விடயங்களையும் உள்ளடக்கியதாக [illegible] பிரச்சினைகளை [illegible]

விளக்கும் வகையில் 'இறுவட்டு' ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதனைப் பாடசாலை

சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தாமே உரிய அதிகாரிகளிடம் பகிரங்கமாக

## குறைகேள் அரங்கு சிறுவர் பிரச்சினைகளை பகிரங்கமாக வெளிப்படுத்த உதவியது

மாணவர்களுக்குப் பாடசாலை மட்டத்தில் காண்பிப்பதற்கும் விளக்கமளிப்பதற்கும், அனுமதி வழங்கப்படுமானால் சிறுவர்கள் மத்தியில் பாலியல் தொடர்பான போதிய விளக்கம் ஏற்படும்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்பதாக யாழ். போதனா வைத்தியசாலையில் 13 வயதுச் சிறுமியொருவர் தாயாகிய நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய இளவயதுத் திருமணத்தைத் தடுப்பதற்கு கிராம மட்டத்தில் உள்ள சமாதான நீதிவான்கள், பதிவாளர்கள், குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள், திருமணங்களை நடத்துகின்ற அந்தணச் சிவாச்சாரியார்கள் ஆகியோர் இணைந்து

எடுத்துச் சொல்லும் விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட 'குறைகேள் அரங்கு' சிறுவர்களுடைய பலகுறைகளும், பிரச்சினைகளும் வெளிக் கொண்டு வருகின்ற களமாக அமைந்தது எனலாம். நிகழ்வினை ஒழுங்குபடுத்தியவர்களுக்கு பாராட்டுத்தெரிவிக்கலாம்.

சிறுவர் தொடர்பாக நிகழ்வுகளை நடத்துகின்றவர்கள் இவ்வாறான ஆக்கபூர்வமாகன நிகழ்வுகளை நடத்தினால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்றார்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - II

34-T-II

### பகுதி A அமைப்புக் கட்டுரை வினாக்களின் தொடர்ச்சி....

01. 2) 2. இழையம் A ஆக்கப்பட்டுள்ள கலக்கூறுகள் எவை?
3. இழையம் Bஇன் பிரதான தொழில் யாது?
4. C, D, E ஆகிய இழையங்கள் தாவரத்தில் அமைந்துள்ள அமைவிடம் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக.
C ..........................................
D ..........................................
E ..........................................
5. C, D, E ஆகிய இழையங்களில் பிரதான தொழில்கள் ஒவ்வொன்றினைத் தருக.
C ..........................................
D ..........................................
E ..........................................

3) கலக்கொள்கைகள் மூன்றினையும் குறிப்பிடுக.
1. ..........................................
2. ..........................................
3. ..........................................


4) தாவரக் கலத்திற்கும் விலங்குக் கலத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் ஐந்தினைத் தருக.

| | தாவரக்கலம் | விலங்குக்கலம் |
|---|---|---|
| 1) | .................... | .................... |
| 2) | .................... | .................... |
| 3) | .................... | .................... |
| 4) | .................... | .................... |
| 5) | .................... | .................... |

02. 1) பின்வரும் இதய நோய்களும் அவற்றிற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளன. எனவே சரியான தொடர்புகளை தொடர்புபடுத்துக.

| இதயநோய்கள் | காரணங்கள் |
|---|---|
| 1 - அங்கைஜனா பெக்டோனிஸ் | A - பற்றீரியா தொற்றால் இதயம் செயல் இழப்பு |
| 2 - மாரடைப்பு | B - போசணைக் குறைபாடு உயர் குருதி அமுக்கம் |
| 3 - என்டா காடிரிஸ் | C - நாடிகளின் விட்டம் குறைவடைதல். |
| 4 - மயோ காடிரிஸ் | D - முடியுரு நாடி செயல் இழப்பு. |
| 5 - உயர் குருதியமுக்கம் | E - இதயத்தசையில் வைரசு தொற்றல். |
| 6 - தாழ் குருதியமுக்கம் | F - இதயத்திற்கு போதியளவு குருதி வழங்கப்படாமை. |
| 7 - இதயத்துவாரம் | G - சோணைஅறை இதயவறைச் சுவர் முற்றாகப் பிரிபடாமை. |

2) பின்வரும் தாவர இராச்சியப் பாகுபாட்டிற்கான அட்டவணை கீழே தரப்பட்டு உள்ளது. ஆங்கில எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தாவரப் பிரிவுகளை எழுதுக.




1. A .......................... 2. B ..........................
3. C .......................... 4. D ..........................
5. E .......................... 6. F ..........................
7. G .......................... 8. H ..........................

3) பின்வருவன சரியாயின் ''சரி'' எனவும் பிழையாயின் ''பிழை'' எனவும் எழுதுக.
01. அணுவின் கருவில் நேர் ஏற்றம் கொண்ட உபதுணிக்கை நியுத்திரன் ஆகும். ( )
02. பூமி 4.5 Billion ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. ( )
03. மூலிகங்கள் அயன் சேர்வைகளின் பிரிகையால் தோன்றலாம்.
04. இயக்கவியல் உராய்வு எல்லை உராய்வு விசையை விட சற்றுக் குறைவானது ஆகும். ( )
05. ஒரு பொருளின் நிறை அப்பொருளின் திணிவுக்கு சமனாகும். ( )
06. வேக - நேர வரைபின் படித்திறன் ஆர்முடுகல் ஆகும். ( )
07. புடைக்கல விழையம் ஒரு வித்திலை தாவரங்களால் காணப்படுவது இல்லை. ( )
08. அங்கிகளின் கலச்சுவாசத்திற்கு உதவும் புன்னங்கள் பச்சையவுருமணி ஆகும். ( )
09. Ribosome தனிமென்சவ்வைக் கொண்ட ஒரு கலபுன்னங்கள் ஆகும். ( )
10. மூலக அணுக்கள் இறுதி சக்தி மட்டத்தில் இருந்து இலத்திரனை இழப்பதால் மாத்திரம் அயன்கள் உண்டாக்கப்படும். ( )


03. சடப்பொருள்கள் மூலகங்களைக் கொண்டது மூலகங்களின் அடிப்படை ஆக்கக் கூறு அலகு அணு எனப்படும்.
1) 1. தாற்றனின் அணுக்கொள்கைகளைத் தருக.
2. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| உப அணுத்திணிக்கைகள் | இலத்திரன் | புரோத்திரன் | நியூத்திரன் |
|---|---|---|---|
| குறியீடு<br>ஏற்றம்<br>H - சார்பாக அணுத்திணிவு<br>அமைந்துள்ள இடம்<br>கண்டுபிடித்த விஞ்ஞானி. | | | |

3. 'அணு நடுநிலையானது'' என்பதை விளக்குக.
4. திணிவெண் கணிப்பதில் இலத்திரன் பயன்படுத்தப்படுவதில்லை என்பதற்கு காரணம் தருக.

2) பின்வரும் பதங்களை விளக்குக.
1. அணுத்திணிவு அலகு:-
..........................................
2. மூல்:-
..........................................
3. அவகாதரோவின் மாறிலி:
..........................................
4. மூலர்த்திணிவு:-
..........................................
5. சமதானிகள்
..........................................


3) கீழேதரப்பட்ட ஆவர்த்தன அட்டவணையைக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




1. வலுவளவு ஒன்றினைக் கொண்ட மூலகங்கள் எவை?
2. இயற்கையில் ஓரணு நிலையில் காணப்படும் மூலகங்கள் எவை?
3. மூலகம் Cயும் மூலகம் Aயும் சேர்ந்து உண்டாக்கும் சேர்வையின் இரசாயன சூத்திரத்தைத் தருக.
4. வினா 3இல் குறிப்பிட்ட சேர்வைக்கான லூயிஸ் இன் கட்டமைப்பினைத் தருக.

4) 1. பின்வரும் சேர்வைகளுக்கான இரசாயன சூத்திரங்களை எழுதுக.
2. கல்சியம் காபனேற்று .................... மக்னீசியம் குளோரைட்டு ....................
3. அமோனியம் காபனேற்று .................... 4. சோடியம் சல்பைட்டு ....................
5. அலுமினியம் ஒட்சைட்டு ....................

04. 1) குறித்த நேரத்தினுள் பொருள் ஒன்றின் அமைவிடம் மாற்றம் அடைதலே அப்பொருளின் இயக்கம் எனப்படும்.




மேலே காட்டப்பட்ட வரைபில் இருந்து கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.
1. ஆரம்ப வேகம் யாது? அதி உயர் வேகம் யாது?
2. புகைவண்டியின் இயக்கத்தை விவரிக்குக.
3. புகைவண்டியின் ஆர்முடுகல் யாது?
4. புகைவண்டி பயணம் செய்த மொத்த தூரம் யாது?
5. புகைவண்டியின் சராசரிக்கதி யாது?

2) $72kmh^{-1}$ எனும் சீரான வேகத்தில் பயணம் செய்த 400kg திணிவுள்ள வாகனம் ஒன்றின் மீது சீரான ஆர்முடுகல் 20 செக்கன்களிற்கு தொழிற்பட்டமையால் வாகனத்தின் வேகம் $144kmh^{-1}$ ஆக மாறியது. பின் ஒரு நிமிடத்திற்கு சீரான வேகத்தில் சென்றது.
1. $72kmh^{-1}$ எனும் வேகத்தை $ms^{-1}$ இற்கு மாற்றுக.
2. வாகனத்தின் இயக்கம் தொடர்பான வேக - நேர வரைபை வரைக.
3. ஆர்முடுகலின் பருமன் யாது?
4. ஆர்முடுகலுடன் வாகனம் பயணம் செய்தபோது தொழிற்பட்ட விசையின் பருமன் யாது?
5. சீரான வேகத்தில் பயணம் செய்யும்போது வாகனத்தின் மீது தொழிற்பட்ட விசையின் பருமன் யாது?

3) கீழே படத்தில் காட்டப்பட்டவாறு தார்கோட்டுப்பாதை ஒன்றில் இயங்கும் கார் ஒன்றின் இயக்கம் தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.




800kg திணிவுடைய காரின் இயக்கத்தின்போது உராய்வினதும் வளித்தடை இனதும் இணைந்த மொத்தவிசை 400N ஆகும். இக்காரின் ஆர்முடுகளில் $1.4ms^{-2}$ ஆகும்.
1. இக்காரின் மீது செலுத்தப்பட்ட விளையுள் விசை யாது?
2. இக்கார் $1.4ms^{-2}$ எனும் ஆர்முடுகலில் இயங்க வேண்டும் எனின், முன் நோக்கிய செலுத்துகை விசையின் பருமன் யாது?
3. இக்கார் ஓய்விலிருந்து $1.5ms^{-2}$ எனும் ஆர்முடுகலுடன் 30 செக்கன்களிற்கு இயங்குமெனின், 30ஆவது செக்கனில் வேகம் யாது?
4. இக்காரின் இயக்கத்தின் முதல் 30 செக்கனில் கார் பயணம் செய்த மொத்த தூரம் யாது?
5. ஒரு பொருளில் புறவிசையினை பிரயோகிப்பதன் மூலம் நிகழும் மாற்றங்கள் நான்கு தருக.

4) 1. வேக - நேர வரைபினை பயன்படுத்தி இரண்டாவது நேர் கோட்டு இயக்க சமன்பாடு S = (U+V/2) t இனை நிறுவிக் காட்டுக.
2. தென்னை மரத்தில் இருந்து கழன்று விழுகின்ற தேங்காயின் இயக்கத்தை காட்டும் வேக - நேர வரைபை வரைந்து காட்டுக.
3. உராய்வு விசை என்றால் என்ன?
4. விசைத் திருப்பம் என்றால் என்ன?
5. ''பனிச் சறுக்கு விளையாட்டின்போது விசையினை பிரயோகிக்காமல் அதிக தூரத்திற்கு வழுக்கிச் செல்லலாம்.'' மேற்படி கூற்றினை விஞ்ஞான ரீதியில் விளக்குக.

மறுபக்கம் பார்க்க....

ஆசிரியர் : திரு.S.T.ஜனார்த்தனன்,
ராஜேஸ்வரி கல்வி நிலையம், கொட்டாஞ்சேனை.
தொ.பே.இல: 077-9522522.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு - I

**33-T-I**


**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. அ. பின்வரும் 1இன் கீழ் காட்டப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் படத்திலும் 11இன் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களை உலகப்படத்திலும் குறித்துக் காட்டுக.
    1) கலாவாவி, புந்தல, அநுராதபுரம், உராந்தோட்டை, பட்டதொம்ப, வெலிகம, சீகிரியா, ...., ...ாந்தை, மகா காமா.
    2) வெனிஸ், ...ன்மார், சீனா, ஜப்பான், பிரித்தானியா, ஈராக், துருக்கி

ஆ. 1) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிவுசெய்க.
    A - கண்டிப் பெரஹராவை ஆரம்பித்த கண்டி இராசதானி மன்னன்.
    B - கொடுங்கோல் ஆட்சியாளன் கலிங்கமகானை தோற்கடித்த மன்னன்.
    C - முதன்முதல் சட்டவாக்க கழகத்திற்கு தெரிவான படித்தவர்.
    D - நல்லூர் ஆலயத்தை அமைத்தவன்.
    (சேர்.பொன்.இராமநாதன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், 3ஆம் பராக்கிரமபாகு, 2ஆம் பராக்கிரமபாகு, செம்பக்க பெருமாள்)


2) கீழே A, B, C, D எனக்காட்டப்பட்டுள்ள கலைப்படைப்புக்களை முறையே குறிப்பிடுக.

A




---------

B




---------

C



---------

D



---------

3) கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
    A - முதலாம் உலகப் போரின் பின் உருவான சங்கம்.
    B - மொகாலயப் பேரரசை உருவாக்கிய மன்னன்.
    C - இலங்கைக்கு புனித தந்த தாதுவை எடுத்து வந்தவன்.
    D - இலங்கை பற்றிக்கூறிய அரபு நாட்டவர்.

## பகுதி - II

02. 1) கீழே A, B, C ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களைப் பெயரிடுக.
    A - மகாவம்சம் எழுதியவர்.
    B - முதன்முதல் பெரியகுளத்தை அமைத்தவன்.
    C - லோக மகா பயவை அமைத்தல்.
2) ஆரியர்கள் பிற்காலத்தில் நீர்ப்பாசனத்துறையினை விருத்திசெய்வதில் கவனம் செலுத்தியமைக்கான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
3) நீர்வள நாகரிக காலத்தில் வெளிநாட்டு வர்த்தகத்துறை விருத்தியடைந்திருந்தமைக்கான சான்றுகள் இரண்டை விளக்குக.
4) பண்டைய இலங்கையில் நீர்ப் பாசனத்துறை விருத்தியடைந்தது என்பதற்கான இரு சான்றுகளை விளக்குக.

03. 1) A - தம்பதெனியா B - கம்பளை C - யாப்பகுவா
மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகளில் இராசதானிகளை அமைத்த மன்னர்களைக் குறிப்பிடுக.
2) பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
3) இராசதானிகள் தென் மேற்கு நோக்கி நகர்ந்த காலத்தில் பொருளாதாரத்துறை சிறப்பாக விருத்தியடையவில்லை. இதற்கான காரணிகள் இரண்டை விளக்குக.
4) இலங்கையில் பௌத்த சமயம் விரைவாக வளர்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய இரு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

04. 1) A - ஒம்புட்ஸ்மன் தெரிவு.
    B - இருசபை கொண்ட பாராளுமன்றம்.
    C - சர்வஜன வாக்குரிமை வழங்கியமை.
மேற்குறிப்பிட்டுள்ள சீர்திருத்தங்களை A, B, C என்ற ஒழுங்கில் குறிப்பிடுக.
2) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள் நான்கை குறிப்பிடுக.
3) இரண்டாம் குடியரசு யாப்பு வழங்கிய மனித அடிப்படை உரிமைகள் நான்கை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.
4) சுதந்திர இலங்கை மக்களுக்கு வழங்கிய சாதக சீர்திருத்தம் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

05. 1) A - முல்லேரியாப்போர்.
    B - குசுமாசனதேவியை இரண்டாவதாக பட்டத்து இராணியாக்கியவன்.
    C - இலங்கையின் இறுதி மன்னன்.
2) கண்டி இராசதானியில் 1ஆம் விமலதர்ம சூரியன் ஆற்றிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக.
3) பிரித்தானியர் மலையக இராசதானியைக் கைப்பற்றி விடுவதற்கு ஏதுவாக அமைந்திருந்த காரணிகள் இரண்டை விளக்குக.
4) அன்னியர்களின் வருகை இலங்கையில் ஏற்படுத்திய சாதக, பாதக விளைவுகள் ஒவ்வொன்றை விளக்குக.

06. 1) இலங்கையில் தேயிலை உற்பத்திக்கு பிரசித்திபெற்ற மூன்று மாவட்டங்களைக் குறிப்பிடுக.
2) 19ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக்கு வழுவகுத்த காரணிகள் நான்கினை குறிப்பிடுக.
3) இலங்கையில் மறுமலர்ச்சி இயக்கங்களின் பிரதான செயற்பாடுகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக.
4) பிரித்தானியருக்கு எதிராக மக்கள் சுதந்திரப் போராட்டங்களை ஏற்படுத்தியமைக்கான இரு காரணங்களை விளக்குக.

## பகுதி - III

07. 1) தென்கிழக்காசியாவில் புத்த சமயம் மத்திய காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.
2) இஸ்லாமியர்கள் இந்தியாவை கைப்பற்றியமைக்கான காரணிகள் நான்கு குறிப்பிடுக.
3) இஸ்லாமியர் ஆட்சி இந்தியாவில் மாற்றம் ஏற்படுத்திய ஆட்சி என்பதை இரு காரணி கொண்டு விளக்குக.
4) டில்லி சுல்தான் பேரரசு வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக.

08. 1) மத்திய கால ஐரோப்பாவில் மானிய முறைமை வீழ்ச்சிக்கு வழிவகுத்த காரணிகள் மூன்றை குறிப்பிடுக.
2) மத்திய காலத்தில் நிலவிய மானிய முறைமையின் நான்கு இயல்புகளைக் குறிப்பிடுக.
3) ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த காரணிகள் இரண்டை விளக்குக.
4) நவீன போக்குவரத்து தொடர்பாடல் முறைகள் உலகை சிறிதாக்கிவிட்டதாக கூறப்படுகின்றது. மத்திய காலத்திலே இந்தச் செயன்முறைகள் ஆரம்பித்துவிட்டது. இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடையினை இரு காரணங்கள் காட்டி விளக்குக.

09. 1) சுதந்திரத்தைத் தொடர்ந்து அமெரிக்கா பின்பற்றிய பிரதான வெளிநாட்டு கொள்கைகள் மூன்றைக் குறிப்பிடுக.
2) ருஸ்யாவில் லெனின் புரட்சியின் மேற்கொள்வதற்கு வழிவகுத்த காரணிகள் நான்கினை குறிப்பிடுக.
3) ரஷ்யாவின் வளர்ச்சிக்கு பின்வரும் தலைவர்கள் ஆற்றிய பணிகளை ஆராய்க.
4) அமெரிக்காவின் வல்லரசுப் போக்கிற்கு வழிவகுத்த இரு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.


10. 1) கீழே A, B, C எனக் குறிப்பிட்டுள்ள நாடுகளின் சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவிய தலைவர்களைக் பட்டியலில் இருந்து தெரிவுசெய்து குறிப்பிடுக.
    A - இந்தியா B - ஜப்பான் C - சீனா
    (ஹீதோயோசி, சங்.யாக்சென், மா.ஓ.சேதுங், மகாத்மாகாந்தி)
2) இந்தியாவில் சிப்பாய்கள் கலகம் விளைந்தமைக்கான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.
3) சீனாவின் எழுச்சிக்குப் பணியாற்றிய தலைவர் ஒருவரைக் குறிப்பிட்டு அவர் பணிகள் பற்றி ஆராய்க.
4) ஜப்பானின் வளர்ச்சியில் மேஜீஜீயாளர்கள் ஆற்றிய பணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

-நிறைவுற்றது-

# விஞ்ஞானத்தின் தொடர்ச்சி.....

## பகுதி B, கட்டுரை வினாக்கள்
## பௌதிகவியல்

01. வீடுகளில் பயன்படுத்தப்படும் மாதிரி விளக்குச் சுற்று கீழே காட்டப்பட்டுள்ளது. இங்கு $B_1$, $B_2$, $B_3$, $B_4$, $B_5$ என 5 குமிழ்களும் $K_1$, $K_2$, $K_3$, $K_4$, $K_5$ என 5 ஆளிகளும் காணப்படுகின்றன.




1) a. இங்கு மின்குமிழ்கள் என்ன நிலையில் இணைக்கப்பட்டுள்ளன?
   b. அவ்வாறு இணைக்கப்பட்டதாலுள்ள அனுகூலங்கள் இரண்டு தருக.
2) குமிழ் $B_2$இல் 100W/ 230V எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.
   a. 100W என்பதால் கருதப்படுவது யாது?
   b. 230V என்பதால் கருதப்படுவது யாது?
   c. குமிழின் இழை தங்குதனால் ஆனது. இங்கு தங்குதன் பயன்படுத்தப்பட பொருத்தமான காரணங்கள் இரண்டு தருக.
3) குமிழ் $B_5$ பூரணவலுவுடன் ஒளிர்கின்றது. அக்குமிழில் 40W/ 230V எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.
   a. குமிழூடு பாயும் மின் ஓட்ட அளவு யாது?
   b. குமிழ் 10 நிமிடங்களுக்கு பூரண வலுவுடன் ஒளிர்ந்தால் நுகரப்பட்ட மின் சக்தி அளவை KWhஇல் தருக.
4) a. A, Bஇன் குறியீட்டு இலக்கத்தைத் தருக.
   b. A, Bஇல் உயிர், நடுநிலை கம்பிகளை முறையே தருக.
5) கடத்தி B ஊடாக மின்பாயும்போது தற்செயலாக புவித் தொடுப்பிற் குள்ளானதுடன் மின் துண்டிப்பு ஏற்பட்டது (பூரணமாக)
   a. இங்கு தொழிற்பட்ட துணைச்சாதனம் எது?
   b. குறித்த சாதனம் தொழிற்படக்கூடிய வேறொரு சந்தர்ப்பத்தைத் தருக.
6) ஆளிகளிலும், மின்குமிழ் தாங்கிகளிலும் தொடர்புபட்ட விடயங்கள் பற்றி குறிப்பிடுக.

| ஆளி | மின்குமிழ் தாங்கி |
|---|---|
| ............................ | ............................ |

02. மனிதன் தினசரி வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு தொழில்களைச் செய்வதற்கு வெவ்வேறு பொறிகளை பயன்படுத்துகின்றான். இதற்காக விசையையும் சக்தியையும் பயன்படுத்த வேண்டும்.
1) இங்கு 2ஆம் வகை நெம்பாக தொழிற்படும் பாக்குவெட்டியின் வரிப்படம் காட்டப்பட்டுள்ளது.
   a. A, B, C ஆகிய தாணங்களில் எத்தானத்தில் பாக்கை வைத்து வெட்டும்போது குறைந்த விசை பயன்படும்?
   b. பாக்கின் நிறை 60g, சுழலிடத்திற்கும் பாக்கிற்கும் இடைத்தூரம் 4cm, பாக்கு வெட்ட பயன்பட்ட எத்தனம் 20g, பாக்கு வெட்டப்பட்ட தானத்திலிருந்து எத்தனம் பிரயோகிக்கப்படும் புள்ளியின் தூரம் 12cm ஆயின், தொகுதியின் திறன் யாது?
2) 2ஆம் வகுப்பு நெம்பிற்கான வேறு இரு உதாரணங்கள் தருக.
3) நீண்ட நாட்கள் பாவிக்காத நிலையிலுள்ள பாக்குவெட்டி கொண்டு பாக்கினை வெட்டுவது கடினமாக இருந்தது என ஒரு மாணவன் கூறினான்.
   a. இதற்கான காரணத்தை சுருக்கமாக விளக்குக.
   b. பாக்குவெட்டியின் பருமன் அல்லது நீளம் அதிகமாக இருக்கையில் வேலை செய்தல் இலகுவாக இருக்கின்றது. இதற்கான காரணத்தை விஞ்ஞான பூர்வமாக விளக்குக.
4) பாக்குவெட்டியைப் போன்று சாய்தளமும் ஓர் எளிய பொறியாகும்.
   a. சாய்தள வகை பொறிகள் இரண்டு தருக.
   b. சாய்தளம் உராய்வற்றது எனக்கொண்டு சாய்வு நீளம் 2mம் சாய்வு உயரம் 1mஉம் கொண்ட சாய்தளம் ஒன்றைப் பயன்படுத்தி 2000N எத்தனத்தை சாய்வூடாக இழுத்துச்செல்ல தேவையான எத்தன அளவை அறிக.
5) 1ஆம், 2ஆம், 3ஆம் வகை நெம்புகளை குறிக்கும் கோட்டுப் படங்களை வரைந்து அதில் L, F, E என்பவற்றை குறித்துக்காட்டுக.
6) அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| நெம்பு வகை | வேகவிகிதம் -1இலும் குறைவு/ 1இலும் கூட/ 1இலும் கூட அல்லது குறைய அல்லது சமன் |
|---|---|
| 1 | ...................................................................... |
| 2 | ...................................................................... |
| 3 | ...................................................................... |

வளரும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது நடக்கும்.....?

**விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்தும் கூட, அரசினால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை, யுத்தம் காரணமாகப் பலர்காணாமல் போயிருக்கின்றமை, அகதி முகாம் களில் வாழ நேர்ந்துள்ள தமிழ் மக்களின் நிலை போன்றவற்றால் ஏற்படும் சர்ச்சைகள் மற்றும் விமர்சனங்களுக்கு முடிவுகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.**

**இந்த விடயங்கள் குறித்து, ஐ.தே.கட்சியின் முன்னணி அரசியல்வாதியான எஸ்.பி.திஸநாயக்காவின் கருத்துக்கள் கடந்த செப்டெம்பர் 27ஆம் திகதிய 'இருதின' பத்திரிகையில் கட்டுரை வடிவில் வெளிவந்தன.**

**அக்கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகின்றது.**

கடந்த 34 ஆண்டுகளாக இந்நாட்டில் இடம் பெற்று வந்த கொடூர யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. விடுதலைப் புலிகளது பயங்கரவாத செயற்பாடுகள் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நாட்டின் தென்பகுதிப் பொதுமக்கள் மத்தியில் இதுவரை நிலவிவந்த மரணபயம் பெருமளவில் குறைந்துள்ளது. தென் பகுதிப் பொதுமக்களைப் போன்றே, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் இந்த மரண பயத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவேண்டும். அவர்கள் மத்தியிலிருந்தும் இந்த மரணபயம் குறைவடைய வேண்டும்.

ஆனால், நிலைமை அவ்விதம் அமையவில்லை. தடுத்து வைக்கும் உத்தரவின் கீழ் பத்தாயிரம் வரையிலானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் காணாமல் போனோர் பட்டியலில் உள்ளடங்குகின்றனர். அவ்விதம் காணாமல் போனோரின் உறவினர்கள் மற்றும் அவர்களுக்கு வேண்டப்பட்டோர் காணாமல் போனோர் தொடர்பாக ஏதாவது தகவல் கிட்டுமா - என்ற ஆதங்கத்தில் அவர்களைத் தேடும் முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றின் மத்தியில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்வோர், நிவாரணக் கிராமங்களில் வாழ்வோர் மற்றும் தமது சொந்த வாழ்விடங்களை இழந்தோர் என்ற வகைகளில் அடையாளப்படுத்தப்படும் 3 இலட்சம் வரையான பொதுமக்கள் தற்போதும் சிறைக்கைதிகள் போன்று வலோற்காரமாக அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் சிலர் இரகசியமான விதத்தில் - எவரும் அறிய இயலாத விதத்தில் சில இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதன் காரணமாக - காணாமல் போனவர்களாகக் கருதப்படும் - இதுவரை உயிருடன் இருக்கின்றனர் என நம்ப முடியாது இருப்போரின் உறவினர்கள், காணாமல் போன தமது உறவினர்கள் எங்காவது இரகசிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கக் கூடுமோ - என்ற நம்பிக்கையில் அவர்கள்

## வடக்கு, கிழக்கின் நிலப்பகுதிகளை அரச அதிகாரத்தை பயன்படுத்தி எந்தத்தரப்பும் அபகரிக்க இடமளிக்கக் கூடாது

குறித்து ஏதாவது தகவல் கிட்டுமா ? என்ற எதிர்பார்ப்பில் காணாமல் போய்விட்ட தமது உறவினர்களைத் தேடி வருகின்றனர்.

இவ்விதம் காணாமல் போனவர்களைத் தேடி அலையும் அவர்களது உறவினர்களை அணுகி அருள்வாக்குக் கூறும் ஆசாமிகள், சோதிடம் கூறுவோர் காணாமல் போன உறவினர்களைத் தேடி அலைபவர்களிடம், அவர்களால் தேடப்படும் உறவினர்கள் ஒழித்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறி அவர்களை நம்பவைத்து வருகின்றனர்.

எவ்வித ஆதாரமுமில்லாமல் எழுந்தமானமாக எதிர்வுகூறி அந்த உறவினர்களது மனதில் நம்பிக்கையூட்டும் இத்தரப்பினர் அவர்களிடமிருந்து பணம் கறந்து கொள்வதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர். இதன் காரணமாக உறவுகளைத் தேடுவோர் தமது அத்தகைய தேடுதல்களை நிறுத்தப் போவதில்லை. அவர்களது முயற்சிகளை வேறெவராலும் தடுத்து நிறுத்து முடியாது. இதன் காரணமாக இத்தகைய குடும்பங்கள் பொருளாதார ரீதியிலும் உள ரீதியிலும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

அரசும், படைகளும் தற்போதும் விடுதலைப் புலிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன. பாதுகாப்புப் படையினரின் இத்தகைய தேடுதல் நடவடிக்கைகளின்போது, விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் படையினரால் கைது செய்யப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் இவ்விதம் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படுவார்களானால் அது தவறாகாது. ஆனால் இவ்விதம் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்படுதல் மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பாக அரசு திறந்த மனதுடனும் புதிய சிந்தனையுடனும் விடயத்தை அணுகிச் செயற்பட வேண்டியுள்ளது.

கடந்த 34 வருட யுத்த வரலாற்றை நோக்கும்போது, அதில் பெரும்பாலான காலகட்டம் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் அதிகாரத்தின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. ஆரம்ப காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் வெவ்வேறு பிரதேசங்கள் வெவ்வேறு ஆயுதக் குழுக்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், கடந்த 34 வருட கால இடைவெளியில் 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை விடுதலைப் புலிகள் அனேகமாக நிர்வகித்து வந்தது என்பது தெளிவானதொரு உண்மையாகும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆங்காங்கே இலங்கை அரசின் இராணுவ முகாம்கள் அமைந்திருந்த போதிலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற வடக்கு, கிழக்குப் பகுதிகளின் முக்கிய நகரங்களில் கூட நிர்வாக நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசனைகளுக்கமையவே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டுமல்லாது இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த தமிழ் வர்த்தகர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் பல தரப்பட்ட அழுத்தங்களுக்கு அனுசரணை வழங்கியே தமது வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டனர். அதுமட்டுமல்லாது விடுதலைப் புலி உறுப்பினர்கள் மலையகப் பகுதிகளிலும் ஊடுருவிச் செயற்பட்டு வந்தனர்.

இவற்றுக்கெல்லாம் மேலாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து சென்று வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் கூட விடுதலைப் புலிகள் தமது பலத்தையும் ஆதரவையும் திரட்டிக்கொண்டனர். குறிப்பாக வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம்கோரி வாழ்ந்துவந்த இலங்கைத் தமிழர்களுடன் விடுதலைப் புலிகள் அமைப்பு நெருங்கிய தொடர்புகளைப் பேணிச் செயற்பட்டு வந்தது.

இத்தகைய பின்னணியில், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்த சகல தமிழ் மக்களும் அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ விடுதலைப் புலிகளுடன் ஏதோ ஒருவித புரிந்துணர்வுடன் தொடர்புபட்டே செயற்பட வேண்டி நேர்ந்தது. வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் குறிப்பிட்ட அக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் வகையில், அவர்களுக்கு ஆதரவான விதத்திலேயே செயற்படவேண்டி நேர்ந்திருந்தது.

அப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த தமிழர்கள் அந்தந்த வேளைகளில் விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கமைய, அவர்களது அறிவுறுத்தல்களுக்கமைய அவர்கள் கோரிய உதவிகளை வழங்க வேண்டியவர்களாகியிருந்தனர்.

தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள் சகலரும் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி மற்றும் வேறு விதத்திலான உதவிகளை வழங்கி அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படவேண்டி நேர்ந்தது. தமிழ்ப் பகுதிகளில் வாழ்ந்து வந்த சகல தமிழ்க் குடும்பங்களிலுமிருந்து இளவயது உறுப்பினர்களை வலோற்காரமாக தமது இயக்கத்தில் விடுதலைப் புலிகள் இணைத்துக்கொண்டனர். அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அரச சேவையில் கடமையாற்றிவந்த அரச ஊழியர்கள் ஒருதலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களையே நிறைவேற்றி வைக்கும் விதத்தில் செயற்பட வேண்டியிருந்தது.

பாடசாலைகளின் அதிபர்கள், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இயங்கிய பாடசாலைகளின் சகல ஆசிரியர்களும்கூட அந்த வேளையில் விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டி நேர்ந்தது.

ஒட்டு மொத்தத்தில் கூறுவதானால், அந்தக் காலகட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த சகல அரசியல் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரும்பாதபோதிலும் கூட விடுதலைப் புலிகளுடன் ஏதோ ஒரு வகையில் நம்பிக்கையுடனும் புரிந்துணர்வுடனும் செயற்படுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மாற்றுவழியேதும் இருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட இயலாதோர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தங்கிச் செயற்பட இயலாது போயிருந்தது. அதேவேளை விடுதலைப் புலிகளுடன் கருத்தளவில் [illegible] தமிழ்க் குடும்பத்தினர் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே சென்று வாழும் நிலைகூட விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டது.

இத்தகைய பின்னணியின் மத்தியில் நாட்டின் வட பகுதியில் பொது மக்களது அத்தியாவசியப் பாவனைப் பொருட்களின் விலை பெருமளவில் அதிகரித்து, அவர்களது பாவனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமநிலை நிலவியது. இதன் காரணமாக, தமது வாழ்க்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இப்பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களில் குறிப்பிட்ட ஒரு தரப்பினர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். தமது பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி சிறக்க வேண்டு என்ற நோக்குடன் அவர்களில் ஒரு தரப்பினர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். தமது இளைய சகோதர சகோதரிகள் கல்வியில் முன்னேற்றம் காணவேண்டுமென்ற நோக்குடன் குடும்பத்தின் மூத்த பிள்ளைகள் விடுதலைப் புலிகளது படைப் பிரிவுகளில் இணைந்து செயற்படவிழைந்தனர்.

அதே விதத்தில் தமது வயதான பெற்றோரின் பொருளாதாரச் சிரமங்களை நீக்கி உதவும் நோக்கிலும் அவர்களது பிள்ளைகளில் பலர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டனர். அதேபோன்று வேறுசில இளைஞர்கள் நோயாளிகளான தமது பெற்றோருக்கு - அவர்களது சுகவீனத்துக்கான அவசிய மருந்து வகைகளை வாங்கிக்கொடுத்து உதவுவதற்காகக்கூட விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்கொண்டு வந்த நிர்வாகக் கட்டமைப்புகளில் பல தரப்பட்ட பதவிகளில் இணைந்து செயற்பட்டனர்.

இன்று சட்டத்தின்படி இத்தகைய தரப்பினர் அனைவருமே விடுதலைப் புலிகள் என்ற முத்திரை குத்தப்பட்டுக் கணிக்கப்படுகின்றனர். இவர்களில் சகலருமே விடுதலைப் புலிகளுக்கு ஏதோ ஒரு வகையில் உதவியவர்களாகவே அரசினால் கணிப்பிடப்படுகின்றனர்.

இத்தகைய பின்னணியை அடிப்படையாகக் கொண்டு நிலைமையை நோக்குவோமானால், இன்று அகதி முகாம்களில் வாழும் சகலரையும் ஏதோ, வகையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தவர்களாக அடையாளப்படுத்தி விட இயலும். இதன் அடிப்படையில் அகதி முகாம்களில் தற்போது வாழநேர்ந்திருப்போர் எவரும் முகாம்களை விட்டுத் தப்பிச் சென்றுவிட இயலாதவாறு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்த அகதிமுகாம்களில் வாழும் அனைத்துப் பொது மக்களுமே மரணபயத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்த அகதிமுகாம்களில் கடும் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இத் தமிழ்ப் பொதுமக்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தற்போது மரணபயத்துடனே வாழ்ந்து வருகின்றனர்.

முகாம்களில் வாழும் தமிழ் மக்கள் எவரும் தமது விருப்பின் பேரில் - சுய விருப்பத்துடன் இன்று இந்த அகதிமுகாம்களில் தங்கி வாழவில்லை. இவர்கள் அனுமதி அளிக்கப்படுவார்களானால் தத்தமது கிராமங்களுக்குத் திரும்பிச் சென்று வாழ பின் நிற்கப்போவதில்லை.

நிலக்கண்ணிவெடிகள் குறித்து இவர்கள் பெரிய அளவுக்கு அலட்டிக்கொள்ளப்போவதில்லை. அவை குறித்து இவர்கள் அச்சம் அடையப்போவதில்லை. கண்ணிவெடிகள் மத்தியில் வாழ்ந்த அனுபவத்தை இவர்கள் ஏற்கனவே பெற்றுள்ளனர். எங்கு கண்ணி வெடி அபாயம் உள்ளது? எங்கு கண்ணிவெடி அபாயம் கிடையாது - என்பது குறித்த விவரங்களெல்லாம் இவர்களுக்குத் தெரியும். அத்தகைய அனுபவங்கள் இவர்களுக்கு ஏற்கனவே வாய்த்திருந்தது.

எனவே, அரசு முடிந்த வரையில் விரைவாக இத்தகைய பொதுமக்களை தடுப்பு முகாம்களிலிருந்து விடுவித்து அவர்களைத் தத்தமது முன்னைய வாழ்விடங்களுக்குச் சென்று குடியேற்ற வேண்டும்.

அவர்கள் தமது முன்னைய பாரம்பரிய வாழ்விடங்களில் மீண்டும் குடியேறித் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு அவசியமான புனர்வாழ்வு நடவடிக்கைகளை அரசு ஆரம்பிக்க வேண்டும்.

பாடசாலைகள் மட்டத்தில் இதனை அரசு முன்னெடுக்க இயலும். அரச அலுவலகங்கள் மட்டத்தினூடாகவும் இத்தகைய புனர்வாழ்வுத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க இயலும். தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பாகவும் அரசு இத்தகைய புனர்வாழ்வுத் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்த உற்சாகம் காட்டிச் செயற்பட வேண்டும்.

மொத்தத்தில் இவ்விதம் அகதி முகாம்களில் வாழும் பொதுமக்கள் தாம் சுதந்திர நாடொன்றில் ஜனநாயக சுதந்திரத் தன்மை கொண்ட பிரஜைகளாக வாழ்கிறோம் [illegible] உணர்வுடன் வாழத்தக்கதொரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதற்கு அவசியப்படும் சகல நடவடிக்கைகளையும்



அரசு மேற்கொள்ள வேண்டும்.

அவர்களது மனங்களில் தற்போது நிலவிவரும் மரண பயம் அவர்கள் மனங்களிலிருந்து அற்றுப் போகத்தக்க நிலையை அரசு உருவாக்கவேண்டும். அவர்களது மனங்களில் நிலவும் சந்தேக உணர்வு அகலும் வகையிலான நிலையொன்றை ஏற்படுத்த அரசு செயற்பட வேண்டும்.

அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்றோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட மீளவும் வட புலத்தில் ஆயுதப் போராட்டமொன்று உருவாவதை எவ்விதத்திலும் விரும்ப மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்வதில் அரசுக்கு எந்தவொரு சிக்கலும் இருக்கமுடியாது.

இந்நாட்டில் சிங்களப் பெரும்பான்மை இனத்தவர்களுக்குரிய உரிமைகள் தங்களுக்கு மறுக்கப்படுகின்றன என வடக்கு, கிழக்குப் பகுதிவாழ் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் மனப்போக்கை அகற்றிவிடும் விதத்தில் செயற்பட வேண்டியது அரசின் கடமையாகும்.

ஏனைய பகுதிகளைப் பேன்று வேறுபாடு எதுவுமின்றி நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அவசியமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நாட்டின் நிர்வாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அரசு தயாராக உள்ளது என்பதனை செயல்வடிவில் காட்டவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அரசு நடத்தும் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் அரசின் அதிகாரத் தலையீடு இருக்க மாட்டாது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய விதத்தில் அரசு செயற்பட வேண்டும்.

அந்த வகையில் நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் தாம் விரும்பும் அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உண்டென்பதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானது.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தத்தமது பூர்வீக வாழ்விடங்களைக் கட்டுப்பாடு எதுவுமின்றி மீளப் பெற்றுக் குடியேறி வாழ்வதற்கான உதவி ஒத்தாசைகளை அரசு வழங்கவேண்டும்.



வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள பெறுமதிமிக்க நிலப்பகுதிகள், காணிகள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தவொரு தரப்பும் அவற்றை அபகரிக்கப்பட அரசு இடமளிக்கக் கூடாது. வட பகுதியில் தமது வர்த்தக நடவடிக்கைகளில் பாதிப்பைச் சந்தித்த வர்த்தகர்கள், தமது வர்த்தக நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசு அவசியமான உதவிகளை வழங்கி உதவவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடங்களில் தற்போது இயங்கிவரும் இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். அரசுக்குச் சொந்தமான பொது இடங்களுக்கு அவற்றை இடம்மாற்றி, தனியாருக்குச் சொந்தமான அவர்களது காணி மற்றும் கட்டடங்களை உரிமையாளர்களிடம் வழங்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் கூறுவதானால், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள், இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தினரான சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவிக்கும் விதத்தில், அரச பாதுகாப்புடன் சுதந்திரமாக வாழ எம்மால் முடிந்துள்ளது என்ற உணர்வை அவர்களது மனங்களில் ஏற்படுத்தத்தக்க விதத்தில் அரசு பக்கச்சார்பற்று செயற்பட வேண்டியுள்ளதென்பதை வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்

## மூளாய் பிரதேசத்துக்கு சந்தை அமைக்க நிதி

யாழ்ப்பாணம்,ஒக்.13

மூளாய் பிரதேசத்துககு சந்தை அமைப்பதற்கு உலகதரிசம் நிறுவனம் 10 லட்சம் ரூபா வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவ்தற்கு உலகதரிசனம் நிறுவனம் வலி.மேற்கு பிரதேசசபைச் செயலாளர் அ.புத்திசிகாமணியுடன் ஆலோசித்து வருவதாகக் கூறப்பட்டது. (203-302)

## கண்ணகை அம்மன் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

நவாலி-களையோடை கண்ணகை அம்மன் வீதி மீள்புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

கடந்த 32வருடங்களுக்குப் பின்னர் புனரமைப்புப் பணி இடம்பெற்று வருவதாக லயன் சி.சிவராஜீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை நவாலி வடக்கு நாச்சிமார் வீதி மீள்புனரமைப்புப் பணிகள் குறிப்பிட்டளவு நிறைவடைந்துள்ளதாகவும் ஏனைய பகுதியும் விரைவில் புனரமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203-302)

## மதகு புனரமைப்பு

நவாலி,ஒக்.13

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்திற்கு அருகிலுள்ள நவாலி பிரதான வீதியிலுள்ள மதகு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் அவ்வீதி மூடப்பட்டு அருகிலுள்ள வெள்ளம் ஓடும் வாய்க்காலூடாகப் போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (203-100)

## கூட்டங்கள்

நவாலி,ஒக்.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும், விவசாய குழுக் கூட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

விவசாயக்குழுக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நண்பகல் 12 மணிக்கும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-100)

## மரத்திலிருந்து தவறிவீழ்ந்து மாணவர் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

மரங்களில் ஏறியபோது தவறிவீழ்ந்து இரு மாணவர்கள் காயமடைந்தனர்.

வெவ்வேறு சம்பவங்கள் மீசாலை, மந்துவில் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

மீசாலையில் நாவல் மரத்திலிருந்து வீழ்ந்து எஸ்.மகிந்தன் (வயது 14)என்பவரும், மந்துவிலில் மாமரத்திலிருந்து வீழ்ந்து ஏ.அசோகன் (வயது 14)என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (203-207)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் கூ.சங்கத்துக்கு 75 அங்கத்தவர்

யாழ்ப்பாணம்,ஒக்.13

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலையின் கூட்டுறவுச் சங்கத்தில் 75 பேர் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர்.

இந்த வைத்தியசாலைக்கு மேலும் அங்கத்தவர்களை இணைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய நிர்வாகசபையை அமைக்கவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (203-224)

## தேங்காய் விழுந்து காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

மரத்திலிருந்து தேங்காய் வீழ்ந்ததை அவதானித்த வயோதிபர் கையினால் தடுக்க முற்பட்ட வேளையில் தேங்காய் கையைத் தாக்கி காயப்படுத்தியது.

இச்சம்பவம் சங்கத்தானையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆர்.சிதம்பரநாதன் (வயது 64) என்பவர் கையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (203-207)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரங்கள் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய மூன்று உழவு இயந்திரங்கள் சாவகச்சேரி நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த உழவு இயந்திரங்களின் உரிமையாளர்கள் தமது பெயரில் முழு ஆவணங்களையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கும்வரை உழவு இயந்திரங்களைத் தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஏற்கனவே மூன்று லொறிகள் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியமைக்காக எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம்திகதி வரை நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-207)

## மின்சார இணைப்பு வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.13

பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதிக்குள் வசிக்கும் யாவத்தை மக்களுக்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்கப்படும் என கூறிய போதிலும் இதுவரை மின் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு மின்சாரம் வழங்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச செயலரிடம் கோரியுள்ளனர்.

கடந்த 6 மாதகாலமாக இவ்விணைப்பு இன்றி பிரான்பற்று யாவத்தை மக்கள் இருளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-302)

## மானிப்பாய் தபாலகத்தில் அஞ்சல்தின நிகழ்வு

நவாலி,ஒக்.13

உலக அஞ்சல் தினம் மானிப்பாய் தபாலகத்தில் கடந்த 9 ஆம்திகதி அஞ்சல் அதிபர் செல்வி முத்திலிங்கம் நாகமணி தலைமையில் கொண்டாடப்பட்டது.

மங்கள விளக்கினை வண.பிதா அருட்திரு.அன்ரனிப்பிள்ளை அடிகளாரும், சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் சிவகுமாரும் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை மானிப்பாய் உதவித் தபால் அதிபர் நடராசா மோகனதாசும், தபால் திணைக்களக் கொடியினை அஞ்சல் அதிபர் செல்வி மு.நாகமணியும் ஏற்றிவைத்தனர். (203-100)

## சுயதொழில் முயற்சிக்கு சிறுகடன்தொகை

சுன்னாகம்,ஒக்.13

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 125 இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கென சிறுகடன் தொகை வழங்கப்படவுள்ளது.

யு.என்.டி.பி. நிறுவனத்தால் ஆறு மில்லியன் ரூபா இத்திட்டத்திற்கு வழங்கப்படவுள்ளது. இக்கடன் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென 5 சிக்கன கூட்டுறவுச் சேமிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதோடு, அவற்றின் நிர்வாக உறுப்பினர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர்ந்த ஐந்து கிராமங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (201-38)

## 'டயலொக்' கோபுரத்தின் வேலைகள் பூர்த்தி

சுழிபுரம்,ஒக்.13

பண்ணாகம், விசவத்தனைக்கு அருகில் அமைக்கப்பட்ட டயலொக் கோபுரத்தின் வேலைகள் பூர்த்தியடையவுள்ளதால் இந்தமாத நடுப்பகுதியில் மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கை சிங்களத் தொழிலாளர்களே இந்த வேலைகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204-28)

## பஸ் தரிப்பிடம் புனரமைப்பு

சுழிபுரம்,ஒக்.13

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

துரையப்பா றேட் நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட இந்த பஸ்தரிப்பிடத்தில் சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகள் தங்கிச் செல்வதற்கு வசதியாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-28)

# சிறுவர், இளைஞர்களது நன்மை கருதி செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

சுன்னாகம்,ஒக்.13

யு.என்.டி.பி.நிறுவனம் சிறுவர்கள், இளைஞர்களது நன்மை கருதி பல்வேறு செயற்றிட்டங்களை மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

சண்டிலிப்பாய், வேலணை, தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சாந்தைக் கிராமத்திலுள்ள நூல் நிலையமும் ஆரம்ப சுகாதார நிலையமும் அமைக்கப்படவுள்ளன.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அல்லைப்பிட்டி கிராமத்தில் நூல் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் உளநலம் குன்றிய 10 பிள்ளைகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கென ஒன்றரை மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-38)

## எழுத்தாளர் ஒன்றியத்துக்கு 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

நல்லூர்,ஒக்.13

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்களைக் கொள்வனவு செய்து படைப்பாளிகளுக்கு உதவும் வகையில் யாழ்.மாவட்ட எழுத்தாளர் ஒன்றியத்திற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி 2மில்லியன் ரூபா நிதியுதவி செய்துள்ளார்.

ஒன்றியத் தலைவர் கலாநிதி க.குணராசா இத்தகவலைத் தெரிவித்தார். (203- 111)

# வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச சபையில் 75 வேலைத்திட்டங்கள்

மன்னார்,ஒக்.13

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மன்னார் பிரதேச சபையில் 75 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மன்னார் பிரதேசசபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தினை முன்னெடுக்க இதுவரை 75 மில்லியன் ரூபா நிதி கிடைக்கவுள்ளதாகவும் இதன் மூலம் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மன்னார் மக்களுக்குக் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மாநாட்டிலும் மன்னார் பிரதேசசபை கலந்து கொள்ளும் என மன்னார் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (203-302)



விஜயதசமி தினத்தன்று யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஏடு தொடக்குதல் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

கல்லூரி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி, செல்வி தாரணி திருக்கேதீஸ்வரனுக்கு ஏடு தொடக்குவதைக் காணலாம்.

# வாசகர் திருமுகம்

## மின் இயந்திரம் என்றால் வாசனை வீசாதா?

யாழ்ப்பாண நகரின் வடக்குப் பக்கத்தில் உள்ள அரைக்கும் ஆலையில் நனைந்த அரிசியை திரித்து வறுப்பதற்காக மாதமொருமுறை நான் கொடுப்பதுண்டு. இது போன்றே கடந்த மாதம் 26ஆம் திகதி திரிப்பதற்காக கொடுத்த நனைத்த அரிசியில் சிறு பிள்ளைகளின் உணவிற்காக பயறு, உழுந்து, ஏலக்காய் என்பவற்றைக் கலந்து கொடுத்திருந்தேன், வழமைபோலவே பற்றுச்சீட்டினைத் தந்து மூன்று மணி நேரம் கழித்து வாருங்கள் எனக் கூறப்பட்டது. மூன்று மணி நேரம் கழித்து மாவினைப் பெற்றுக் கொண்டபோது மாவில் பயறு, உழுந்து, ஏலக்காய் இவற்றின் வாசனை ஏதும் வீசாமையினால் அதிர்ச்சியடைந்தேன். உண்ணும் உணவில் மூன்று மணி நேரத்தில் அரங்கேறிய இந்த மோசடி பற்றி ஆலையின் முகாமையாளரிடம் கேட்டபோது ''இது ஒன்றும் வீட்டு வறுவல் இல்லை கரண்டில (மின் இயந்திரம்) வறுக்கிறது. வாசனை ஏதும் வீசாது'' என்றார். அதுமட்டுமன்றி ''உங்களிடம் தரப்பட்ட பற்றுச் சீட்டு இலக்கமும் உங்களுக்குரிய மாப்பையில் உள்ள பற்றுச் சீட்டின் இலக்கமும் ஒரே இலக்கங்களே. மோசடி ஏதும் இல்லை'' என்றும் கூறினார். மின் இயந்திர வறுவை இவ்வாறான மோசடியைச் செய்ததா? இல்லையேல் அதை இயக்கியோர் செய்தார்களா? என்பது சகல இல்லத்தரசிகளுக்கும் தெரிந்த விடயம். மேலும் மாவினைப் பாவனைக்குட்படுத்தியபோது பழுதாய்ப்போன உழுத்த அரிசி வாசனை வீசியதுடன் பாவனைக்குதவாத மா என்பதும் தெரியவந்தது. இவ்வாறான விடயங்களுக்கு எங்கே நீதி கிடைக்கும்? என்னைப்போல் இன்னும் எத்தனைபேர் ஏமாறப் போகிறார்கள்?'' இதற்குப் பொறுப்புக் கூறுபவர்கள் யார்?

*யாழ்ப்பாணம்.* பரணி.

## அதிகாரிகள் கவனிப்பார்களா?

எமது கிராமத்தில் கடந்த காலத்தில் உலகவங்கி வீட்டுத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குகீழ் உட்பட்டவர்களுக்கு என வீடுகள் கட்டிக் கொடுக்கவெனப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட சிமெந்துவிலை அதிகரிப்பினாலும் மணல் தட்டுப்பாட்டாலும் பல பயனாளிகள் தமது வீட்டு வேலையை பூரணமாகச் செய்து முடிக்க முடியாமல் அரையும் குறையுமாக நிறுத்தியுள்ளனர். பயனாளிகள் தற்பொழுது பொருள் கடனாளிகளாகி தமது தங்க ஆபரணங்கள் எல்லாவற்றையும் விற்றும் அடகுகள் வைத்தும் தங்களது வேலைகளை முழுமையாகச் செய்து முடிக்க முடியாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, அரச அதிகாரிகளோ கவனமெடுப்பதாகத் தெரியவில்லை. பயனாளிகளோ யாரிடம் போய் கேட்பது என்று தெரியாமல் அலைந்து திரிகின்றனர். சிலநேரங்களில் கிடைக்க வேண்டிய நிதி கிடைக்குமா? கிடையாமல் போகுமா? என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இவ்விடயத்தை அதிகாரிகள் கவனத்திற்கு எடுப்பார்களா?.

*கோப்பாய் வடக்கு.* *ந.கனகலிங்கம், சமூகசேவையாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் சங்கமம் சிறுவர் இல்லம் நடத்திய சிறுவர்தின விழா அண்மையில் கோப்பாய் வடக்கு புனித சூசையப்பர் ஆலயத் திறந்த வெளியரங்கில் இடம்பெற்றபோது சங்கமம் நிறுவன இயக்குநர் அருட்பணி அ.அமலதாஸ் (அ.ம.தி.) அடிகள், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறுவர் நாடகத்தின் ஒரு காட்சியையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : கோப்பாய் செய்தியாளர்)

# இந்து சமுத்திர அலை-9 : ஒத்திகை நிகழ்வு நாளை

இந்து சமுத்திர சுனாமி பேரழிவு தொடர்பான ஒத்திகை நிகழ்வில் இலங்கையும் கலந்து கொள்ளவுள்ளது.

உலக அனர்த்த தவிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை இந்து சமுத்திர புரந்த கடலில் சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பரந்த கடலில் நடைபெற இருக்கும் சுனாமி பேரழிவு தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இந்து சமுத்திரத்தை சுற்றியுள்ள 18 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

கடந்த 26.12.2004 இல் இடம்பெற்ற இந்து சமுத்திர சுனாமி பேரழிவினை அடுத்து நவீன வடிவில் உருவாக்கப்பட்ட, இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை, தணிப்பு முறைமை ஆகியவற்றின் ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கென முதற்றடவையாக நாளை இடம்பெறவிருக்கிறது.

எச்சரிக்கை முறைமையின் கீழான பலவீனங்கள், அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பலவீனங்கள், புதியதொழில் நுட்பம், தொழில் நுணுக்கம் ஆகியன இந்த ஒத்திகை மூலம் இனம் காணப்படவுள்ளன. ஆசிய-தென்னாசிய பிராந்தியம் முழுவதிலும் தயார் நிலையை அதிகரித்து ஒருங்கிணைப்புப் பணிகளை விருத்திசெய்வதும்- எதிர்காலத்தில் மக்களை சுனாமிப் பேரழிவில் இருந்து பாதுகாப்பதும் இதன் நோக்கமென்று 'யுனஸ்கோ' தெரிவித்துள்ளது.

இந்த ஒத்திகைப் பயிற்சிக்கு இந்து சமுத்திர அலை-09 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**செ.ரமேஷ்**

இந்து சமுத்திரத்தில் உள்ள நாடுகள், அவற்றின் தொடர்பாடல் வழிமுறைகளை ஆராய்ந்து சுனாமி எச் சரிக்கைகளையும், அவசரகால பதில் நட வடிக்கைகள், அதற்கான முன்னேற்பாடுகள், மாற்றங்களையும் மதிப்பீடு செய்து அவசரகால தயார் நிலையை ஊக்குவிக்க உதவும்.

அண்மைக்காலங்களில் நிக்கோபார், இந்தோனேசியா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஆகிய நாடுகளில் சுனாமி சம்பந்தமான தொழில்நுட்பங்களையும், சூத்திரங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூத்திரங்களைக் கொண்டுள்ள நாடுகளும் இந்த ஒத்திகை நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளன.

கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் சுனாமி தொடர்பான எச்சரிக்கை தொடர்பாகவும் அதனால் ஏற்படும் அனர்த்தம் தொடர்பாகவும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரனால் முன்னெச்சரிக்கை ஒத்திகை பார்க்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த 26.12.2004 இல் இடம்பெற்ற சுனாமி அழிவின் வடு இன்னும் மாறாத சோக நிகழ்வாக மக்களை ஆழ்ந்து நிற்பது தெரிந்ததே.

# 20 மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண் குறித்து நீதிமன்றம் பணிப்புரை

## சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைப்பு

கொழும்பு, ஒக். 13

கடந்த 20 மாத காலத்துக்கும் மேலாக தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண்ணை விடுதலை செய்வது தொடர்பான தீர்மானத்தை சட்டமா அதிபர் திணைக்களம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி தவறாமல் மன்றுக்கு அறிவிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர் சிராணி திலகவர்த்தன தலைமையில் சக நீதியரசர்களான கே.ஸ்ரீபவன் சந்திர ஏக்கநாயக்க ஆகியோர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் குறித்த தமிழ் யுவதியை விடுதலை செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் உறுதியான இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு சரியாக ஒருமாத கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த யுவதியை விடுதலை செய்வதா? அல்லது யுவதிக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்வதா என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தீர்மானத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் இந்நீதிமன்றுக்கு அறிவிக்கத் தவறும் பட்சத்தில் தாம் யுவதியை நிரபராதி என விடுதலை செய்வோம் என இந்நீதியரசர்கள் ஆயம் தெரிவித்தது.

மன்னாரைச் சொந்த இடமாகக் கொண்டவரும், 11 வயதுப் பெண்குழந்தை ஒன்றின் தாயுமான அருள்வாசகம் றொஷானி (வயது - 33) என்பவர் வெள்ளைவானில் வந்தோரால் 2008 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டார்.

அவரை வெள்ளைவானில் கொண்டு சென்றவர்கள் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் என்று பின்னர் தெரிய வந்தது.

அவர்கள் 17 நாள்களின் பின்னர் குறித்த யுவதியை கொழும்புக்குக் கொண்டுவந்து ஆரம்பத்தில் பூசா தடுப்பு முகாமிலும் பின்னர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வெலிக் கடைச் சிறையின் பெண்கள் பிரிவிலும் தடுத்து வைத்துள்ளனர்.

தாம் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டதாகவும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 20 மாத காலமாக தமது குழந்தைக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாத நிலையில் குழந்தை உளரீதியான தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கைதும், தடுத்து வைப்பும் அவரின் அடிப்படை உரிமைகள் மீதான மீறல்கள் என்று இந்நீதிமன்றம் பிரகடனப்படுத்துவதுடன் அவரை விடுதலை செய்யவேண்டுமென உத்தரவு பிறப்பிக்க வேண்டுமெனக் கோரியுள்ளார். (அ-சி)

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.13

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபாந்தாட்ட காலிறுதி ஆட்டங்களில் நாளை புதன்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பி.ப.1.45 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**13 வயதுப்பிரிவின் கீழ்:**

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
* மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம் எதிர் நவாலி அட்டகிரி சைவவித்தியாலயம்.

**16 வயதுப்பிரிவின் கீழ்:**

* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை ஆர்.சி.வித்தியாலயம்.
* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. (203-6)

## திருநாள் திருப்பலி

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை தேவாலயத்தின் திருநாள் திருப்பலி இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு அருட்பணி மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலைத்திருப்பலிபிற்பகல் 4.30மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் செபமாலைப் பவனியுடன் விளாவெளிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட பத்திமா அன்னையின் திருச்சொரூபம் ஆசீர்வதித்து நேர்ந்தளிக்கப்படும். (203-112)

## உரத்துக்குப் பதிவு செய்தோரை பெற்றுக்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.13

மல்லாகம் விவசாய சம்மேளனத்தில் 2009-2010ஆம் ஆண்டுக்குரிய காலபோக நெற்செய்கைக்கான முதலாம் கட்ட உரத்தினைப் பெறுவதற்குப் பதிவு செய்தோரில் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்னர் சண்டிலிப்பாயில் அமைந்துள்ள கீரிமலை கமநல சேவை நிலையத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த உரத்தைப் பெறத் தவறியவர்கள் 2ஆம், 3ஆம் கட்ட உரத்தினைப் பெறத் தகுதியற்றவர்கள் என மல்லாகம் விவசாய சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (204)



டீ.எஸ்.ஐ.காலணி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் காட்சி அறை யாழ்.நகரில் திறந்து வைக்கப்பட்டபோது டீ.எஸ்.ஐ.நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டீ.கே.ராஜபக்ஷ காட்சி அறையைத் திறந்து வைப்பதையும் நிறுவனத்தின் சில்லறை விற்பனை உதவி முகாமையாளர் நிஷாந்த ஹாமச்சி, யாழ். மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜனத்குமா [illegible] பதையும் காட்சியறையையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: தமிழரசன், உமா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்து தமிழக எம்.பிக்களின் யாழ்.வருகை வெறும் பம்மாத்துத் தானா?......

''எல்லோரும் வந்து பார்வையிட்டுச் செல்வதற்கு இலங்கையில் உள்ள நலன்புரி நிலையங்கள் மிருகக்காட்சிச் சாலைகள் அல்ல" என்று இந்தியாவுக்கான இலங்கைத் துணைத்தூதர் கிருஷ்ணமூர்த்தி கூறியது தமிழகத்திலிருந்து இந்தியத் தூதுக்குழுவினரைப் பொறுத்தவரை சரியானதாகவே தோன்றுகின்றது. ஏனெனில் நலன்புரி நிலையங்களைப் பார்வையிட்டு மக்களின் அவலங்களை நேரில் கண்டுணர்ந்து அந்த அவலங்களைப் போக்குவதற்கான எண்ணத்தோடு வந்தவர்கள் போல அவர்களின் செயற்பாடுகள் அமையவில்லை. ஒரு சுற்றுலாப் பயணக் குழுவைப் போலவே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துப்பேரின் நிகழ்ச்சிநிரலும் அமைந்துள்ளது. இதனால் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருந்த மக்களின் நம்பிக்கைகள் எல்லாம் புஷ்வாணமாகிப் போயுள்ளன.

முதற்கோணலே முற்றும் கோணல் என்பது போல, இந்திய நாடாளுமன்றக் குழுவினரின் முதலாவது நாள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்த கிழக்கு மாகாண விஜயம் எவ்வித காரணங்களும் கூறப்படாமலேயே இரத்துச் செய்யப்பட்டது. இன்னமும் இதற் குரிய காரணங்கள் சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்படவேயில்லை. தமிழ்க் கட்சிகளோடு கலந்துரையாடியதோடு மட்டுமே இந்திய நாடாளு மன்றக் குழுவினரின் முதல்நாள் முடிவடைந்தது.

இரண்டாம் நாளில் (11.10.2009) காலை 8.30 இற்கு யாழ்ப்பாணத்திற்கு இந்திய நாடாளுமன்றக் குழு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவுக்கு வரவேற்பு நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியிருந்த யாழ். பொது நூலக கேட்போர் கூடத்திற்கு 8 மணிக்கு முன்னதாகவே குடாநாட்டின் முக்கியப் பிரமுகர்கள், அரச உயரதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள், சமூகசேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்போர் சென்று காத்திருக்கத் தொடங்கினர். காத்திருந்து காத்திருந்து விழிகள் பூத்ததுதான் மிச்சம். 10.30 மணிவரை யும் நாடாளுமன்றக் குழுவினர் வரவேயில்லை. பொதுநூலகத்திற்கு வெளியே குழுமியிருந்த ஏராளமான பொதுமக்கள் இதனால் மனம் வெறுத்துப் போய் திரும்பிச் செல்லத் தொடங்கி விட்டனர். அந்தநேரத்தில் பெரியமனது பண்ணி வானத்தில் ஹெலிகள் வட்டமிட்டு வந்திறங்கின. அதிலிருந்து இந்தியக் குழுவினர் பரபரப்போடு இறங்கினர். அவர்கள் இறங்கிய வேகத்தைப் பார்த்தபோது அடுத்த நொடியே மக்களின் அவலங்களை தீர்த்துவைத்து விடுவார்கள் போலத் தெரிந்தது! ஆயினும் அணிவகுப்பு மரியாதையோடு உள்நுழைவதில் காட்டிய அவசரமும் அக்கறையும் மக்களின் பிரச்சினைகளை செவிமடுப்பதில் அவர்கள் சிறிதளவேனும் காட்டவில்லை.எல்லாம் செய்கிறோம் என்ற ஒற்றைச் சொல் 'மந்திரம்'.

இந்தியக் குழுவினர் பொது நூலகத்துக்குள் உள்நுழையும் முன்னர் அவர்களைச் சூழ்ந்துகொண்ட பொதுமக்கள் கைகூப்பி, கண்ணீர்மல்கி ''முகாம்களில் வாடும் எங்கள் உறவுகளை விடுவிக்க ஏற்பாடு செய்யுங்கள். இத்தனை நாளும் நாங்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும் போதும். இனியும் அந்த வாழ்வு வேண்டாம்'' என்று நெஞ்சுருகும் வகையில் நெகிழ்வுடன் இந்தியக் குழுவினரின் கைகளைப் பற்றியவாறு கூறினார்கள். ஆனால் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தையேதும் கூற மறந்த இந்தியக் குழுவினரின் முகங்கள் இயந்திரத்தனமாக இறுகியே இருந்தன. அவர்களின் இதயங்கள் மக்களின் அவலமொழி கேட்டு கொஞ்சமேனும் இளகியதாகத் தெரியவில்லை. ''எல்லாம் செய்கிறோம்'' என்ற ஒற்றைச் சொல்லை மட்டும் பதிலாகக் கொடுத்துவிட்டு விடுவிடென்று வரவேற்பு நிகழ்வுக்காக நூலகத்துக்குள் சென்றுவிட்டார்கள்.

நூலகத்துக்குள் இந்தியத் தூதுக்குழுவினரின் வருகையை எதிர்பார்த்து இரண்டரை மணிநேரமாக அங்குள்ளவர்களின் காத்திருப்பு நிகழ்வு ஒருவாறு முடிவுக்கு வந்தது.. 'பராக்!! பராக்!!! இந்தியக் குழுவினர்

வருகிறார்கள்' என்று கட்டியம் சொல்லாத குறைதான். அந்தளவுக்கு அதிகாரத் தோரணையோடு மேடையில் ஏறியமர்ந்தார்கள் அவர்கள். அதன்பின் இந்தியக் குழுவுக்குத் தலைமை வகித்து வந்திருந்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரி.ஆர்.பாலு உரையாற்ற எழுந்தார்.

''ரைம் ஷாட்டா இருக்கிறதனால ஸ்ரைட்டா மேட்டருக்கு வாங்க''

(நேரம் குறைவாக இருப்பதால் நேரடியாக விடயத்துக்கு வாருங்கள் என்பதைத் தான் இப்படித் 'தமிழில்' கூறினார்.)

என்று பாலு கூறியதால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிப்பிரச்சினை பற்றியும், பெண்களுக்கு இடஒதுக்கீடு பற்றியும் இப்போதைக்கு அவசரமோ அவசியமோ இல்லாத உப்புச்சப்பற்ற விடயங்களே அதன்பின்னர் அவர்களுக்கு கூறப்பட்டது. நலன்புரிநிலைய மக்களின் பிரச்சினைகள் பற்றி கூறப்பட்டபோது விட்டேத்தித் தனமாக இருந்த இந்தியக் குழுவினர் இத்தகைய சில்லறைப் பிரச்சினைகள் பற்றிக் கூறும்போது மிக அவதானமாக அவற்றைச் செவிமடுத்ததுதான் அன்றைய

பிரச்சினைகளைத் தயங்காமல் கேட்டார்கள்.

''ஒரு ராஜீவ்காந்தியின் உயிருக்குப் பதிலீடாக இன்னும் எத்தனையாயிரம் தமிழ் மக்களைப் பலி கொள்ளப்போகிறீர்கள்?''

'' வடக்கு-கிழக்கு இணைந்த மரபுவழித் தாயகம் தமிழர்களுக்குச் சுயாட்சியுடன் கிடைக்கும் தீர்வே அவசியம். அதற்கு இந்தியா என்ன செய்யப்போகிறது?''

**– ஒளண்யன் –**

''எம்முடைய குடும்பத்தவர்கள் நலன்புரி நிலையங்களில் வாடுகிறார்கள். அவர்களை எம்முடன் சேர்த்துவைக்க உதவுவீர்களா?'' என்று கேள்விக் கணைகள் பல்கலைக் கழகத் தரப்பிலிருந்து இந்தியக் குழுவை நோக்கி ஏவப்பட்டன. அப்போதும் உரிய பதிலேதும் சொல்லாமல் விட்டேத்தித் தனமாக ''எல்லாம் செய்கிறோம்'' என்ற ஒற்றைச் சொல்தான் பதிலாக வந்தது.

**கல்லும் கசிந்துருகும் கண்ணீர்க் கதையின் போது .....**

அத்துடன் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கண்ணீர் விட்டுக் கதறியபடி நலன்புரிநிலையத்திலிருக்கும் தன் குடும்பத்தவர்கள் பற்றி கல்லும் கசிந்துருகும் வண்ணம் விவரித்துக் கொண்டிருக்கும்போது, மேடையில் அமர்ந்திருந்த இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத், வலு 'ஹாயாக' சிகரெட் ஒன்றை ரசித்து ரசித்துப் புகைத்துக்கொண்டிருந்தார். ஒட்டுமொத்தத்தில் இந்தியக் குழுவினரின் யாழ்.விஜயம் எந்தவித அர்த்தப் பெறுமானத்தையும் கொண்டிராமல் பூஜ்ஜியமானதாகவே அமைந்துவிட்டது.

''இலங்கையிலுள்ள எல்லா நலன்புரிநிலையங்களையும் பார்வையிட்டு அங்குள்ள மக்களின் குறைகளை அறியவே இங்கு வந்துள்ளோம்'' என்று நூலகத்தில் மார்தட்டினார் ரி.ஆர்.பாலு. ஆனால் குடாநாட்டிலுள்ள எந்த ஒரு நலன்புரிநிலையத்துக்கும் அவர்கள் செல்லவேயில்லை. இந்தியக் குழுவினர்



என்று கூறி மக்களை நோக்கி அவர்களது பிரச்சினைகளைத் தனக்குக் கூறுமாறு வேண்டினார். அட! மக்கள் பிரச்சினைகளை அறிவதில் பாலு இவ்வளவு ஆர்வம் காட்டுகிறாரே என்று அங்குள்ளவர்கள் அடைந்த ஆச்சரியம், மக்கள் பிரச்சினைகளை அவர் கேட்பதில் காட்டிய அசிரத்தை

பெரும் வேடிக்கை!

நூலகத்தில் நிகழ்ந்த வரவேற்பு நிகழ்வு முடிவடைந்த பின்னர், யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சென்று பல்கலைக்கழக மாணவர்களை-குறிப்பாக நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்கலைக் கழக மாணவர்களை - சந்திப்பதே இந்தியக்

## இன்றைய எரியும் பிரச்சினை பற்றி அறிய வந்தவர்கள் மக்களின் மனஆதங்கத்தை அறிந்துகொள்ள விரும்பவில்லையே!

யால் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடி விட்டது. அங்கு பிரச்சினைகளை எடுத்துரைக்க முற்பட்ட பலரும் நலன்புரிநிலையங்களில் வாடும் மக்களைப் பற்றியும் அவர்களின் விடுவிப்புப் பற்றியுமே அதிகமாகப் பிரஸ்தாபித்தார்கள். மக்கள் எல்லோரும் ஒரே குரலில் இவ்வாறு நலன்புரிநிலைய மக்களைப் பற்றிக் கூறத்தொடங்கியது இந்தியக் குழுவுக்குத் தலைமை வகித்த ரி.ஆர்.பாலுவுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

**எரியும் பிரச்சனை குறித்து கண்டறிய வந்தவர்களின் போக்கு .....**

''இதெல்லாம் நமக்குத் தெரியும். ஒரே விஷயத்தையே எல்லோரும் சொல்லாதீங்க. வேறு ஏதாவது சொல்லுங்க'' என்று கிளிப்பிள்ளைபோல திரும்பத்திரும்ப சற்று அதிகாரத் தொனியில் அங்கு குழுமியிருந்தவர்களை வேண்டினார். இப்போது இலங்கைத் தமிழர்களின் முன்னாலுள்ள மிகப்பெரிய 'எரியும் பிரச்சினை' நலன்புரிநிலையங்களில் வாடும் மக்கள்தான். எனவே அவர்கள் அனைவரும் அதைப் பற்றித்தான் அதிகம் பேசமுடியும். நலன்புரிநிலைய மக்களின் பிரச்சினைகளை அறியத்தான் இந்தியக் குழுவே இலங்கைக்கு வந்திருந்தது- வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அப்படியிருக்கையில் நலன்புரி நிலைய மக்களைப் பற்றி எல்லோரும் கதைப்பதை ரி.ஆர்.பாலு ஏன் விரும்ப வில்லையென்பது புரியவேயில்லை. அத்துடன் அங்கு நிகழ்ந்த கருத்தாடலை வேறொரு திசைநோக்கி நகர்த்தவே அவர் பெரிதும் விரும்பினார்.

அத்துடன் பலர் தமது கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கும்போதே பாலுவால் அதட்டும் தொனியில் அவர்களது கருத்து தொடர்ந்து தெரிவிக்கப்படாது தடுக்கப்பட்டது. வேறு விடயங்களைப் பேசுங்கள்

குழுவினரின் அடுத்த நிகழ்வாக இருந்தது. ஆயினும் 8.30 மணிக்கு வரவேண்டிய இந்தியக் குழுவினர் ஆடியசைந்து 10.30 மணிக்கே வந்ததால் இந்நிகழ்வில் மாற்றம் செய்யப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்து பஸ்வண்டிகள் மூலம் நூலகத்துக்குக் ஏற்றி வரப்பட்டனர். அங்கு ''இந்தியக் குழுவினர் கேட்போர் கூடத்தில் நடக்கும் வரவேற்பு நிகழ்வு முடிந்தபின்னர் வெளியே வரும்போது வீதியில் நீங்கள் அவர்களைச் சந்திக்கலாம்'' என்று மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் பத்துப்பத்து மாணவர்களாக உள்நுழைய அனுமதிக்கப்பட்டனர். இதனால் இந்தியக் குழுவைச் சந்திக்கச் சென்ற பல்கலைக்கழக மாணவர்களில் அரைவாசிப் பேரே உள்நுழைந்து அவர்களைச் சந்திக்க முடிந்தது. அந்தச் சந்திப்பின்போது நலன்புரிநிலையத்திலிருந்து வந்த மாணவர்களைத் தனியே சந்தித்து அவர்களது கருத்துக்களை அறியவோ அல்லது அவர்களுக்கான கல்வி தொடர்பான உதவிகளை வழங்குவது பற்றியோ இந்தியக் குழுவினர் மறந்துபோயும் வாய் திறக்கவில்லை. ஆயினும் பல்கலைக்கழகத்துக்கு வராமல் தம்மை இந்தியக்குழுவினர் அவமதித்து விட்டமையால் மாணவர்கள் தமது

வருவார்கள், தமது குறைகளைக் கேட்பார்கள் என்றெண்ணிக் காத்திருந்த பல நலன்புரிநிலைய மக்கள் இலவுகாத்த கிளிகளாக ஏமாந்து போனதுதான் மிச்சம்.

உல்லாசப் பயணிகள்போல 'வந்தார்கள், சென்றார்கள்' என்ற ரீதியில் இந்தியக்குழு நடந்துகொண்டிருப்பதால் அவர்களின் இலங்கை விஜயத்தின் மூலம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையிலோ நலன்புரிநிலைய மக்களின் பிரச்சினையிலோ எவ்வித செயலூக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களுக்காக கப்பலில்அனுப்பப்பட்ட பொருள்களையே உரிய முறையில் இறக்கி மக்களுக்கு வழங்கச் செய்வதில் கையாலாகாத்தனமாக இருக்கின்றது இந்திய அரசு. அப்படியிருக் கையில் வெறும் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவசரத்தனமான திட்டமிடலற்ற மேம்போக்கான விஜயம் மாற்றத்தைக் கொண்டுவரும் என நம்பினோமானால் மீண்டும் ஏமாறுவதைத் தவிர வேறேதும் நடக்கப்போவதில்லை. ★

### வாசகர் கருத்து

**இந்தக் கடிதம் தங்களுக்குக் கிடைக்கும்பொழுது தமிழ்நாடு நாடாளுமன்றக்குழு பிரமுகர்களின் ஆரவாரம் அடங்கியிருக்கும், இடம் பெயர்ந்தோருக்கான கப்பலில் வந்த பொருள்களை முகாம்களுக்கு வழங்க முடியாமல் போன தமிழ் நாடு அரசு இந்த ஆரவாரம், வைபவங்களால் பயன் எட்டுமா என்பது பெரிய கேள்விக்குறி இதனைப் பொறுத்திருந்து பார்ப்போம். உண்மையாக துன்பப்படும் மக்களின் நலனை பெரிதாகக் கவனித்து செயல்பட வேண்டிய கட்டாயம் மனித சமூகத்தில் உயர்பதவி வகிப்பவரின் தலையாய கடமையாகும். இப்படி வெளி ஆடம்பரங்களில் நாம் ஆசைப்படும் வரை எந்தவொரு விடயத்தையும் இதய சுத்தியாக செய்ய முடியாது. இதுவே உண்மையாகும்.**

பருத்தித்துறை. -சுவாமி சித்ருபானந்தா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகள்
பெற்று சித்தியடைந்த கொக்குவில்
இந்து ஆரம்ப பாடசாலை மாணவி
**செல்வி கேதீஸ்வரன் வைஷ்ணவி**
மேலும் பல சிறப்புக்கள் பெற்று
'வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.'

வாழ்த்துவோர்: சிவரூபி, கவிதா, யோகராஜா, செல்வக்குமார், ஜெயகுமார், தயாபரன்.

தபாலகம், கொக்குவில்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை விவசாயபீடம்

### அறிமுக நிகழ்வு

2008/2009 கல்வியாண்டிற்கான விவசாயபீட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வுகள் எதிர்வரும் 28.10.2009 புதன்கிழமை காலை 9 மணிக்கு விவசாயபீட பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
12.10.2009

(சி/561668)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் காவலாளியாகக் கடமையாற்றும்
திரு.சூ.கிளைப்பிரதீப்
அவர்களின் பாசமிகு துணைவியார்

**சாரதா கிளைப்பிரதீப்**

இறைபதம் எய்திய செய்தியறிந்து மிக்க துயருறுகின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம். (சி/561670)



## வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரியிலிருந்து 1கிலோமீற்றர் தொலைவில் யாழ்.கண்டி வீதியில் நுணாவில் மத்தி வைரவர் கோயில் அருகில்-

நன்னீர்க் கிணற்றுடன் சகல வசதிகளும் அடங்கிய கல் வீடும் இரண்டு பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
(89811) *0774123955, 0776340819*



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் பூபாலு மகேஸ்வரி (பத்தர் ஆச்சி)

தோற்றம் 27*07*1923
மறைவு 13*09*2009

ஆலமரம் வீழ்ந்ததோ
காலன்கை சேர்ந்ததோ
கண்ணீர்க் கடல் மூழ்க
காலமது வந்ததோ
பாசமிகு தெய்வமே
நேசம்மிழந்து வாடுவதோ
ஆசை முகம் தேடி இனி
அன்புடையார் அலைவதுவோ

இன்று 13.10.2009 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
ச.சிவானந்தன் குடும்பம் (கனடா),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல.40,
லோட்டஸ் றோட்,
வண்ணார்பண்ணை.

(சி/561669)



## பிரத்தியேக வகுப்புக்கள்

**English Medium**
Science, English — Grades 10,11
Contact: 077 2487096
(89812)


## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.10

ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இணையத்தளம் ஊடாக வெளியாகியுள்ளன.

இணையத்தளத்தில் பெற்ற முடிவுகளின் பிரகாரம் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த முடிவுகள் சில வருமாறு:-

**சென்.பெனடிக்ற் றோ.க.த.க.**

ஜெ.இன்பன்ஷால்பன் - 167, ப.சங்கவி - 163, ப.அனோஜா - 158, அ.மதுமிதா - 155, ஜெ.மயூரிக்கா - 148, ஸ்ரீ.கரணீதரன் - 144, ஜெ.கனூஸா - 143, இ.கம்சலா - 143, ம.நிலக்ஷிகா - 142.

**நெல்லியடி மெ.மி.த.க.**

இ. சாருஜன் - 163, நே.சிந்துஜன் - 161, த.அபிலாஷ் - 159, தே.செந்தில் குமரன் - 159, சி.நிரோசன் - 155, அ.ஆரணி - 153, ப.சதுர்ஷன் - 151, செ.ஞானானந்தன் - 151, மு.வித்தியா - 151, சி.நீலகானன் - 149, ச.தருணி - 149, தே.வதுஷா - 147, ப.அபிராம் - 146, இ.யதீஷன் - 146, கௌ.ஸ்ரீபாரத்வாஜசர்மா - 145, நா.அபர்ணா - 145, ம.அனுரதா - 144, கீ.கவிதா - 144, க.நிதுஷா - 143, கு.நிவேதன் - 142, கி.இலக்கணன் - 142, த.வதனி - 142, சி.சிந்துஜன் - 141, து.கோணேசன் - 141, ம.தயானி - 141, சி.தர்சி - 141, சி.நிருஷாந் - 140, சு.சுரேகா - 140.

**கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை**

த.லிரோயா - 153, ஆ.காயத்திரி - 145.

**ஏழாலை வடக்கு அ.மி.த.க.**

நி.தேனுசுன்- 154.

**ஏழாலை தெற்கு அ.மி.த.க.**

தி.சகீர்தன்-158, ஸ்.வினோசன்-154, வ.டர்ஷிகா-142.

**கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்**

க.சிவகலை-172, சு.சுபா-163, சி.கஜலக்சன்-152, கு. அனுசன்-145, சி.பிரதீபா -143, இ.ஜதுகுலன் -142, செ.சாரங்கன் -142, இ.தர்சன் -140.

## மரத்தில் இருந்து தவறிவீழ்ந்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

இளநீர் பிடுங்க மரத்தில் ஏறிய எட்டு வயதுச்சிறுவன்தவறி வீழ்ந்ததில் நாரி எலும்பு முறிந்தது.

இச்சம்பவம் கடந்ததிங்கட்கிழமை மட்டுவிலில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நா.கம்ஸன் (வயது - 8) என்னும் பாடசாலை மாணவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(201-207)

## கோடா வைத்திருந்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஒக்.13

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த நபரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நபரை கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(201-207)


IRQUE/QEF
PHYSICAL SCIENCE STUDY PROGRAMME
**SINHALA LANGUAGE LEARNING COURSE**
Faculty of Science

Sinhala classes will be conducted in two groups. The classes will commence on 15/10/2009 at 2.30pm in the physics Lecture Hall (P1) of the Faculty of Science, University of Jaffna for the Group I and in November 2009 for Group II. The list of names of the two groups of students is displayed in the Faculty notice board.

**Director**
**LTS/IRQUE**
**University of Jaffna**
**12.10.2009**

(C/561665)



## மரண அறிவித்தல்

### திருமதி தயாபரி பாலசுப்பிரமணியம்



மருதடி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பா.தயாபரி நேற்று (12.10.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வே.பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் நல்லையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மற்றும் சிதம்பரம் ஆகியோரின் பாசமிகு மருமகளும் கிருபாலினி, பாலச்சந்திரன் (தபாற்கந்தோர், காரைநகர்), அருள்பாலினி ஆகியோரின் பாசமிகு தாயும் திருக்குமாரன் (ஆசிரியர், வட்டு. இந்துக் கல்லூரி) அவர்களின் மாமியும் காலஞ்சென்ற சிதம்பரநாதன் (மின்சார சபை உத்தியோகத்தர், பிரதேசசபை), நகுலநாதன் (பிரதி அதிபர், நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), தாரணி, பூங்குன்றன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணமணி, வசந்தா (ஆசிரியர், கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), அருளானந்தசிவம் (ஆசிரியர், D.S.சேனநாயக்கா வித்தியாலயம்), சங்கமித்திரா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான பார்வதி, தேவமணி மற்றும் தருமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சங்கவி, புரட்சிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (13.10.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் மருதடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
*மருதடி, காரைநகர்.* **கணவர், பிள்ளைகள்.**

(69810)



## மரண அறிவித்தல்

### சிங்கராயர் அலோசியஸ் தர்மராஜா
*(ஓய்வுபெற்ற S.D.W. கச்சேரி, அம்பாறை)*



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராயர் அலோசியஸ் தர்மராஜா நேற்று (12.10.2009) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராயர் - றோசைமுத்து தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - ஞானதிக்கம் தம்பதியரின் மருமகனும் மேரி மெக்றலினின் அன்புக் கணவரும் யூட் அந்தனீஸ், ஆன்றோசாறிறோஸ் (சித்த ஆயுள்வேத கல்லூரி, மாணவி), பற்றிமா ஞானவேஜினி (மூன்றாம் வருட மாணவி கலை, கிழக்குப் பல்கலைக்கழகம்), யோயஸ்ரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செலன் (சென். அன்ரனீஸ் றேடர்ஸ், யாழ்ப்பாணம்) மற்றும் அருட்தந்தை றொபின்சன் ஜோசவ், அருட்சகோதரி விமலினி (AC) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோஸ்தம், ஜோசவ் குணதாசன், வரப்பிரகாசம் மற்றும் நட்சத்திரம், மேரி கிறிஸ்ரீனா, மேரி அஞ்சலீனா, மாசிறிப்போல் (ஓய்வுபெற்ற T.O, வீடமைப்பு அதிகாரசபை, மன்னார்), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாதன், அல்பிறட், அம்புறோஸ், அருளப்பன் மற்றும் அருட்பிரகாசம், வின்சன் (T.A. மூதூர், திருகோணமலை), றீற்றா ஞானலங்காரம், எலிசபெத், றபேக்கா, ஜெபறட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.10.2009) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
*தொ.பே.: 021 2240532*

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்' அனுசரணையுடன் யாழ்.பல்கலையில் பளுதூக்கும் போட்டிகள் கோலாகலம்


யாழ்ப்பாணம்,ஒக்.13

'உதயனின்' அனுசரணையில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகினால் நடத்தப்பட்ட பளுதூக்கும் போட்டி நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெற்ற இப் போட்டியில் பவர் லிப்ரிங் (Power Lifting) கீழ் பென்ச் பிரஸ் (Bench press), ஸ்கொற் பிரஸ் (Scot press), டீப் லிப்ற் (Deep lift) எனும் பிரிவுகளிலும் வெய்ட் லிப்ரிங் இல் ( Weight Lifting), ஸ்நெத் (Sneteh) கிளின் எக்ஸ்ஷெஜ் ( Clean Exchange) என்னும் பிரிவுகளிலும் எட்டு எடைப் பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்டன.

இப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

8எடைப் பிரிவுகளாக போட்டி நடைபெற்றது.



மாலை 5.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் போதனாசிரியர் எம்.இளம்பிறையன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக 'உதயன்','சுடர்ஒளி' பத்திரிக்கைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் பணிப்பாளர் எஸ்.கணேசநாதனும் கௌரவவிருந் தினராக முன்னாள் சம்பியன் பளுதூக்கும் வீரர் பொ.மகா தேவாவும் கலந்து கொண்டனர். (6)

## பொலிகண்டி கிழக்கில் வீடமைப்பு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்க சம்மேளனம் ஆகியவற்றின் பெருளாதார உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாவது அங்குரார்ப்பண விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பொலிகண்டி கிழக்குப் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெகத் அபயசிங்க, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் எஸ்.ஏச்.நிமால்குமார், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க நிதி ஆணைக்குழு தலைவர் பிரசன்ன திஸநாயக்க ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் செஞ்சிலுவைச்சங்க நிதியுதவியுடன் ஐ.நாடுகள் வதிவிட நிறுவனத்தினரின் மேற்பூர்வையில் அமைக்கப்படும் 990 வீட்டுத்திட்டங்களில் இரண்டாவது திட்டத்தில் 590 பயனாளிகளிற்கு பணம் வைப்பிலிடப்பட்ட இலங்கை வங்கி சேமிப்பு கணக்கு ஸ்வப்புப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. (10)

## போட்டியில் சாதனை படைத்தோர்

யாழ்ப்பாணம், ஒக்.17

உதயனின் அனுசரணையில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்திய பளுதூக்கும் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரங்கள் வருமாறு.

**பவர் லிப்ரிங் (POWER LIFTING)**

**56 கிலோ எடைப் பிரிவு**

முதலாம்இடம் - கே. கார்த்திகைதீபன் (325 கி.கி), இரண்டாம் இடம் - எம். துதீஸ்வரன் (305 கி.கி).

மூன்றாம் இடம் - ஜே. ஜீவகன் (272 கி.கி)

**62 கிலோ எடைப் பிரிவு**

1 - ஏ. விதன் (335 கி.கி),
2 - ஜே. பலஸ்கன் (302 கி.கி),
3 - எஸ். கலைச்செல்வன் (300 கி.கி)

**69 கிலோ எடைப் பிரிவு**

1 - என். ஜெயராஜ் (340 கி.கி)
2 - ஜே. குணரூபன் (325 கி.கி)
3 - எஸ். திலகபிரகாஸ் (320 கி.கி)

**77 கிலோ எடைப் பிரிவு**

1 - ஏ. அகிலன் (402 கி.கி)
2 - நி. உதயகுமாரன் (395 கி.கி)
3 - வி. ஆதித்தன் (395 கி.கி)

**85 கிலோ எடைப் பிரிவு**

1 - எஸ். பிரசாத் (370 கி.கி)
2 - எஸ். வசீகரன் (330 கி.கி)
3 - எஸ். நிரூபன் (280 கி.கி)

**94 கிலோ எடைப் பிரிவு**

1 - ஆர். எட்வின் கிங்சநாத் (410 கி.கி)

**105 கிலோ எடை பிரிவு**

1 - யு. ஆனந்தகுமார் (360 கி.கி)
2 - பி. அருட்செல்வன் (325 கி.கி)

**வெய்ட் லிப்ரிங் (WEIGHT LIFTING)**

**56 கிலோ எடை பிரிவு**

1 - பி. அபினேஸ் (120 கி.கி)
2 - கே. கார்த்திகைதீபன் (110 கி.கி)
3 - ஐ.சுதன் (103 கி.கி)

**62 கிலோ எடைப் பிரிவு**

1 - எஸ். கலைச்செல்வன் (127 கி.கி)
2 - என். பால்நந்தன் (126 கி.கி)
3 - ஜே. பலஸ்கன் (108 கி.கி)

**69 கிலோ எடைப் பிரிவு**

1 - எஸ். சுபகஜன் (156 கி.கி)
2 - எஸ். றஜிகுமார் (140 கி.கி)
3 - கே. விஜயராஜ் (135 கி.கி)

**77 கிலோ எடைப் பிரிவு**

1 - எஸ். பிரசாத் (175 கி.கி)
2 - எஸ். சிவசொரூபன் (139 கி.கி)

**85 கிலோ எடைப் பிரிவு**

1 - எஸ். பாஸ்கரன் (141 கி.கி)
2 - எஸ். நிரூபன் (95 கி.கி)
3 - எஸ். ஹரிகரன் (95 கி.கி

**95 கிலோ எடைப் பிரிவு**

1 - எஸ். சிவசுரேந்திரன் (85கி.கி)

**105 கிலோ எடைப் பிரிவு**

1 - பி. அருட்செல்வன் (150 கி.கி)
2 - யு. ஆனந்தகுமார் (130 கி.கி)

(1 - 06)

## குழந்தைகளை வளர்ப்பது எப்படி? பெற்றோருக்கு முதுகலைப் படிப்பு

மதுரை, ஒக். 13

இந்தியாவிலேயே முதன் முறையாக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் குழந்தை வளர்ப்பு குறித்த முதுகலைப் படிப்பு வரும் கல்வியாண்டில் தொலை நிலைக் கல்வியில் அறிமுகப்படுத்தப்படுகிறது - என துணைவேந்தர் கற்பக குமரவேல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வரும் கல்வியாண்டில் முதுகலை பெற்றோர் படிப்பு அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தியாவிலேயே முதல் முறையாக இப்படிப்பு சோதனை அடிப்படையில், முதலில் தமிழ் மொழியில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதைத் தொடர்ந்து ஆங்கிலத்திலும் அறிமுகப்படுத்தப்படும். இப்படிப்பு முதன் முதலில் சீனாவில் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதேபோல், இந்தியாவிலும் குழந்தைகளின் வயதுக்கேற்ப அவர்களை எப்படி கையாளுவது, இளம் வயதுக் குழந்தைகளை எவ்வாறு வழிநடத்துவது என பெற்றோர் கவலைப்படுகின்றனர். அவர்களின் பயத்தை போக்கும் வகையில் இப்படிப்பு இருக்கும்.

2 ஆண்டு காலப் படிப்பில் குழந்தைகளின் வயதுக்கேற்ற மனநிலை, இந்திய கலாசாரத்திற்கேற்ற வகையில் குடும்ப உறவுகளின் நிலை, தற்போதைய கல்வி மாற்றங்கள், பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் வகையில் மேல் நிலைக்கல்வி வாய்ப்புகள், சட்ட ஆலோசனைகள் என்பன குறித்த சட்ட விதிகள் உட்பட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பு குழந்தையை வழிநடத்த தேவையான படிப்பாக பெற்றோருக்கு அமையும் - என்றார்.

## ஈழத்தமிழர் சம உரிமைகள் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### அமைச்சர் வாசன் சொல்கிறார்

சென்னை, ஒக். 13

இலங்கைத் தமிழர்களின் இயல்பு வாழ்க்கை திரும்பவும், அவர்களுக்கு சம உரிமை பெற்றுத் தரவும் மத்திய, மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் - என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கூறினார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு - இலங்கையில் வாழும் தமிழர்களுக்குச் சம உரிமை பெற்றுத் தர மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எம்.பிக்கள் குழு இலங்கைக்குச் சென்றுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் தங்கியுள்ள முகாம்களில் இந்தக் குழு நேரடியாகச் சென்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. முகாம்களில் வாழும் தமிழர்கள் அனைவரும் விரைவில் அவர்களின் இருப்பிடத்திற்குச் செல்ல மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். இலங்கைத் தமிழர்களின் இயல்பு வாழ்க்கை திரும்பவும், அவர்களுக்குச் சம உரிமை பெற்றுக் கொடுக்கவும் மத்திய, மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

## முகாம்களில் வாடும் ஈழத் தமிழர்களை விடுவிக்கக்கோரி சென்னையில் பேரணி

சென்னை, ஒக். 13

இலங்கை முகாம்களில் வாடும் தமிழர்களை விடுவிக்கக் கோரி சென்னையில் நேற்றுமுன்தினம் தமிழினப் பாதுகாப்பு மாநாடு, பேரணி ஆகியன நடைபெற்றன.

இலங்கை முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிக்கக்கோரி சென்னையில் நேற்றுமுன்தினம் தமிழின பாதுகாப்பு மாநாடு மற்றும் பேரணி நடத்தப்பட்டன. முன்னதாக, நேற்றுமுன்தினம் காலையில் சென்னை மன்றோ சிலையில் பேரணி நடைபெற்றது.

பேரணிக்கு கோவை.கு.ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி எம்.ஜி.தேவசகாயம் பேரணியை கொடியசைத்துத் தொடக்கிவைத்தார்.

பேரணியில், 'தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களை மூட வேண்டும்', 'தமிழீழ அகதிகளை சுதந்திரமாக வாழவிட வேண்டும்'. 'தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையைப் பறித்த கச்சதீவு ஒப்பந்தத்தை நீக்கவேண்டும்' போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தமிழகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கானோர் பேரணியில் கலந்து கொண்டனர். சிலர் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவின் படத்திற்குச் செருப்பு மாலை அணிவித்தபடி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். முடிவில், சேப்பாக்கத்தில் பேரணி முடிவடைந்தது. மாலையில் தியாகராய நகரில் மாநாடு நடைபெற்றது.

முன்னதாக பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கொளத்தூர் மணி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தற்காலிக முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 3 லட்சம் தமிழர்களை உடனடியாக விடுவித்து, அவரவர் வீடுகளில் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலைமையைக் கண்டறிய தமிழக எம்.பிக்கள் குழு சென்றுள்ளது. இது அனைத்துக் கட்சி குழு அல்ல. ஆளுங்கட்சியினர் குழு ஆகும். இவர்களால் இலங்கையில் தமிழர்கள் படும் வேதனையை உண்மை செய்தியாக வெளியிட முடியாது - என்றார்.

## இந்தியக் குழு இலங்கையிலுள்ளபோது மீனவர் மீது தாக்கு; வருத்தமளிக்கிறது!

### மீனவர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஒக். 13

இந்திய எம்.பிக்கள் குழு இலங்கை சென்றுள்ள நிலையில், அந்நாட்டுக் கடற்படை, தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வருத்தமளிக்கிறது. இப்பிரச்சினைக்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். இவ்வாறு மீனவர் சங்கத் தலைவர் போஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று கச்சதீவுக் கடல் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை மீண்டும் இலங்கைக் கடற்படையினர் தாக்கி, வலைகளை அறுத்து சேதப்படுத்தினர். இதில் ஒரு மீனவர் படுகாயமடைந்தார்.

மேலும், மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தி, மீன்களையும் பறித்துக் கொண்டனர். அதேபோல், அப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மண்டபம் பகுதி மீனவர் களின் 3 படகுகளையும் சுற்றிவளைத்துத் தாக்கினர்.

இச்சம்பவம் இராமேஸ்வரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மீனவர் சங்கத் தலைவர் போஸ் கூறுகையில், இந்திய எம்.பிக்கள் குழு இலங்கை சென்றுள்ள நிலையில், அந்நாட்டு கடற்படை நமது மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வருத்தமளிக்கிறது. இப்பிரச்சினைக்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
## தரம் - 6 அனுமதி

தரம் - 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 10.11.2009

(89828) அதிபர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் 2009 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்றதையும் மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் வாசிப்பில் 3 ஆம் இடமும் பெற்றமைக்கும் சுன்னாகத்தைச் சேர்ந்த பிரதீபன் - நிகிதா தம்பதியினரின் செல்வப் புதல்வி

**பி.கஜீபா**

அவர்களை பல்கலையும் பெற்று பல் லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். குடும்பத்தினரும், நண்பர்களும்.

(89829)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்று 2009 தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த எமது அன்புக்கும் பாசத்திற்கும் உரிய மருமகள்

**துளசிதாசன் கேசிகா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் எதிர்காலத்தில் சகல துறைகளிலும் மிளிரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாமா-வை.சங்கர்ராஜ்
அத்தை-விஜயா, அப்பம்மா, திரு.திருமதி செல்வராசா குடும்பம்.
பெற்றோல் செற்றடி, பலாலி வீதி, உரும்பிராய்.

(89813)

## தீபாவளிச் சலுகை

தீபாவளித் திருநாளை முன்னிட்டு வியாபார நிறுவனங்களுக்கான பெயர்ப்பலகைகள், பனர், ஸ்ரிக்கர் போன்றவற்றைக் குறைந்த விலையில் பிரதியாக்கம் செய்துகொள்ள முடியும்.

ஒரு சதுர அடி 70/- மட்டுமே
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,
யாழ்ப்பாணம்.

(சி/561672)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 5 மாணவி

**சுபானா தவராஜன்**

2009ஆம் ஆண்டு நடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவரை வாழ்த்துவதுடன் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஸ்ரீதரன் ஆசிரியருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: கி.கேதீஸ்வரன் (மாமா)
செ.தவராஜன் (ராசன்)
சுந்தர்மடம், யாழ்ப்பாணம்.
8ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

(89817)

## 25 ஆம் பிறந்தநாள் நினைவலைகள்



தோற்றம் 13.10.1984
மறைவு 22.06.2009

**மகேந்திரன் சசீந்திரன்**

இத்தினத்தில் தானே இங்கேயோர்
அழகு மலர் மலர்ந்தது
சித்தமது குளிர வைக்க வாழ்வில்
செஞ்சுடராய் புலர்ந்தது
எத்தனை கனவுகள் எங்கள்
- இதயமதில் வளர்ந்தது.
அத்தனையும் கொடியோர் செய்த
அதர்மத்தால் தகர்ந்தது
உத்தமனே சசீந்திரனே கேளாய்
இவ்வுலகில் நாம் வாழும் வரை
உன்நினைவு எமை வாட்டுமடா

தகவல் :
31, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 13

''இளைஞர்களுக்கான நாளை'' உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற வுள்ள ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

(1-23)

## சங்கானையில் வீதிச்சோதனையில் பொலிஸார் தீவிரம்

சங்கானை, ஒக். 13

மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட திடீர் வீதிச் சோதனையில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் வாகனோட்டிகள், தலைக்கவசம், அனுமதிப்பத் திரம், காப்புறுதிப்பத்திரம் இன்றிப் பயணஞ் செய்ததால் அகப்பட்டு, தண்டம் அறவிடப் பட்டது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 6 மணி வரை இச் சோதனை நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

தொட்டிலடிச் சந்தி, மல்லாகம் சந்தி, சங்கானை பிரதான வீதிகள் என பல இடங்களிலும் சுமார் 25 க்கும் மேற்பட்ட பொலிஸாரும், மோட்டார் சைக்கிள் போக்குவரத்துப் பொலிஸாரும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

(1-29)

## ஆசிரியர் ஒத்துமாறல்

மேல் மாகாணத்தில் பிரபல்யமான பாடசாலையில் நடன பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர் யாழ்.மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு:- T.P.No:0776030586, 0774053995

## விற்பனைக்குண்டு

சிசில் (R80) ரக - குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு: சு.சிவநேசன்
இல.5, அன்னசத்திர லேன், நந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

செல்வநாதன் தமயந்தி என்பவரது தே.அ.அட்டையும் (847382791V), தங்கச் சங்கிலியும் பேர்ஸுடன் தெல்லிப்பழைக்கும் இணுவிலுக்கும் இடையில் கடந்த 09.10.2009 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

★ CCA கல்வி நிறுவனம், சுன்னாகம்.
★ கிருஷ்ணா நர்சு தொழில்கள், 4 ஆம் கட்டை, இணுவில்.

தொ.பே.இல.: 021 321 5060, 021 321 6831

## தவறிவிட்டது

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக 258, பருத்தித்துறை வீதியில் வசிக்கும் சபாரத்தினம் கனகசபாபதியின் (தே.அ.அ.இல.303160094V) நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 05.10.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்தில் அல்லது சிற்றி ரெக்ஸ் பிடவை நிலையத்தில் ஒப்படைத்துதவவும். T.P.: 021 222 9093

## Room வாடகைக்குக் கொடுக்கப்படும்

A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு Room வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0772823016

(89815)

## அறிவித்தல்

தரமானதும் நவீன வடிவமைப்புகளுடன் கூடிய வீட்டுத் தளபாடத் தயாரிப்பாளரும், மிகவும் நவீன முறையில் வீடுகள், இல்லங்களை கொழும்பு நகரில் அமைத்து வருபவருமான திரு.தர்ஷன் ஜோன் அவர்களைச் சந்திக்க விரும்பும் யாழ். மாவட்ட தளபாட விநியோகஸ்தர்களும், வீடுகளையும், கட்டடங்களையும் அமைக்க விரும்புபவர்களும் இன்று 13.10.2009 தொடக்கம் 17.10.2009 வரை நேரில் சந்தித்து விவரங்களைப் பெறலாம்.

தொடர்பு : 0777729780

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் முன்னாள் அபிவிருத்திச் சங்க செயலாளரும், பாடசாலையின் வளர்ச்சியிலும் நலனிலும் அக்கறையுடையவருமாகிய

**அமரர் சிவசிதம்பரம் சிவானந்தர்**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு துயருறும் அவரது குடும்பத்தார் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

பாடசாலைச்சமூகம், யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

(89824)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா**

13.10.2009

மௌனம் கலையுமம்மா !
மழலைமொழி பேசுமம்மா !

முற்றத்து மல்லிகையே!
முகை அவிழ்ந்த புன்னகையே!
நெஞ்சத்தில் நீந்துகின்ற
நினைவகலாத் தாமரையே!

எங்கள் வானத்தில்
என்றும் நீ இளம்பிறையே!
எங்கள் நெஞ்சத்தில்
என்றும் நீ வளர்பிறையே!

என்றும் உமை நாம் மறவோம்
எங்கள் திருமகளே!
எழுபிறப்பும் நீர் எங்கள்
இல்லத்தில் முதல்மகளே!

காலங்கள் போகுதம்மா
கனவுகளும் கலையுதம்மா
கண்ணீர்த் துளிமட்டும்
காய்வதற்கு மறுக்குதம்மா!

(சி/561258) துயர்மிகும் குடும்பத்தார்

## மரண அறிவித்தல்

### திருமதி குமரையா அன்னம்மா



தனங்கிளப்பைச் சேர்ந்தவரும் நுணாவில் மத்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமரையா அன்னம்மா நேற்று (12.10.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு குமரையாவின் அன்பு மனைவியும் தவமணி, தங்கரத்தினம், காலஞ்சென்ற வேல்முருகு மற்றும் செல்வநாயகம், இராசபூபதி, சிவானந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஆசிரியர் அ.தம்பிமுத்து மற்றும் ந.வல்லிபுரநாதன், காலஞ்சென்ற வே.சரஸ்வதி மற்றும் செ.ஜெயராணி, ச.அமிர்தலிங்கம், சி.சுஜாதினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.10.2009) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நுணாவில், கொல்லங்கிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (சி/561675) தகவல்: ந.வல்லிபுரநாதன் (மருமகன்).


## தீபாவளிக் கொண்டாட்டத்துக்கான உங்களது சரியான தேர்வு

சகல கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் ... P.G. பிராக்கள் மற்றும் உள்ளாடைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிளில் பின்னாலிருந்து பயணிப்பவர் தலைக்கவசம் அணிய வேண்டும்

## இல்லையேல் அபராதம் விதிக்கப்படும் என்கிறார் பொலிஸ் அதிகாரி

குருநகர் ஒக். 13

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களும் அவருக்குப் பின்னால் இருக்கையில் இருந்து ஒன்றாகப் பயணிப்பவரும் அவசியம் தலைக்கவசம் அணிந்திருக்க வேண்டும். அணியத் தவறின் அபராதம் விதிக்கப்படும் இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.வீதி ரோந்து பொலிஸ் ஆர்.எச்.எம்.என்.ராஜகருணா.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மற்றும் வைத்திய சாலைகளில் சேவையாற்றும் சாரதிகளுக்கு ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் 'வீதி ஒழுங்குகள்' தொடர்பாக விளக்கமளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்பயிற்சிக் கருத்தரங்கு கடந்த 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொடர்ந்து கருத்துரை வழங்கும் போது மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் கடமைக்கு வந்து ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. இருபது வருடகால பொலிஸ் சேவையில் வீதி ரோந்துப் பிரிவில் 13 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளேன். மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் தலைக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும். தலைக்கவசம் அணியாமல் செல்வதனால் விபத்து ஏற்படும் போது தலைப்பகுதி காயத்துக்குள்ளாகி மூளையில் பாதிப்பு ஏற்படலாம். விபத்து எங்கு எப்போது ஏற்படும் எனச் சொல்ல முடியாது.

இலங்கையில் தற்போது பாவனையில் உள்ள 'ஹீரோ கொண்டா', 'பஜாஜ்' ஆகிய மோட்டார் சைக்கிளின் வேகம் காரணமாக அதிக விபத்துக்கள் உருவாகி வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன. எனவே மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் விபத்து உருவாகாமல் தவிர்ப்பதற்கு தலைக்கவசம் அணிவதுடன் நிற்காமல் குறைந்த வேகத்தில் செலுத்த வேண்டியது அவசியம்.

இலங்கையில் பலபாகங்களிலும் நான் அவதானித்தபோது வடக்கு ,கிழக்கு மாகாணத்தில் மட்டுமே மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் இருந்து செல்லும் பெண்கள் ஒரு பக்கத்தில் தமது கால்களை வைத்து அமர்ந்து செல்கிறார்கள் இது அவர்களது பாதுகாப்புக்கு குந்தகமானது. இருபக்கமும் கால் போட்டு இருந்து பயணிக்க அவர்கள் பழகிக்கொள்ள வேண்டும். - என்றார். (1-51)

## 'ருபெல்லா' தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடைநிறுத்தம்

குருநகர் ஒக்.13

யாழ்ப்பாணத்தில் 'ருபெல்லா' தடுப்பூசி ஏற்றுவதை உடனடியாக இடைநிறுத்துமாறு யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும், யாழ். பாடசாலை வைத்திய அதிகாரிக்கும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் நேற்று அவசர பணிப்புரை அனுப்பி வைத்துள்ளார். (1-51)

## கல்வியியற் கல்லூரி நேர்முகத் தேர்வுக்கு 10 மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம், ஒக்.13

கல்வியியற் கல்லூரியில் இருந்து சித்தி பெற்றவர்களில் பத்துப்பேர் நேர்முகத் தேர்விற்குத் தோற்றுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பக்கல்வி, ஆங்கிலம் கற்கைநெறிகளைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த) சான்றிதழ்கள், கல்வியியற் கல்லூரியின் இறுதிப் பரீட்சைச் சான்றிதழ், பிரதேச செயலரிடம் இருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழ், இரு நற்சான்றிதழ்கள் என்பவற்றின் மூலப் பிரதிகள், போட்டோப் பிரதிகள் என்பவற்றுடன் 13 ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, வடமாகாணக் கல்வி அமைச்சு ஆகிய இடங்களில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

**ஆரம்பக்கல்வி**

கு.மைதிலி (சரசாலை), கா.ஸ்ரீதேவி (கரவெட்டி), குயின் நிர்மலி ஜேம்ஸ் மிராண்டா (மன்னார்), நா.சிவரஞ்சினி (கரவெட்டி), அ.நளாயினி (யாழ்ப்பாணம்), கோ.கோமதி (கரவெட்டி) -

**ஆங்கிலம்**

ந.அருள்வாகினி (யாழ்ப்பாணம்), சி.நளாயினி (யாழ்ப்பாணம்), அப்துல் குததூஸ் மகுறூஸ் (கிண்ணியா), பாத்திமா ரஸ்மி ரஸாத் (விஜிதபுர). (1-10)

## பூஸா தடுப்பு முகாமில் சித்திரவதை; தமிழ் யுவதி உரிமை மீறல் வழக்கு

கொழும்பு, ஒக். 13

சட்டவிரோதமான முறையில் தாம் கைது செய்யப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்திலும் பூஸா தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுப் பொலிஸாரல் கடுமையாகத் தாக்கப்பட்டு, உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் எனத் தெரிவித்து இளம் தமிழ்ப் பெண் ஒருவர் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாணம், கோப்பாயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்ஸிஸ் அனிமேரி என்ற 25 வயது இளம் பெண் தொடர்பாக அவரது சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவில் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம், பூஸா தடுப்பு முகாம் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குவைத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காகத் தமது மாமியார் மற்றும் தம்பியாருடன் 2008 நவம்பர் 7ஆம் திகதி கொழும்புக்கு வந்து, கொட்டாஞ்சேனை சங்கமித்த மாவத்தையில் தாம் தங்கியிருந்த சமயம், 2008 டிசெம்பர் 20 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார் என மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

2008 டிசெம்பர் 20 ஆம் திகதி முதல் 2009 ஜனவரி முதலாம் திகதிவரை கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்திலும் -

2009 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை பூஸா முகாமிலும் -

தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் தாம் தாக்கப்பட்டார் என்றும், சிங்களத்தில் அமைந்த சில ஆவணங்களில் பலவந்தமாகத் தமது ஒப்பம் பெறப்பட்டது என்றும், தாம் உடல், உள ரீதியாகத் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும், மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் தாம் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டு, சட்ட முறையற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமைக்கும், தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமைக்கும் நஷ்டஈடாகப் பத்து லட்சம் ரூபா வழங்கித் தம்மை விடுவிக்குமாறு அரசுக்கு உத்தரவிடும்படி அவர் தமது மனுவில் மேலும் கேட்டுள்ளார். (அ-சி)

## தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர் துப்பாக்கிப் பிரயோகம்; மூவர் படுகாயம்

### அம்பாந்தோட்டையில் சம்பவம்

நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கூட்டணியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த வேட்பாளர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றுள்ளது. தேர்தலில் போட்டியிட்ட மற்றுமொரு கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் தோல்வியடைந்த வேட்பாளரின் வீட்டுக்கு முன்னால் சென்று ஆடிப்பாடிக் கேலி செய்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அவர், துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார் என்று கூறப்பட்டது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட்ட நபரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அம்பாந்தோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விமல்வீரவன்ஸ கட்சியின் வேட்பாளர்கள் படுதோல்வி!

கொழும்பு, ஒக்.13

நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி வேட்பாளர்கள் படுதோல்வியடைந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட விமல் விரவன்ஸவின் சகோதரரான சரத் வீரவன்ஸ 20 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுப் படுதோல்வியடைந்துள்ளார்.அதேபோல் காலி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் போட்டியிட்ட தேசிய சுதந்திர முன்னணியினர் சகலரும் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

கடந்த காலம் முழுவதும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ, எதிர்க்கட்சியினருக்குச் சேறுபூசும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

தென்மாகாணத்தில் வீரவன்ஸ நிறுத்திய வேட்பாளர்கள் தோல்வியடைந்துள்ளமையானது சிங்களத் தேசியவாதத்துடன் இனவாதத்தைக் கக்கி வந்த வீரவன் ஸவுக்குப் பாரிய பின்னடைவாகவே கருதப்படுகிறது.

## சாவகச்சேரியில் போக்குவரத்து விழிப்புணர்வுச் செய்முறை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தொடர்பான விழிப்புணர்வுச் செய்முறைகளை நடத்தினர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பகல் 11 மணிவரை பல தடவைகள் வீதி விபத்துக்களை தவிர்ப்பது தொடர்பான செய்முறைகளை பொது மக்களுக்கு விளக்கினர்.

பாதசாரிகள், மிதிவண்டியில் செல்வோர், மோட்டார் சைக்கிளில் செல்வோர் ஆகியோருக்குவிழிப்புணர்வுசெய்முறைமூலம் காண்பித்தனர். (1-207)

---

## அரசுக்கு எதிர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது. அரசு எதிர்பார்த்த வெற்றியை அத்தேர்தலில் பெறவில்லை.

அரசு யுத்த வெற்றியைத் தெற்கில் தான் அதிகம் விற்றது. அதனூடாகவே அரசியல் செய்தது. 90 வீத வெற்றியை இத்தேர்தலில் அரசு எதிர்பார்த்தது. ஆனால், தென் மாகாண மக்களிடம் அது எடுபடவில்லை.

ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியால் மக்கள் அதிருப்தியுற்றுள்ளனர். மஹிந்தவின் குடும்பத்தைத் தவிர, இந்நாட்டு மக்கள் எவரும் நன்மையடைந்ததில்லை. மக்கள் அனுபவிக்கவேண்டிய அனைத்துச் சலுகைகளையும் ராஜபக்ஷவின் குடும்பத்தினர்தான் அனுபவிக்கின்றனர். இதனால், இம்மக்கள் இந்த ஆட்சியை வெறுக்கத் தொடங்கியுள்ளனர்.

மக்கள் மாத்திரமன்றி அமைச்சர்களும் அந்தக் குடும்ப ஆட்சியால் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்கள் எம்மால் அமைக்கப்படவுள்ள பொதுக்கூட்டமைப்பில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பான பேச்சுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சுமார் 24 அமைச்சர்கள் எமது கூட்டமைப்புடன் இணைவர். அதனைத் தொடர்ந்து மேலும் பல அமைச்சர்களும் எம்முடன் இணைவர்.

உண்மையில் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுடன் இந்த அரசின் அழிவு ஆரம்பமாகிவிட்டது. இந்நாட்டு மக்கள் எதிர்வரும் தேர்தல்களில் நிச்சயம் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி உண்மையான ஜனநாயக [illegible] என்றார். (அ-சி)

## முகாமிலிருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படுகின்றது. குளிப்பதற்கும் ஏனைய பாவனைகளுக்குமாக ஐந்து நாள் களுக்கு ஒரு முறை மாத்திரமே தண்ணீர் வழங்கப்படுகின்றது என முகாமில் உள்ள மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முகாமுக்கு நீர் விநியோகம் செய்வதற்கு உதவியாக இருந்த ஆறு வற்றிவிட்டது. மேலும் அரசு அரிசியை மாத்திரம் வழங்குகின்றது. ஏனைய அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

பருவப்பெயர்ச்சி மழை காலத்தில், ஏற்கனவே மோசமான நிலையில் உள்ள முகாம்களில் சுகாதார கட்டமைப்பு மேலும் சிதைவடையலாம். இதன் காரணமாக நோய்கள் தோன்றலாம் என முகாமில் உள்ள மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மெனிக் பாம் முகாமில் உள்ள மக்களில் பலர் கண்ணீர் விட்டழுதனர். கூடிய விரைவில் தங்களை விடுவிக்குமாறு [illegible] முகாமிற்கு விஜயம் மேற்கொண்ட தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக் கின்றார்.

முகாமுக்கு நீங்கள் விஜயம் மேற்கொண்டமை குறித்து மகிழ்ச்சி. தயவு செய்து எங்களை வெளியில் எடுங்கள் - என்ற வேண்டுகோளே தொடர்ச்சியாக ஒலித்ததாக அந்த நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் சொன்னார். (அ-சி)

## தமிழக எம்....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரம் நேற்று தெரிவித்தது.

இச்சந்திப்பின்போது மனோகணேசன் எம்.பி. உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொள்வர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

அகதிகளின் தற்போதைய நிலைமை, அவர்கள் அவசரமாக மீள்குடியமர்த்தப்பட வேண்டியதன் தேவை உள்ளிட்ட பல விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர், தமிழக எம்.பிக்கள் குழுவுக்கு விரிவாக எடுத்துரைப்பர் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 18உறுப்பினர்களும் சுயேட்சை உறுப்பினரும் ஜனாதிபதி முன் நேற்று சத்தியப்பிரமாணம் செய்யும் போது எடுக்கப்பட்ட படம். நிகழ்வில் கலந்துகொண்ட மதகுருமார் முதலாவது வரிசையில் காணப்படுகின்றனர்.

## கொழும்பில் நேற்று 3 தமிழர்கள் கைது

கொழும்பு மட்டக்குளி, கெட்டியாவத்தை ஆகிய பிரதேசங்களில் நேற்றுக் காலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்குளியில் இடம்பெற்ற வீதி சோதனை நடவடிக்கையின்போது இரண்டு இளைஞர்களும், கெட்டியாவத்தை சந்தியில் ஒரு இளைஞரும் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்குளியவில் இருந்து கல்கிஸை நோக்கி சென்று கொண்டிருந்த 155 இலக்கமுடைய பஸ்ஸில் சென்ற பயணிகள் அனைவரும் கெட்டியாவத்தை சந்தியில் வழி மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். அதன்போதே இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக கெட்டியாவத்தை சந்தியில் பொலிஸாரும் படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்மை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி மீதான இந்தியாவின் நம்பிக்கையை தமிழக எம்.பிக்களின் வருகை பிரதிபலிக்கிறது

### அமைச்சர் ரோஹித கூறுகிறார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதான இந்தியாவின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழக நாடாளுமன்றக் குழுவினரின் வருகை அமைந்துள்ளது - என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இலங்கை அரசின் உள்ளூர் மற்றும் வெளியுறவுக் கொள்கை வெளிப்படையாக உள்ளதை சர்வதேச சமூகம் பாராட்டி வருகிறது.

எனவே, சர்வதேச இராணுவ நீதிமன்றிலோ அல்லது விசாரணைக் குழு முன்போ இலங்கைத் தலைவர்களை நிறுத்து வதோ அல்லது இராணுவத்தினரை நிறுத்துவதோ இயலாத காரியமாகும்.

இதுதொடர்பான எந்தச் சட்ட ஒப்பந்தத்திலும் இலங்கை கையெழுத்திடவில்லை. 2002ஆம் ஆண்டு இதுபோன்ற ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் வாய்ப்பு இலங்கைக்குக் கிடைத்தது. ஆனால் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதில் கையெழுத்திட மறுத்துவிட்டார்.

ஆனால் அப்படி ஒன்று நடந்திருந்தால் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரை சர்வதேச சமுதாயத்தின் முன்பு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருக்க முடியும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க இப்போது, இராணுவ நீதிமன்றில் இலங்கைத் தலைவர்களை நிறுத்த வேண்டும் என்கிறார். இப்படிக் கூறியுள்ளதன் மூலம்,நமது படையினரை அவர் அவமதித்து விட்டார்.

கடந்த எட்டு தேர்தல்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து வெற்றி பெற்று வந்திருக்கிறார். இதன் மூலம் அவர் போகும் பாதை சரியானதே என்பது நிரூபணமாகியுள்ளது.அவரது நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரித்து வருகின்றனர். இது தென் மாகாணத் தேர்தல் முடிவிலும் எதிரொலித்துள்ளது'' - என்றார்.

## சிறுவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதில் புதிய நடைமுறை நேற்றுமுதல் அறிமுகம்

கொழும்பு, ஒக்.13

தாய், தந்தை இருவரது இணக்கப் பாட்டின் பின்பே சிறுவர்களுக்குக் கடவுச்சீட்டு வழங்கப்படும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை நேற்று முதல் அமுலில் இருக்கும் எனவும் அறிவித்துள்ளது.

புதிய சட்ட விதிகளுக்கு அமைவாக 16 வயதுக்கு உட்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் அவர்களது பெற்றோரின் இணக்கப்பாட்டுக்குப் பின்பே கடவுச்சீட்டு வழங்கப்படும் என திணைக்களத்தின் அதிகாரி ரி.பி.அபயகோன் தெரிவித்தார்.

பெற்றோர் விவாகரத்துப் பெற்றிருப்பின் அல்லது சட்ட விதிகளுக்கு அமைய பிரிந்திருப்பின் நீதிமன்ற உத்தரவு அல்லது சட்ட ஆவணங்கள் பெற்றோர் சார்பாக சமர்ப்பிக்கப்படின் கடவுச்சீட்டு வழங்கப்படும். இப்புதிய விதிமுறை சிறுவர்கள் அவர்களது பெற்றோர்களால் கடத்தப்படுவதைக் குறைப்பதற்காகவே அமுல்படுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வடக்கு மாகாண சபைக்கும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தமிழில் யாழ்ப்பாணப் பிரஜைகளுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

யாழ்.மாநகரசபை மேயர், பிரதிமேயர், 10 உறுப்பினர்கள் ஆகியோர் பதவியேற்ற பின்னர் யாழ்ப்பாணப் பிரஜைகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த நூறு பேர் இக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பல்வேறு அமைப்புக்கள் வழங்கிய மகஜர்களையும் ஜனாதிபதி பெற்றுக் கொண்டார். நேற்றைய நிகழ்வில் பேசுகையில்ஜனாதிபதிமேலும் கூறியதாவது:

யாழ்.மாநகரசபை, வவுனியா நகரசபை ஆகியவற்றுக்குத் தேர்தல் நடத்தி அந்தப் பிரதேச மக்களுக்குத் தேவையான பணிகளை முன்னெடுக்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக அமைப்பிடம் கையளித்துள்ளோம். அதேபோன்று வடக்கு மாகாண சபைக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடத்த விருக்கின்றோம். அந்தத் தேர்தல்கள் மக்களே நிர்வாகத்தை மேற்கொள்ள வசதிகிட்டும்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ளவர்களை விரைவாக மீளக்குடியமர்த்த ஏற்பாடு செய்துவருகின்றோம்.

மக்களை மீளக்குடியமர்த்துவதைத் தாமதப்படுத்துவதாக உலகநாடுகள் சத்தம் போடுகின்றன. எம் மீது குற்றம் சுமத்துகின்றன.

அங்கு மக்களை மீளக்குடியமர்த்த முன்பாக கண்ணிவெடிகளை அகற்ற உதவுவதற்கு உலகநாடுகள் தயாராக இல்லை. எனினும் கண்ணிவெடி இயந்திரங்களைக் கொள்வனவுசெய்து விரைவாகக் கண்ணிவெடிகளை அகற்றி வருகின்றோம் - என்றார் ஜனாதிபதி.

(அ-1-86)

## அபிவிருத்திப் பணியில் இணைக

### வெளிநாடு வாழ் இலங்கையருக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு,ஒக்.13

இலங்கையில் தற்போது மோதல்கள் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியில் இணையுமாறு வெளிநாடுகளில் வாழும் இலங்கையருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் வதியும் இலங்கையரின் தொழில் நுட்ப அறிவு, தொழில் முயற்சித் திறன் மற்றும் நிதிப் பங்களிப்பை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத் துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் தாய் நாட்டுக்குத் திரும்பி தற்போதைய நிலைமைகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கண்டறியுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அபிவிருத்திச் செயற்பாட்டில், தமக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய துறையை அடையாளங்கண்டு அத்துடன் இணைந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான விசேட செயற்றிட்டமொன்று ஜனாதிபதி தலைமையில் நவம்பர் மாதம் 14ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது - என்றுள்ளது.

## தீவகத்துக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்டனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த 21 குடும்பங்களைச் சேர்ந்த 86 பேரும் வேலணையைச் சேர்ந்த 91 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேரும் காரைநகரைச் சேர்ந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேரும் ஊற்காவற்றுறையைச் சேர்ந்த 43 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேரும் நேற்று அழைத்து வரப்படிருந்தனர். (01)




## யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்தவை வருமாறு:-

எமது சகோதர இனமான முஸ்லிம் மக் கள் 1990ஆம் ஆண்டு முதல் புத்தளம், சிலாபம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். இருப் பினும் கடந்த யாழ். மாநகர சபைத் தேர்த லில் தமது பங்களிப்பை அவர்கள் வழங்கியிருந்தனர்.

இதனால், உதவி மேயர் பதவியை தங்களுக்குத் தருமாறு கேட்டுக்கொண்டனர். இந்நிலையில் பதவியேற்பு வைபவம் காலதாமதமானது. அதன் பின்னர் நடத்தப்பட்ட பல்வேறு கலந்துரையாடல்களின் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பேரில் ஒரு வருடத்திற்குப் பின்னர் அவர்களுக்கு உதவி மேயர் பதவி வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் ஒன்று நாங்கள் போட்டியிட்ட ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த முன்னிலையில் கைச்சாத்தாகியுள்ளது. இதன் காரணமாகவே பதவியேற்பு வைபவம் கால தாமதமானது - என்றார்.

இப்பதவியேற்பு வைபவத்தின்பின்னர் வட மாகாணத்திலிருந்து அழைத்து வரப்பட்ட புத்திஜீவிகள் நூறு பேரும் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினர்.

(அ-சி)

## விடுதலைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி, அதன் பின்னர் இராணுவத்தினர் மத்தியில் அவர் உரை நிகழ்த்தினார். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''பல்வேறு உயர் மட்டத்திலான அடைவுகளை சந்தித்தவனாக இராணுவ சேவைக்கான அர்ப்பணிப்புமிக்க எனது கடமைப்பாட்டை சரிவர நிறைவுசெய்துள்ளேன்.

இந்நிலையில் இராணுவ அணிவகுப்பை ஏற்று இத்தகைய தொரு நிகழ்வில் உரையாற்றுவது இதுவே எனது இறுதி சந்தர்ப்பமாக இருக்கலாம்'' - என்று அவர் தெரிவித்தார்.

வாங்கி விட்டீர்களா?
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
கற்சுமி வெளியீடு
நாவலர் வீதி, யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org